Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර්


ஏப். 20 - 26, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 658



## அமைதிக்குத் தேவை அரசு – புலிகள் விட்டுக் கொடுப்பு!



## 'ஆச்சே' பிரச்சினைத் தீர்விலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை!



## வில்லியம் ஷேக்ஸ்பியர் வியக்க வைக்கிறார்

## பூலான் தேவியின் மறுபக்கம்

அசத்தல் தொடர்

## கோடம்பாக்கத்தில் கோழிக் காய்ச்சல்!

-சினிமா


சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## துளசி

உலகளந்த பெருமானாகிய ஸ்ரீமத் நாராயணனுக்கு மிகவும் உகந்தது துளசி. இந்தத் துளசியானது நமது உடலில் தோன்றும் பல நோய்களுக்கு மருந்தாக விளங்குகின்றது. நமது முன்னோர்கள் அதன் அருமை பெருமைகளை நன்கறிந்தவர்கள். துளசிச் செடி வீட்டிலிருப்பதால், அதனை வழிபாடு செய்வதால் நமது உடலுக்கும், மனதுக்கும் ஆரோக்கியம் கிடைக்கிறது என்பது ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்த உண்மை. திருமாலுக்குப் பிரியமான துளசிச் செடியை வளர்ப்பதாலும் அதனைப் பூஜிப்பதாலும், துளசி என்ற திருநாமத்தை அன்புடனே சொல்வதாலும் எல்லாவிதமான செல்வச் செழிப்பும், மன அமைதியும், லஷ்மி நாராயணன் திருவருளால் பெருகும் என்பதில் சந்தேகமில்லை.

-பொலிகை மறவன், திருகோணமலை.

## ஆன்மீகம்



### ஆண்டவரில் தளரா நம்பிக்கை வையுங்கள்

ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்துள்ளோர் சீயோன் மலைபோல் என்றும் அசையாதிருப்பர். "எருசலேமைச் சுற்றிலும் மலைகள் இருப்பதுபோல ஆண்டவர் இப்போதும் எப்போதும் தம் மக்களைச் சுற்றிலும் இருப்பார்." (திருபாடல் 125:1-2). உலகிலுள்ள அனைத்துப் பொருட்களுமே இறைவனால் உருவாக்கப்பட்டவை. படைக்கப்பட்ட பொருட்களின் விதங்கள் பலவிதம். ஆச்சரியமானவை.

பல விதமான அழகான ரோசா மலர்களை நாம் கண்டு இரசிப்பது மட்டுமல்ல, அதன் வாசனையையும் நுகர்கின்றோம் அல்லவா?

ஆனால் மற்ற மலர்ச் செடிகளைக் கைகளால் பிடிப்பது போன்று, ரோசாச் செடியைப் பிடிக்க முடியாது. ஏன்? ரோசாச் செடி முட்கள் நிறைந்தது. கைகளில் குத்தி இரத்தமும் வந்து விடும். இந்த ரோசா மலர்களுக்கு இறைவன் எப்படிப் பாதுகாப்பளித்துள்ளார் பார்த்தீர்களா?

சாத்தானின் சோதனைகளில் நாம் சிக்கி, எம் உள்ளங்களில் இரத்த ஆறு ஓடாதிருக்கவே "ஆண்டவர் மீது நம்பிக்கை வையுங்கள்! சீயோன் மலைபோல் அசையாதிருப்பீர்கள்" என்று கூறப்பட்டுள்ளது. சிந்தித்துப் பாருங்கள்.

இந்நிமிடமே, நாம் ஒவ்வொருவரும் ஆண்டவரில் அசையா நம்பிக்கை வைத்து சீயோன் மலை போலாவோம். அவரோடு இணைந்திருப்போம்.

-ஜோசப் அருள்சாமி, இரஜவெல்ல.

## தொழுகையின் மகத்துவம்!

மறுமையில் முதல் விசாரணை தொழுகையைக் குறித்துத்தான் அமைந்திருக்கும் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (அபூதாவூத், திர்மிதி)

மறுமை விசாரணை இம்மையில் நடக்கும் விசாரணை போன்று எளிதானதல்ல. அங்கே யாரும் தப்ப முடியாது. அங்கே நமது கைகள், கால்கள் போன்றவை கூடப் பேசும் என்று நம்மையும், இந்த அகில உலகத்தையும் படைத்த வல்ல றப்மான் அல்லாஹ் கூறுகிறான்.


அந்த நாளில் அவர்களின் வாய்களுக்கு நாம் முத்திரையிட்டு விடுவோம், அவர்கள் செய்தவை யாவையும் அவர்கள் கைகள் நம்மிடம் பேசும். மற்றும் அவர்களுடைய கால்கள், கண்கள் யாவும் சாட்சி கூறும்.

இந்த உலகில் பொய் சொல்லிப் பழக்கப்பட்ட வாய், மறுமையில் பொய் சொல்ல முற்படலாம். அதனால் வாய்க்கும் சீல் வைக்கப்படுமென அல்லாஹ் எச்சரித்துள்ளான்.

(ஆதாரம் : திர்மிதி)

-அல்நுஸ்ரத் பெனாஸீர் நிபாஸ், மூதூர் - 06.

## கவிதைப் போட்டி இல.655




பரிசுக்குரிய கவிதை

### கடத்தல் பீதி

படையில் சேர்க்கச்
சிறுவர் கடத்தலாம்!
அப்படியென்றால் -
என்னையும் கடத்தி
விடுவார்களோ?!

-தி.சிவஞானவேல், கொழும்பு - 06.

## கவிதைப் போட்டி இல.658



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 25.04.2006.

கவிதைப் போட்டி இல.658
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### உண்மை நிலை!

தம்பியே!
பத்திரிகை
சுதந்திரமும்!
தனிமனித உரிமைகளும்!
துப்பாக்கிகளுக்கு
அடிமையான தேசத்தில்
ஆர்வத்துடன்
உற்றுநோக்குவது
வெகுளித்தனமானதே!

-எம்.எம்.பிஸ்ரியாஉம்மா, ஏறாவூர் - 03.

### இது நிச்சயம்!....

பள்ளியில் படிக்க வயது போதாது,
தள்ளித் திரியவும் எனக்கு துணிச்சல் போதாது

சாதனை புரிய காலங்கள் உண்டென
சாந்தமான இடத்திலமர்ந்து
சாதனையாளர்களைப் பார்க்கிறேன்
பேப்பரில் இன்று.

-செ.வி.றிச்சாட், கண்டி.

### பிரச்சினையல்ல!

நேரத்தை மீதப்படுத்த
தெரிந்து கொண்ட
இந்தப் பிள்ளைக்கு
இலங்கையின் அரைமணிநேர
பின்தள்ளுகையும்
எதிர்கால வாழ்க்கையும்
பிரச்சினைக்குரிய ஒன்றல்லவே!

-ஆர்.பிரான்சிஸ், யாழ்ப்பாணம்.

### வருமா?

நான் பத்திரிகை
பார்க்கும் வயது.
எனக்கு
படிக்கும் வயது
வரும் போதாவது
சமாதானம் உதயமான
செய்தி வருமா?

-அ.சந்தியாகோ, கண்டி.

### சமாதானம்

பச்சிளம் பாலகன்
பார்க்கிறான் பத்திரிகை
சமாதானம் மலருமா?
இல்லை...
சாவுமணி அடிக்கப்படுமா
என்று!

-ஏ.எஸ்.எம்.ரவூப், கொழும்பு - 15.



### பத்திரிகைச் சுதந்திரம்

வளர்ந்து வரும்...
விஞ்ஞான யுகத்தில்
உண்பதற்கே நேரமின்றி
தொழிலை நம்பி...
தொழில் தொழில் என்று
ஓடுவதனால்....
வீட்டில் பத்திரிகைக்கு
சுதந்திரம் போய்!

-த.ஜெசிக்கா, யாழ்ப்பாணம்.

### வேறுபாடுகள்

நீ அங்கு பிறந்ததால்
சொகுசாக
வாசிக்கிறாய்.
நாம் இங்கு பிறந்ததால்
யுத்தத்தினால் இம்சைப்பட்டு
அகதி முகாமில்
கிடந்து அழிகின்றோம்!

-மர்ஸியா நாபிர், பேருவளை.

### பாதிப்பு

மிதமிஞ்சிய
நாகரீகம்
பிஞ்சுகளின்
வாழ்க்கையில் -
இன்று
நஞ்சூட்டிவிட்டது!

அனீஸா.அல்.ஆஸாத், ஏறாவூர் - 06.

### வேலைவாய்ப்பு

பால்குடி மாறவில்லை,
விரல் சூப்பிய ஞாபகம்
தீரவில்லை,
இப்படியிருந்தும்
எதிர்காலக்கனவின்
ஏக்கம்,
வேலைவாய்ப்பிற்கான
ஆரம்பக்கட்ட முயற்சி.

-எம்.ஏ.எம்.றிபாஸ், கதுருவெல.

### அதர்மம்

நடுநிலை தருமமென்றால்
நாடொன்றிலும் அதைக்
காணமாட்டாய்
அதிகாரத்துக்கு அடி
பணித்து
பந்தி பந்தியாய்ப் பரணி
பாடாவிட்டால்
உயிரை உடலில் ஒட்ட
வைத்து
பிழைப்பதற்கு வழி
வேறேதுமில்லை.

-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

## உங்கள் பக்கம்

### பொறுப்பற்ற கிராம சேவகரும் பொது மக்கள் அவலமும்

**மன்னார்** முருங்கன்பிட்டி என்னும் கிராமத்திலே பல காலமாக வாழ்ந்து வரும் மக்கள் விவசாயத்திலும், வியாபாரத்திலும், சிலர் கூலி வேலையிலும் அதிக கஷ்டமான சூழ்நிலையில் வாழ்கிறார்கள். இந்த நிலையில் சிலர் அடையாள அட்டை பெற அந்த ஊர் கிராம சேவை உத்தியோகஸ்தரிடம் கேட்டால், அவர் 3 போட்டோ பிடித்து வாருங்கள் என்று சொல்லுவார். அந்த ஊரில் புகைப்படம் பிடிக்கும் ஸ்ரூடியோ இல்லை. இதனால் எங்காவது கடன்பட்டு இங்கிருந்து பதினைந்து மைல் தொலைவில் உள்ள மன்னார் சென்று அங்கு வெயிலிலும், மழையிலும் அலைந்து ஸ்ரூடியோ போய் காவல் நின்று படம் பிடித்தபின், அவர் எதிர்வரும் 25ஆம் திகதி வாருங்கள் என்று சொல்லுவார். அத்துடன் இவர்கள் முருங்கன் வருவார்கள். 25ஆம் திகதி மன்னார் சென்று புகைப்படத்தைக் கொண்டுவந்து கிராம சேவகரைத் தேடிப்போனால் அவர் இல்லை. மறுநாள் அவர் இருப்பார். போட்டோவை கொடுத்தால், அடிப்பக்க ரசீதைத் தருவார். இப்படி பலர் கொடுத்துள்ளார்கள். ஒரு மாதம் இரண்டு மாதம் சென்று போய்க் கேட்டால் இன்னும் வரவில்லை என்பார். அனுப்பினால் தானே வர... இப்படி ஒரு வருடம் சென்று போய்க் கேட்டால் இது ஒரு வருடத்திற்கும் மேலாகிவிட்டது. ஆகையால் நீங்கள், கலர் போட்டோ 4 பிடித்துக்கொண்டு வாருங்கள் என்று சொல்லுவார். இதற்கிடையில் சோதனைச் சாவடிகளில் செக் பண்ணுகிறார்கள். அடை யாள அட்டை இல்லையேல் பிடிக்கிறார்கள். தாய், தந்தையர் மிகவும் கஷ்டப்பட்டு புகைப்படம் பிடித்துக் கிராம உத்தியோகத்தரிடம் கொடுப்பார்கள். ஒரு வருடம் ஆனாலும் அடையாள அட்டை கிடைக்காது. ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? என்று கேட்டால் அவர் கோபத்துடன் பேசுவார்.

காணிகள் இல்லாமல் பல குடும்பங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றன. இவரிடம் போய் கேட்டால், இல்லையென்ற பதில்தான். காணி வசதி உள்ளவர்களுக்குத்தான் காணி கொடுக்கிறார். இல்லாதவர்களுக்கு இல்லை. இப்படி ஏமாற்றும் கிராம உத்தியோகஸ்தர்களை யாரும் தட்டிக் கேட்க மாட்டார்களா.

இப்படிப் பல குடும்பத்தவர்கள் காணிகள் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

மாணவ, மாணவிகள் அடையாள அட்டை இல்லாமல் மிகவும் பயத்துடன் சீவிக்கின்றார்கள். மிக முக்கியமானது அடையாள அட்டை. எனவே இவர்களுக்கு கூடிய விரைவில் அடையாள அட்டை கிடைக்க ஆவனசெய்ய வேண்டுமெனவும், இருக்கும் இளைஞர்களைக் காப்பாற்றும் நோக்குடன் இத்திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் தயவு செய்து மேல் குறிப்பிட்ட குறைபாடுகளைக் கவனத்தில் கொண்டு இதற்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

- முருங்கன்பிட்டி மக்கள்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

## வாசகர் சாலை

### அன்பான முரசுக்கு!

நீ சுமந்துவரும் அத்தனை அம்சங்களும்
அருமையிலும் அருமை.
அஞ்சா நெஞ்சம் கொண்ட இனிய
முரசே! உனக்கு எனது வாழ்த்துக்கள்
அனைத்து அம்சங்களும் அருமை.
பொய்களையும் தங்கள் பிழைகளையும்
மறைக்க நினைப்பவர்களை
முரசே கலைத்துப் பிடி.
உன் பிடியில் இருந்து யாரும்
தப்பவே முடியாது.
உள்ளதை உள்ளபடி உண்மையை
சொல்லும் முரசே! உன் பக்கம் எந்த
நாளும் இருப்பேன்.
முரசே உன்னைப் பாராட்ட வசனங்கள்
எனக்கு இல்லை.

ஹெ.ஜெயபாலினி பெரேரா, வவுனியா.

### அன்பின் முரசே....

என் கன்னி ஆக்கத்திற்கு
இடமளித்து,
ஊக்கம் தந்த என் முரசுக்குப்
பல கோடி நன்றிகள்.
உன் அபிமான வாசகி நான்.
உன்னுடைய ஆக்கங்கள்
அரசியல் முதல் சமையலறை வரை
மாத்திரமன்றி அறிவுக்கும்
தீனி போடுகிறது.
வாசகர்களின் இதயங்களில்
நீங்கா இடம் பிடித்திருக்கும்
என் அன்பின் முரசுக்கு
பலகோடி நன்றிகளும்
வாழ்த்துக்களும்.

எம்.என்.மஹ்ஜபீன், திருகோணமலை.

### வைரத் தமிழ் வாழ்த்துக்கள்!

செந்தமிழின்...
செங்கோலான
தினமுரசே!
தமிழ் மகன் இவனின்
தாழ்வான வந்தனங்கள்!
தமிழ்ப் பணியில் உன்
தரமான சேவை...!
மென்மேலும்
மேலுயர்ந்து....
அடங்காத் தமிழன் இனியும்
அடிமையாக மாட்டான் - என
வெற்றி முரசு கொட்டி
வீரம் பேசுவாய் - என்று
வைரத் தமிழால்
வாழ்த்துகின்றேன் உனக்கு!

மலைக்கவி கா.சுபாஷ், டிக்கோயா.

### பாராட்டு

என்னருமை தோழா தினமுரசே!
உன்னை எப்படிப் புகழ்ந்திடுவேன்
பாரதி இருந்திருந்தால்
உன்னருமையைப் புகழ்ந்து
பாடியிருப்பார்
திருவள்ளுவர் இருந்திருந்தால்
உன்னைப் பற்றிய திருக்குறள்
எழுதி இருப்பார்
கவிஞர் கண்ணதாசன் இருந்திருந்தால்
தினமும் தினமுரசு என்று
கதையே எழுதி இருப்பார்.
என்னருமைத் தினமுரசே
ஏற்றமுடன் நீ வளர
உன்னை நான் வாழ்த்துகிறேன்.

- எம்.பாரூக், நுவரெலியா.

# பேராசிரியர் கூலுக்கு மரண அச்சுறுத்தல்; சர்வதேச சமூகத்துக்கு அமைச்சர் டக்ளஸ் விளக்கம்

ஒரு தகுதி வாய்ந்த உபவேந்தர் தெரிவு செய்யப்படுவார் என்ற சிந்தனையில் ஏற்கனவே தமிழ் சமூகம் இருந்து வந்தது. அப்பதவிக்காகத் தகுதி பெற்ற மூவருள் ஒருவரான பேராசிரியர் கூலின் பெயரையும் தேர்ந்தெடுத்த பல்கலைக்கழகத்தின் கவுன்சில், அதனை ஜனாதிபதியின் நியமனத்துக்காக அனுப்பி வைத்தது. ஜனாதிபதி அம்மூன்று பெயர்களில், பேராசிரியர் கூலின் கல்வித் தகைமைகளை ஆராய்ந்து, அவரையே 2006ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதியிலிருந்து உபவேந்தராக நியமித்தார்.

பேராசிரியர் கூல், சர்வதேச அனுபவம் வாய்ந்த ஓர் உயர் கல்விமானாக மதிக்கப் படுபவர். இவர் லண்டனில் உயர் கலாநிதிப் பட்டத்தையும், அதனைவிட சான்கீ மெலன் பல்கலைக்கழத்தின் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்ட முதலாவது இலங்கை யராகவும் திகழ்பவர். இவரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகப் பெற்றுக் கொள்வதில் தமிழ் சமூகம் மிகுந்த ஆவலுடன் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆனாலும் புலிகளது ஆதரவையும் ஊக்கத்தையும் பெற்றுள்ள சில சக்திகள் வெளிப்படையாகவும் அனாமதேயங் களாகவும் பேராசிரியர் கூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குச் செல்வதைத் தடுத்து, கொலை அச்சுறுத்தல் விடுத்து வருகின்றன. ஊடகங்களுடனான பல செவ்விகளின் போது, மாணவர் சங்கத் தலைவர் விஜயரூபன், பல்கலைக்கழ கத்துக்குள் பேராசிரியர் நுழைந்தால், அவர் கடுமையாகத் தாக்கப்படுவார் என அச்சுறுத்தல் விடுத்தார். விஜயரூபனுடனான தொலைக்காட்சிச் செவ்வியொன்றின் போதும், இத்தகைய அச்சுறுத்தல் வெளிப்படையாக விடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் ஓய்வுபெற்ற ஆயரான எஸ்.ஜெபநேசன், யாழ்ப்பாணம் கத்தோலிக்க ஆயர் வண தோமஸ் சௌந்தர நாயகம், மன்னார் ஆயர் வண.ராயப்பு ஜோசப் ஆகியோர் கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி பிரபாகரனுக்குக் கடித மொன்றை அனுப்பி வைத்தனர். பேராசிரியர் கூலும் தாங்களும் அல்லது பிரபாகரனின் பிரதிநிதிகளும் புலிகளைச் சந்தித்துப் பேசுவதின் மூலம் பேராசிரியர் கூல், யாழ்ப் பாணத்தில் கடமையாற்றுவதற்கான வசதி களைச் செய்து கொடுப்பதற்கு உதவுமாறும் அக்கடித மூலம் பிரபாகரனுக்கு வேண்டு கோள் விடுத்தனர். தற்போதுள்ள நிலைமை கள் தமிழ் சமுதாயத்தை வெட்கித் தலைகுனிய வைப்பதாக அமைகின்றது என மன்னார் ஆயர் வெளிப்படையாகவே குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் தெரிவு செய்யப்படுவ தற்கான கூட்டத்தில் கலந்துகொண்ட பல்கலைக்கழக கவுன்சிலர்களான 25 பேர்களுள் 24 பேர்களின் படங்களைக் கொண்ட ஒரு சுவரொட்டியும் யாழ்ப்பாணத் தில் காணப்பட்டது. இவர்களில் ஐந்து பேர் பேராசிரியருக்குச் சார்பாக வாக்களித்தவர்கள் எனக் குறிப்பிட்டு, அவர்களது படங்களுக்குப் பதிலாக மண்டையோடு வரையப்பட்டிருந்தது. இதே போன்று ஏனையோரும் அடையாளம் காணப்பட்டு, மரணதண்டனை வழங்கப்படு மென எச்சரிக்கப்பட்டிருந்தது.

பேராசிரியர் கூல் விடுக்கும் கட்டளை களை நிறைவேற்றக் கூடாதென சிரேஷ்ட கல்விமான்களுக்கும், கல்வி சாரா உத்தியோ கத்தர்களுக்கும் ஏற்கனவே புலிகளால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்தகைய அழுத்தங்களினால் பாதிக்கப்பட்ட பேராசிரியர் கூல், இராஜினாமாச் செய்ய நேரிட்டால், இன்னொரு உபவேந்தரை பல்கலைக்கழக கவுன்சிலால் சுயேச்சையாகத் தெரிவு செய் வது என்பது எதிர்காலத்தில் சாத்தியமாகாது.

பேராசிரியர் கூல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தராகக் கடமை யாற்றுவதை புலிகள் தமது பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் தடுப்பதானது, யுத்த நிறுத்தத்தை வெளிப்படையாக மீறுவதாகும் என தங்களுக்குத் தெரிவிக்க விரும்பு கின்றேன். புலிகளும், அவர்களது முகவர் அமைப்புகளும் ஆயுதமாகப் பாவிக்கும் பயங்கரவாதத்திலிருந்து, உபவேந்தரைக் காப்பாற்றுவதுடன், வடக்குக் கிழக்கில் ஜனநாயகக் குரலை காப்பாற்றுமாறும் சர்வதேச சமூகத்தை வேண்டிக் கொள்வதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## போர் மூளாது; அச்சம் வேண்டாம்! -மேற்கு இராஜதந்திரி

"ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தினங்களிலோ அல்லது சற்றுத் தாமதித்தோ நடைபெறுமென்பதில் ஐயமில்லை. வடக்கு - கிழக்கில் அண்மை யில் இடம்பெற்ற வன்செயல்களை வன்மை யாகக் கண்டித்திருக்கும் சர்வதேச சமூகம், பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றி சம்பந்தப்பட்ட தரப்புக்கு அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி யிருக்கிறது" என்று மேற்கு நாட்டு இராஜதந் திரியொருவர் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டார். இலங்கையின் இனப்பிரச் சினைத் தீர்வில் சம்பந்தப்பட்டிருக்கும் இந்த நாட்டின் இராஜதந்திரி, தனிப்பட்ட காரணங் களுக்காகத் தனது விபரங்களை வெளியிட வேண்டாமென்று கேட்டுக் கொண்டார்.

"இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை முறிந்து போனால் நான்காவது ஈழ யுத்தம் வெடிக்குமென்ற அச்சம் இலங்கை மக்கள் மத்தியில் பரவலாக நிலவுவது உண்மை தான். அந்தளவுக்கு இங்கு வாழும் சகல இன மக்களுமே யுத்தத்தில் சலிப்படைந் துள்ளனர். பேசித் தீர்க்கப்படக் கூடிய ஒரு படகுப் பிரச்சினையை அரசியல், இராணுவ விவகாரமாக மாற்ற முனைவது சுத்த அபத்தம். பொறுமை காத்து வரும் இலங்கை அரசைப் பாராட்டுகிறோம். இன்னமும் அவர்கள் சகிப்புத் தன்மையை வெளிப் படுத்துவார்கள் என்பதும் எமது நம்பிக்கை."

-இவ்வாறு அவர் சொன்னார்.

## பெற்றோல் விலை அதிகரிப்பு மாற்று வழிதான் என்ன?

சர்வதேசச் சந்தையில் எரிபொருட்களின் விலைகள் உயர்ந்திருக்கின்றன என்பது உண்மைதான். அதற்காக, அந்தப் பளுவை மக்கள் மீது சுமத்தும் பணிகளைத் தவிர்ப்பதற்கு வேறு மார்க்கங்களை அரசும் இலங்கையின் பொருளாதார, தொழில்நுட்ப நிபுணர்களும் கண்டுபிடிக்க வேண்டுமென் கிறார் கொழும்பில் கணக்கியலாளராகப் பணியாற்றும் பரந்தாமன். "திறந்த பொருளா தாரம், உலகமயமாக்கல் போன்றவற்றில் நன்மைகளும் இருக்கின்றன. தீமைகளும் இருக்கின்றன. தொழில்துறை, விவசாயம் சார்ந்த தேசிய உற்பத்திகளை அதிகரிக் காமல் உலகின் பொருளாதாரத் தாக்கங் களுக்கு ஈடு கொடுப்பதென்பது கஷ்டமா னதே. தேசிய உற்பத்தியைக் கட்டியெழுப் புவது என்பதும் ஒரே இரவில் செய்யக் கூடிய காரியமல்ல. தேசிய உற்பத்திக்கு உதவு கிறோமென்ற போர்வையில் எடுக்கப்பட்ட முயற்சிகள் இந்த நாட்டில் மரவள்ளி யுகத்தை உருவாக்கியதையும் நாம் மறந்து விட முடியாது. தேசிய உற்பத்தியையும் பாதிக்காமல் மக்களின் வயிற்றிலும் அடிக் காமல் பொருளாதாரத் துறையில் சமநிலை பேணப்பட வேண்டும். இருந்தாலும் அரசி னால் சகலவற்றுக்கும் மானியம் வழங்க முடியாது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எண்ணெய் விலை அதிகரிப்பினால் வருடாந்தம் முவாயிரம் கோடி ரூபா பெற்றோ லியக் கூட்டுதாபனத்துக்கு நட்டமேற்பட்டி ருப்பதாக அரசு தரப்பில் கூறப்படுகிறது. அப்படியானால் இதற்கு மாற்று வழிதான் என்ன?" என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

# திருமலை மக்களே! தீயவர்களின் நோக்குக்கு இரையாக வேண்டாம்

## சமாதான - சகஜீவன அமைப்பு வேண்டுகோள்

"வடக்கு - கிழக்கில் கடந்த சில வாரங்களாக அதிகரிக்கப்பட்ட வன்செயல்கள் மற்றும் படுகொலைகளுக்குத் திருகோண மலையில் வாழும் தமிழ் மக்களே அதிக விலை செலுத்தியிருக்கிறார்கள். சுமார் இருப துக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் வெட்டியும் கொளுத்தியும் கொல்லப்பட்டி ருக்கிறார்கள். இனியும் இவ்வாறான அக்கிர மங்கள் நடவாமல் தடுப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்" என்று திருமலை வாழ் சமாதான - சகஜீவன அமைப்பின் சார்பில் எஸ்.முருகானந்தன் பூஜித பண்டார, முஹம்மது அன்சார் ஆகியோர் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவித் திருக்கின்றனர். திருகோணமலை நகரிலுள்ள மரக்கறிச் சந்தையில் அப்பாவிச் சிங்கள வியாபாரிகள் மீது பட்டப் பகலில் குண்டுகள் வீசப்பட்டு, நால்வர் கொல்லப்பட்ட சம்ப வத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தச் சிங்கள வர்த்தகர்கள் தமது ஜீவனோ பாயத்துக்காக வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த அப்பாவிகள். இவர்கள் மீது குண்டுகளை வீசியவர்களுக்கு ஓர் உள்நோக்கம் இருந்திருக்கிறது. இல்லாவிட்டால் மக்களை மீதும் தமது அரசியல் எதிரிகள் மீதும் தாக்குதல் நடத்தி வந்தவர்கள், திடீரென்று சிங்களப் பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்தியதன் நோக்கம் என்ன? இப் படு கொலைகளை எப்படி நாம் கண்டிக்கி றோமோ, அதேபோன்று அப்பாவித் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலையும் நாம் கண்டிக்கிறோம். நான்கு சிங்கள மக்கள் கொல்லப்பட்டதால் உசுப்பிவிடப்பட்ட சிங் களக் காடையர்கள் மேற்கொண்ட உயிர், உடைமை அழிப்பு நடவடிக்கைகளையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

யாழ்ப்பாணம் இனச் சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்பட்ட பகுதி. அங்கு இன்னமும் 99 சதவீதம் தமிழ் மக்களே வாழ்கின்றார்கள். மட்டக்களப்பில் கூடுதலாகத் தமிழ் மக்கள் அளவில் வாழ்கிறார்கள். சங்கமம் என்ற கிராமத்துள் வெளிப்பகுதியில் கூடியளவில் தமிழ், முஸ்லிம் மக்களும் உட்பகுதிகளில் சிங்கள மக்களும் வாழ்கிறார்கள். இதே போன்று பல தமிழ் கிராமங்களும் இருக் கின்றன.

எனவே சௌஜன்யமாக மக்கள் வாழ்ந்து வரும் இப் பகுதிகளில் இன வெறித் தீயை




மூட்ட முனைபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நாம் வன்மையாகக் கண்டிக் கிறோம். திருமலையில் இன சௌஜன் யத்தைக் குழப்ப முயலும் தீய சக்திகளின் வலையில் சிக்க வேண்டாமென்று நல் லெண்ணம் கொண்ட சிங்கள, தமிழ், முஸ் லிம் மக்களை வேண்டிக் கொள்கிறோம். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்"- என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாழ்ந்தாலும் சகோதர இனத்தவரான முஸ் லிம்களுடன் சகஜமாகவே பழகுகிறார்கள், வாழ்கிறார்கள். ஆனால் திருகோணமலை யின் இன ரீதியான சனப் பரம்பல் நிலை அப்படியல்ல. திருமலை நகரிலுள்ள சென்ட்ரல் வீதி, மெயின் வீதி ஆகியவற்றில் மூவின வர்த்தகர்களும் தொழில் செய்கி றார்கள். அபயபுர, விஜிதபுர, சிறிமாபுர, மட்கோ போன்ற இடங்களின் உட்பகுதிகளில் கூடுதலான தமிழர்களும் அதன் வெளிப்புறப் பகுதிகளில் சிங்கள மக்களும் கணிசமான

## கண்காணிப்புக் குழு கண்டனம்

வடக்கிலும் கிழக்கிலும் இடம் பெற்ற கிளைமோர் குண்டுத் தாக்குதல்களை இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு வன்முறையாகக் கண்டித்திருக்கிறது. இது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என்பதோடு சமாதான முயற்சிகளைச் சீர் குலைக்கும் செயலென்றும் தெரிவித்திருக் கிறது. இதற்கிடையில் பழிவாங்கும் நடவடிக் கைகளை எடுக்காமல், பொறுமை காத்த மைக்கு இலங்கை அரசை பாராட்ட வேண் டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு நிதி

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக 600 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டிருப் பதாகத் திட்ட அமுலாக்கல் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியான அஜித் கப்ரால் தெரி வித்தார். பாதிக்கப்பட்ட மக்களின் வீடமைப்பு, மீள்குடியேற்றம், வாழ்வாதார முயற்சிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறதென்றும் அவர் சொன்னார். சமாதானம் நிலவும் பட்சத்தில் மேலதிக நிதியுதவிகள் வந்து சேருமென்றும் அவர் சொன்னார்.

## யாழ்ப்பாணத்தில் விழிப்புக் குழுக்கள்?

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலங்களில் இரவு வேளைகளில் வீடு புகுந்து திருடும் கோஷ்டிகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதால், விழிப்புக் குழுக்களை அமைக்கும் சாத்தியம் பற்றி அரசாங்க அதி காரிகள் ஆராய்ந்து வருகின்றனர். மக்களைப் பீதியடையச் செய்வதற் காக ஒரு சிலர் திட்டமிட்டு இம் முயற்சிகளில் இறங்கியிருக்கலா மெனப் பரவலாகப் பேசப்படுகிறது.

## கனடியப் பொலிஸாரின் தேடுதல்கள் தொடர்கின்றன

கனடாவில் புதிதாகப் பதவியேற்ற கன்சர் வேட்டிவ் அரசாங்கம் புலிகளைப் பயங்கர வாத இயக்கமெனத் தடைசெய் ததையடுத்து அங்கு இயங்கிவரும் புலிகளின் முகவரமைப்புகளை முற்றுகையிட்டு தேடுதல் நடத்தக் கனடியப் பொலிஸார் திட்டமிட்டு வருகின்றனர். மொன்ரீலிலுள்ள உலகத் தமிழர் இயக்கத்தின் அலுவலகத்தை இரு வாரங்களுக்கு முன்னர் கனடிய றோயல் படைப் பொலிஸார் முற்றுகையிட்டுத் தேடுதல் நடத்திப் பல முக்கிய ஆவணங் களைக் கைப்பற்றியுள்ளனர். சுமார் நாற்பது பொலிஸார் இத் தேடுதலில் ஈடுபட்டனர். உலகத் தமிழர் இயக்கம் புலிகளின் முகவர மைப்பாக இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்க தாகும். இந்த முற்றுகையின் போது புலிக் கொடிகள், புலிகளின் அரசியல் பிரசுரங்கள், கோவைகள், கணினிகள் உட்படப் பலவற் றைக் கைப்பற்றிப் பொலிஸார் எடுத்துச் சென் றனர். எனினும் எவரும் கைது செய்யப்பட வில்லை.

இந்த முற்றுகை பற்றிக் கனடாவில் வெளிவரும் செந்தாமரை, உதயன் போன்ற தமிழ் வார இதழ்கள் செய்திகளையும் அபிப் பிராயங்களையும் வெளியிட்டிருந்தன. கனடாவிலுள்ள தமிழர்களுக்குச் சொந்த மான கடைகளில் பகிரங்கமாக வைக்கப் பட்டிருந்த புலிச்சார்பு புகைப்படங்கள், பிரசுரங்கள் யாவும் கனடிய அரசு விடுத்த தடையையடுத்துத் திடீரென்று தலை மறைவாகி விட்டன. பிரபாகரனின் படங்களும் காணாமல் போய்விட்டன. கனடியத் தமிழ் வானொலியும் புலிச் சார்பு நிகழ்ச்சிகளை ரத்துச் செய்துவிட்டது. கனடிய அரசின் தடை முயற்சிகளைத் தடுத்து நிறுத்த, புலிச்சார்பு முக்கியஸ் தர்கள் எடுத்த முயற்சி பலனளிக்க வில்லை. மேற்கு நாடுகளில் இயங்கிவரும் புலிச்சார்பு அமைப்புகளுக்கு, கனடிய அரசு விதித்திருக்கும் தடை பலத்த அடியாகும் என்று கனடியத் தமிழரான டாக்டர் சாமுவேல் தெரிவித்தார்.

## மாதாந்தம் 20-30 பிள்ளைகள் யுத்தத்துக்கெனப் பிடிக்கப்படுகின்றனர்

நேரடியான மோதல்களில் அல்லது மோதல்களுக்கு ஆதரவாகப் பொருட்களைக் கொண்டு செல்லும்போது, வயது குறைந்த சிறுவர்கள் எதிர்நோக்கும் ஆபத்துக்களை வலி யுறுத்தும் வகையில் கடந்த 13ஆம் திகதி கொல்லப்பட்ட 17 வயதுத் தமிழ்ச் சிறுவனின் மரணம் எடுத்து விளக்குகிறதென்று கொழும்பில் யுனிசெப் அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவித் துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் உப அமைப்பான யுனிசெப் சிறுவர் நலன்புரி நடவடிக்கைகளில் உலகளாவிய ரீதியில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. சிறுவர் களைப் படையணிகளில் புலிகள் சேர்த்து வருவதாக எழுந்த குற்றச்சாட்டுகள் குறித்துப் பல தடவைகள் யுனிசெப் அம்பலப்படுத்தி யமையும், இது தொடர்பாகப் புலிகளுடன் நேரடியாகப் பேசியமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் தனது 16ஆவது வயதில் மரணமான சிறுவன் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுப் படையணிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டானென்று கொழும்பிலுள்ள யுனிசெப் பேச்சாளரொருவர் தெரிவித்தார். தற்போது கிட்டத்தட்ட 1400 சிறுவர், சிறுமி யர்கள் புலிகளின் படையணிகளிலும் துணை அமைப்புகளிலும் பிடித்து வைக்கப்பட்டிருப்ப தாகவும் அப் பேச்சாளர் கூறினார். ஆனால் உண்மையான தொகை இதனை விடக் கூடுதலாக இருக்கும். ஏனெனில் எமக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் நாம் மேற்கொண்ட விசாரணைகள் மூலமே மேற்கண்ட எண்ணிக்கையை மேலோட் டமாகக் கணக்கிட்டுள்ளோம். எமக்கு முறைப் பாடுகள் செய்யப்படாத, எமது கவனத் துக்குக் கொண்டு வரப்படாத மேலும் பல நூறு சிறுவர் கடத்தல் சம்பவங்கள் இடம் பெற்றிருப்பதும் எமக்குத் தெரியும். ஆனால் அவற்றை உறுதிப்படுத்த முடியாததால் உண்மையான எண்ணிக்கையைச் சரிவரக் கூறமுடியவில்லையென்றும் அவர் சொன் னார். தற்போதும் புலிகள், பிள்ளைகளை பிடித் துச் சேர்த்து வருகிறார்கள். மாதாந்தம் இருபது, முப்பது பிள்ளைகளைப் பிடித்துச் செல்கிறார்களென்றும் அவர் கூறினார். புலிகள் தமது படையணிகளிலுள்ள சகல வயது குறைந்த பிள்ளைகளையும் விடுவிக்க வேண்டுமென்று யுனிசெப் அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

## சுரேஷ் எம்.பி. இப்படிச் சொன்னார்

கிழக்குப் புலிகளின் கடற்பயணம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறக்கூடிய கருத்து எதுவுமில்லையென்று அண்மையில் தனியார் தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சி யொன்றில் கருத்துத் தெரிவிக் கையில், சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. கூறினார். இப் பயணம் குழம்பியமை தொடர் பாக அரசு ஒரு கருத்தைச் சொல்கிறது. புலிகள் மற்றொரு கருத்தைச் சொல்கின்றனர். கண்காணிப்புக் குழு வேறொரு கருத்தைச் சொல்கிறது. "தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கருத்து என்னவென்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு சொன்னார். அதாவது, கூட்டமைப்புக்குத் தனியானதென்று ஒரு கொள்கை கிடையாது. புலிகள் சொல்வதே அவர்களின் தாரக மந்திரம்.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# முரசம்

## இன்னொரு ஏமாற்றத்திற்காக பேச்சு நடத்தாதீர்கள்!

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

**திருமலையில்** நடந்த தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் எந்த நோக்கத்திற்காகவும் எத்தகைய நியாயத்திற்காகவும் செய்யப்பட்டதாக இருந்தாலும் அது வன்மையான கண்டனத்துக்குரியதாகும். இவ்வாறான வன்முறைகளும் அடக்குமுறைகளுமே தமிழினம் இன்று தனக்கான சுய உரிமை கேட்டுப் போராட முற்பட்டுள்ளதற்குக் காரணமாக அமைந்துள்ளது. ஆகவே தமிழர்களை வன்முறைகளூடாகவோ, அடக்குமுறைகளூடாகவோ பணியச் செய்ய முடியும் என்று எவராவது எண்ணிச் செயல்பட்டால் அது மகா முட்டாள்தனமாகும். எந்தவொரு சமூகத்தையும் வன்முறையைப் பிரயோகித்து அடக்க முடியாது என்பதை வரலாறு உணர்த்தியுள்ளது. சிங்களக் காடைத்தனத்துக்குப் பலியாகிப்போன தமிழ் மற்றும் முஸ்லிம் சகோதரர்களுக்காகவும் அதுபோல் புலிகளால் கொலைக்கு ஆளாகிப்போன சிங்களச் சகோதரர்களுக்காகவும் பெரும் கவலை கொள்ளும் அதேவேளை, இவ்வாறான இனத் தீயை மூட்டும் சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்க ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். புலிகளால் சிங்களத் தரப்போ முஸ்லிம் தரப்போ கொல்லப்படும்போது மகிழ்ச்சிகொள்ளும் மனித மிருகங்கள், தமிழ் மக்கள் கொல்லப்படும்போது மட்டும் நீலிக்கண்ணீர் வடிப்பதில் அர்த்தமில்லை. அதுபோல் தமிழர் சாகும் போது திருப்தியடையும் மனித மிருகங்கள் சிங்களவரோ, முஸ்லிம்களோ பலியாகும் போது ஓலமிடுவதில் அர்த்தமில்லை. இனம், மதம், சாதி இவற்றுக்கப்பால் உயிருக்கான மதிப்பும், கௌரவமும் வழங்கப்பட வேண்டும். முன்னர் ஒரு தடவை குறிப்பிட்டது போல், கொலைகள் தம் வீட்டுக்குள்ளேயே நடக்கும் வரை கொலைகளை வரவேற்பவர்கள் தம் மீதான தாக்கங்களையும் ரசிக்கவே வேண்டும். மாறாக அழக்கூடாது.

திருமலையில் நடந்த சம்பவங்கள் மாறிவரும் உலகப் போக்கில் எல்லாமே மாற்றத்துக்கு உள்ளாகி வருகின்றபோதும் இனத் துவேச சாக்கடை மட்டும் மாற்றமடையாமலே இன்னும் இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. இந்த நிலையானது தமிழ் மக்களை சிங்கள மக்கள் மீதும், சிங்கள அரசுகள் மீதும் சந்தேகத்தையே வலுவடையச் செய்யும். இந்த நிலையானது போராட்டத்தினூடாக வாழ்நாளை நகர்த்த நினைக்கும் புலிகளுக்கு மேலும் வாய்ப்பை வழங்குவதோடு இன முரண்பாடுகளுக்கே வழி சமைக்கும்.

அரசுக்கு சமாதானத்தின் மீது விருப்பமிருந்தால் புலிகள் கேட்பதையெல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்று வாதிடும் ஊடகங்கள் புலிகளையும் சமாதானத்தை நோக்கித் தள்ள வேண்டும். அவ்வாறில்லாமல் தூண்டி விடும் சதி வேலையை சில ஊடகங்கள் தமிழ் மக்களின் நலன் சார்ந்த விடயங்களாகவும் தத்தமது தார்மீகப் பொறுப்பாகவும் நினைத்துச் செயலாற்றுவதால் தான் சமாதானம் மக்களுக்கானது என்பதில்லாமல் அது அரசுக்கா - புலிகளுக்கா என்ற விவாதப் பொருளாகி விட்டுள்ளது. தவறான ஒப்பந்தம் - தவறான அணுகுமுறையையும் எப்போதுமே விமர்சித்து வருவதாலேயே இப்போதும் அதையே கூறமுடிகிறது. ஒப்பந்தம் தேவையான திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும். சமாதானத்துக்கான பேச்சுக்கள் சரியான தளத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். அதில்லாமல் தாக்குதல்கள் அதிகரிப்பதும் அதைத் தணிப்பதற்குப் பேச்சு நடத்துவதென்பது தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு நாட்டு மக்களையும் ஏமாற்றுவதாகவே இருக்கும். ஒவ்வொரு நெருக்கடியான காலகட்டத்திலும் வெளிநாடுகளைக் காட்டி, இருதரப்பையும் பணிய வைத்து இரண்டு நாள் பேச்சுவார்த்தை நடத்தச் செய்யும் நோர்வேயின் செயற்பாடுகள் மோசமான பின்விளைவுகளையே உண்டுபண்ணும். உண்மையிலேயே அரசும் - புலிகளும் சமாதானத்தை நேசிப்பவர்களாக இருந்தால் - இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் கௌரவமாக வாழ வேண்டுமென விரும்புபவர்களாக இருந்தால் வெளிநாடுகளின் அழுத்தங்களுக்குப் பணிந்து பேச்சு நடத்தத் தேவையில்லை. தாமே முன்வந்து பேச்சுக்களை நடத்த வேண்டும்.

இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் தாங்கள் கலந்து கொள்ள வேண்டுமென்றால் இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட வேண்டுமென புலிகள் தெரிவித்துள்ளனர். இயல்பு நிலையை உருவாக்குதல் தொடர்பாக கடந்த காலத்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போதும், புலிகள் பிரஸ்தாபித்துள்ளனர்.

இயல்பு நிலை உருவாகுவதற்கு புலிகளே அதிக பங்களிப்புச் செய்ய வேண்டியுள்ளது. கிளைமோர் குண்டுகளை வெடிக்க வைத்து, படையினரை கொல்வதன் மூலமாகவோ, சிறுவர்களை படைக்கு வலுக்கட்டாயமாக சேர்த்துக் கொள்வதனூடாகவோ, மாற்றுக் கொள்கை அரசியல் போராளிகளை படுகொலை செய்வதனூடாகவோ, பாடசாலை மாணவர்களின் கல்வியினை சீர்குலைப்பதனூடாகவோ எந்த வகையிலும் இயல்புநிலையைத் தோற்றுவிக்க முடியாது என்ற சர்வதேசத்தின் குற்றச்சாட்டுகளை புலிகள் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறான பிரச்சினைகள் இல்லாமல் இருப்பதே இயல்பு நிலையை உருவாக்கும். இதற்கான உத்தரவாதத்தோடு உறுதியான நடவடிக்கைகளை எடுக்காமல் வெறுமனே இயல்பு நிலை உருவாக்கப்பட வேண்டுமென கோரிக்கை முன்வைப்பதும், இந்தக் கோரிக்கையையே ஒரு நிபந்தனையாக கொண்டிருப்பதையும் சமாதானத்தை விரும்பும் மக்களும், சர்வதேச சமூகமும் விருப்புடன் பார்க்கப் போவதில்லை. ஆகவே அரசாங்கமும் இயல்புநிலை உருவாக்கத்திற்கு இடையூறாக இருக்கும் அனைத்து விடயங்களையும் அம்பலத்திற்குக் கொண்டுவர வேண்டும். சமாதானத்தின் பெயரால் அசம்பாவிதங்களையும், தவறுகளையும் மூடிமறைப்பது அரசின் நேர்மையை கேள்விக்குட்படுத்தவே செய்யும். எனினும் அரசும் - புலிகளும் சமாதானப் பேச்சுக்களில் இருந்து வெளியேற முடியாதபடி அகப்பட்டு போயிருக்கும் தத்தமது சுய சூழ்நிலைகளை உணர்ந்து மக்களுக்குப் பயப்பீதியை ஏற்படுத்தாமல், ஒருமித்த முடிவுக்கு வருவதே சாலச் சிறந்தது.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# அமைதிக்குத் தேவை அரசு - புலிகள் விட்டுக்கொடுப்பு

**வேதாளங்கள்** மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கூத்தாடத் தொடங்கி விட்டன. ஜெனீவாவில் நடைபெற ஏற்பாடாகியிருந்த இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்ற - நடைபெறும் சம்பவங்களை நோக்கும்போது இப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது. கடந்த பெப்ரவரி மாதப் பிற்பகுதியில் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது ஒருவரையொருவர் தாக்குவதில்லையென்று அரசும் புலிகளும் இணக்கம் தெரிவித்திருந்தன. அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப் பயன்படுத்தப்பட்ட மை காய்வதற்கு முன்னதாகவே வடக்கிலும் கிழக்கிலும் கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. அதற்கும் முன்னதாகவே குதிரைமலைக் கடலில் கடற்படையினரின் டோரா படகு மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனை நடத்திய ஆறு புலிகளும், டோராவில் பயணஞ் செய்த எட்டுக் கடற்படையினரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள். சமாதானம், குறிப்பாக இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை வெற்றி பெற வேண்டுமென்பதற்காகப் புலிகள் செலுத்திய மனிதக் காணிக்கைகள் இவை.

"உண்மையையே பேசுவோம்" என்று புனித சமய மறை நூல்களில் அடித்துச் சத்தியம் செய்துவிட்டு, நீதிமன்றத்தில் பொய் கூறும் சாட்சிகளைப் போல், ஜெனீவாவில் சமாதானத்தின் மீது அடித்துச் சத்தியம் செய்து விட்டு வன்னிக்குத் திரும்பியவர்கள் புலிகள். ஆனால் முதல் சுற்று ஜெனீவாப் பேச்சு முடிவடைந்து இரு வாரங்கள் கழிவதற்கு முன்னதாகவே குதிரைமலைக் கடலில் புலித் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது.

கடந்த வருடம் டிசம்பரிலும் இவ்வருட ஜனவரி முற்பகுதியிலும் படையினர் மீது, குறிப்பாகக் கடற்படையினர் மீது தொடர்ச்சியாகக் கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஆறு வாரங்களுக்குள் நடத்தப்பட்ட இத் தாக்குதல்களில் நூற்றுக்கு மேற்பட்ட படையினர் கொல்லப் பட்டனர். இதே எண்ணிக்கையிலான அப்பாவி மக்களும் கொல்லப்பட்டனர். குறிப்பாக மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள், புலனாய்வுப் பிரிவினரெனச் சந்தேகிக்கப்பட்டோர் கொல்லப்பட்டனர். இப் படுகொலைகளை தமிழ் மக்களே எழுந்து நின்று, எழுந்தமானமாகச் செய்தனரென்று புலிகள் ஒப்புதல் வாக்குமூலமளித்னர். அதாவது, பொங்கு தமிழ்ப் படை, மக்கள் படை என்பவையே இக் கொலைகளைச் செய்தனவென்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவிக் கப்பட்டிருந்தது. மக்களுக்கு ஆயுதப் பயிற்சியளித்ததாகவும் பத்திரிகைகளில் புகைப்படங்களையும் பிரசுரித்தும் புலிகள் 'டமாரம்' அடித்துக் கொண்டனர். அதாவது, புலிகளின் பாஷையில் சொல்வதானால் அவர்களின் 'துணைப் படைகள்' அல்லது 'ஒட்டுப் படைகள்' இதனைச் செய்திருக்க வேண் டும். உண்மை அதுவல்ல. இப் படுகொலைகளைப் புரிந்த வர்கள் புலிகள்தான்.

மீண்டும் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கு ஒரு சில வாரங்கள் முன்னதாகவே வாய்ப்பாட்டுப் பாணியில் சாக்குப் போக்குகளைச் சொல்வதற்குத் தமிழ்ச்செல்வன் தயாராகி விட்டார். அரசு, ஜெனீவாவில் அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்றா விட்டால் அடுத்த சுற்றுப் பேச்சில் கலந்துகொள்ள மாட்டோமென்று தமிழ்ச்செல்வன், மனப்பாடம் செய்த முதலாம் வாய்ப்பாட்டைப் பாடசாலைச் சிறுவன் போலச் சொல்ல ஆரம்பித்து விட்டார். அதாவது, துணைப் படைகளின் ஆயுதங்கள் களையப்படவில்லையென்பதே அவரது ஆரம்ப வாய்ப்பாடு அல்லது வாய்ப்பாட்டு. துணைப் படைகள் எனப்படுபவை அரசுடனோ அல்லது புலிகளுடனோ பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை, கண்டுபிடித்துக் களைவதற்கு. அதுமட்டுமல்ல, துணைப்படைகளென்ற பேச்சை, ஜெனீவா பேச்சுவார்த்தையில் புலிகள் முன்வைத்த போதும், அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை நிராகரிக்கப் பட்டது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்கும் சகல சட்டவிரோதக் குழுக்களின் அல்லது தனிநபர்களின் ஆயுதங்களும் களையப்பட வேண்டுமென்பதே ஜெனீவாவில் எட்டப்பட்ட உடன்பாடாகும். அதாவது, அரச படையினர், மாற்றுக் கருத்துக் கொண்ட அப்பாவிப் பொதுமக்கள் உட்பட மனித உயிர்களைக் கிளைமோர் குண்டுகள் வைத்துத் தாக்கியும் சுட்டும் கொலை செய்யும், சகல விதமான சட்ட விரோத சக்திகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பது நியாயமானதே.

அரசியல் வேலையென்ற போர்வையில் புலிகள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நுழைவதற்கும் படுகொலைகளைப் புரிவதற்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தம், லைசன்ஸ் கொடுத்திருக்கிறது. இந்த 'இனந்தெரியாதவர்'களைக் கண்டுபிடிக்க முடியாமல் அரசும் பொலிஸ் பகுதியினரும் தடுமாறுவதற்கும் சாட்சாத் யுத்தநிறுத்த ஒப்பந்தமே காரணம். கடந்த டிசம்பர் - ஜனவரியில் நடைபெற்ற படுகொலை களுக்கும் இவ் வருடம் மார்ச் - ஏப்ரலில் குறிப் பாக ஏப்ரலில் நடத்தப் பட்டுக் கொண் டிருக் கும் படுகொலைகளுக்குமிடையில் ஒரு தொடர்பு இருப்பதை உற்று ஆராய்ந்தால் புரிந்து கொள்ள முடியும். புங்குடுதீவில் தர்ஷினி என்ற இளம்பெண் பாலியல் வல்லுறவுக்கு உட் படுத்தப்பட்டுப், பின்னர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டு பாழுங் கிணறொன்றில் போடப் பட்ட பின்னரே பாழுங் கொலைக் கலாசாரம் கடந்த டிசம்பரில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது. இப் பெண்ணின் சடலம் கடற்படை முகாமுக்கு அண்மையிலுள்ள கிணறொன்றுக்குள் போடப்பட் டிருந்தது.

இதனால் கடற்படையினர் மீது அதற்கான குற்றத்தைச் சுமத்தி, அவர்கள் மீதே பெருமளவில் குறிவைத்துக் கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் தடவை திருமலையில் தமிழர் பேரவையென்று கூறப்படும் அமைப்பின் தலைவர் விக்னேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து, திருகோணமலையை மைய

***சிங்களக் காடையர்களின் செயல்கள் கண்டிக்கப்பட வேண்டியவை, கட்டுப்படுத்தப்பட வேண்டியவை. அடாவடித்தனங்களில் புலிகள் ஈடுபட்டாலென்ன, சிங்களக் காடையர்கள் ஈடுபட்டாலென்ன இரு தரப்பிலுமே இருப்பவர்கள் மனிதநேயத்தின் விரோதிகள்.***

மாக வைத்து, வடக்கிலும், கிழக்கிலும் தாக்குதல்கள் உசுப்பி விடப்பட்டிருக்கின்றன. தர்ஷினியையும் விக்னேஸ்வரனையும் கொன்றவர்கள் புலிகள்தானென்ற குற்றச்சாட்டை நாம் வெறுமனே தட்டிக் கழித்துவிட முடியாது. படுகொலைகளை ஆரம்பிப்பதற்கும் உசுப்பி விடுவதற்குமாக இவ்விருவரும் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று கூறப்படுவதில் நியாயமில்லையென்று மறுத்துரைக்க முடியாது.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் விக்னேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதால், புலிகளுக்கும் இக் கொலைக்கும் சம்பந்தமில்லையென்று யாரும் கூற முடியாது. உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் புகுந்து, துணிகரமாகத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் செல்லக் கூடிய சக்தி புலிகளுக்கு உண்டு. அப்படி அதனை மறுப்பவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதலையும் மத்திய வங்கிக் குண்டுத் தாக்குதலையும் புலிகள் நடத்தவில்லையென்று மறுதலிப்பார்களா?

திருமலையில் தமிழர் பேரவையென்று ஓர் அமைப்பு இல்லையென்பது வேறு விடயம். அது வெறும் 'லேபல்' அமைப்பு. அதற்குக் காரியதரிசி, தனாதிகாரி, செயற்குழு, நிர்வாகக் கமிட்டி எல்லாமே விக்னேஸ்வரன்தான். புலிகள் இடும் கட்டளையை சிரம் தாழ்த்தி ஏற்றுக் கொண்டு ஹர்த்தால், கடையடைப்புப் போன்ற செயற்பாடுகளுக்கு அழைப்பு விடுப்பது மட்டுமே அவரது பணி. பாவம் அந்த மனிதர். எம்.பி. பதவி கிடைக்குமென்ற நப்பாசையோடு வாழ்ந்த அந்த மனிதர் இப்படி அநியாயமாகப் போட்டுத் தள்ளப்பட்டிருக்கிறார். இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையைக் குழப்ப விரும்புபவர்களே அவரை மண்டையில் போட்டிருக்கிறார்கள் என்பதற்கு, மீண்டும் கிளைமோர் குண்டுகளைக் கையில் எடுத்தவர்களின் வன்செயல்களே சாட்சி.

ஆகவே, முதற் சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன்னரும் தற்போது இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன்னரும் ஒரே பாணியில் இரண்டு தமிழர்கள் மீது ஆயுத பூஜை செய்யப்பட்டுப் பின்னர் கிளைமோர் படுகொலைத் தொடர் நிகழ்வுகள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருக்கின்றன. யுத்த நிறுத்த ஒப்பந்த அமுலாக்கம் பற்றி மட்டும் தான் பேசுவோமென்றவர்கள், அந்த ஒப்பந்தத்தின் பலவீனத்தையா அல்லது தமது பலத்தையா நிரூபிக்க முனைகிறார்கள் என்பதுதான் விளங்கவில்லை.

இந்தத் தடவை, திருமலையை மையமாக வைத்துத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டமைக்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஏறத்தாழச் சம சதவீதத்தில் வாழுகின்ற மாவட்டம் அது. அத்துடன் அயலயல் கிராமங்களில் சிங்கள, தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். அங்கு மூட்டப்படும் இனவெறித் தீ, மிக விரைவாகவே பற்றிப் படர்ந்து நாடு பூராவையுமே எரித்து நாசமாக்கி விடும். அது மட்டுமல்ல, புலிகளைப் போல, அப்பாவி மக்களைக் குறிவைத்துத் தாக்கும் காடையர்கள் சிங்கள சமூகத்தின் மத்தியிலும் இருக்கிறார்கள். சிங்களக் காடையர்கள் அப்பாவித் தமிழ் மக்களைத் தாக்கினால் அதனால் பயன்பெறுபவர்களும் புலிகள்தான். ஒன்று, தமிழர்கள் தாக்கப் படுகிறார்களென்று சர்வதேச சமூகத்துக்குக் காட்டலாம். இரண்டு தமிழ் மக்களின் ஆபத்பாந்தவர்கள் தாங்களேயென்று கூறித் தமது படையணிகளுக்கு தமிழ் வாலிபர்களைத் திரட்டிக்கொள்ள முடியும். திருமலை மரக்கறிச் சந்தைக்குப் பட்டப் பகலில் குண்டுகளை வீசி, நான்கு சிங்களவர்களைக் கொன்றதன் நோக்கமே இதுதான். இத் தாக்குதலின் எதிரொலியாகவே அபேயபுர, விஜிதபுர, மட்கோ போன்ற சிங்களக் கிராமங்களைச் சேர்ந்த காடையர்களால் இருபதுக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் வெட்டியும் கொளுத்தியும் கொல்லப் பட்டிருக்கிறார்கள்.

சிங்களக் காடையர்களின் செயல்கள் கண்டிக்கப்பட வேண்டியவை, கட்டுப்படுத்தப்பட வேண்டியவை. அடாவடித்தனங்களில் புலிகள் ஈடுபட்டாலென்ன, சிங்களக் காடையர்கள் ஈடுபட்டாலென்ன இரு தரப்பிலுமே இருப்பவர்கள் மனிதநேயத்தின் விரோதிகள்.

புலிகளின் வன்செயல்கள் குறித்து இணைத்தலைமை நாடுகள் உட்படச் சர்வதேச சமூகமே கண்டனம் தெரிவித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சர்வதேச சமூகம் பலத்த கண்டனத்தைத் தெரிவித்திருப்பதும் இதுவே முதல் தடவையாகும். இருந்தும் புலிகளின் வால்களை எவராலும் நிமிர்த்த முடியவில்லை. இந்த நிலையில்தான் கிழக்கிலுள்ள புலித்தலைவர்களுடன் பேசித் தீர்மானித்தே ஜெனீவாவுக்கு வருவோமென்ற புதிய தந்திரோபாயத்தைப் புலிகள் முன்வைத்தனர். பேச்சுவார்த்தைக்குப் போக மட்டுமே விமான வசதி செய்து தரலாமென்று கூறிய அரசாங்கம், அதனை நிராகரித்தமை அதற்குரிய உரிமையாகும். கடற்பயண ஒழுங்குகளை அரசு செய்து கொடுத்தது. அதற்கும் படகில் ஏறிவிட்டுப் புலிகள் இறங்கிச் சென்று விட்டனர். இதற்கும் அவர்கள் கூறிய சாட்டுப் போக்குகளை இலங்கை அரசும் சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொள்ளவில்லை. மாற்றுவழியாகத் தனியார் விமான வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுங்களென்று கூறி அரசு புலிகளுக்கு கையை விரித்துவிட்டதும் நியாயமானதுதான். இனியென்ன சாக்குப் போக்குச் சொல்லப் போகிறார்களோ, பிரபாகரனுக்குத்தான் வெளிச்சம். யுத்தத்தோடும் பிரச்சினையோடும் சம்பந்தப்பட்ட மறுதரப்பு என்பதால் புலிகளோடு அரசு பேச்சு நடத்த வேண்டிய தேவையிருக்கிறது. குரங்கிடம் ஏதோ கேட்டால், கொப்புக் கொப்பாகப் பாயுமென்று தமிழில் ஒரு பழமொழி சொல்லுவார்கள். சமாதானப் பேச்சென்ற, பேச்சை எடுக்கும்போது புலிகள் அந்த விளையாட்டைத் தான் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

யுத்தத்தால் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாததால்தான் அரசு, சமாதானப் பேச்சில் அழுத்தமாக நிற்கிறது. சர்வதேச சமூகமும் இந்த நிலையில்தான் இருக்கிறது. புலிகள் தொடர்ந்தும் விட்டுக் கொடுக்காமலிருந்தால், அரசு இனியும் விட்டுக் கொடுப்பதா இல்லையா என்பதைத் தீர்மானித்துத்தானாக வேண்டும். சர்வதேச சமூகத்தின் பார்வை மாறுகிறது. அரசும் விட்டுக் கொடுப்புத் தன்மையை மாற்றுவது பற்றி யோசிக்க வேண்டும். யுத்தம் நடத்துங்களென்று நாம் கேட்கவில்லை. அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்துவதற்காகவாவது ஏதாவது செய்தாக வேண்டும். ■

## ஊரிலிருந்து....



ரெண்டு மூண்டு வாரமா தினசரிகளை பார்த்துக் கொண்டுதான் வாறன். முன் பக்கம் செய்திகளைப் பாத்தீங்கள் எண்டால் யுத்த காலத்தை விடவும் மோசமாத்தானுங்கோ செய்திகள் வருகுது. வானொலிச் செய்திகளும் அங்க ஒரு குண்டு வெடிப்பு இங்க ஒரு குண்டு வெடிப்பு எண்டு நான் முந்தி நீ முந்தியெண்டு செய்தி சொல்லுகினம். உந்தச் செய்திகளின்ர அதிகரிப்பையும், அதுகளின்ர விளைவுகளையும் பற்றி யோசிக்கேக்க இனம் புரியாத ஒரு பயங்கரம் வந்து ஒட்டிக் கொள்ளுமாப்போல இருக்கு. மனசு தானாகவே படக்குபடக்கு எண்டு அடிச்சுக் கொள்ளுது. உப்பிடியே போனால் உதைவிட ஒரு யுத்தம் தேவையில்லை எண்டமாதிரிக்கிடக்கு. போன ரெண்டு வாரத்தில மட்டும் அறுபதுக்கும் மேற்பட்ட படையினர் முப்பதுக்கு மேற்பட்ட ஏனையோரும், நூறுக்கும் அதிகமான காயப்பட்டவர்கள் எண்டு நடந்திருக்கு. உதை விட ஒரு யுத்தகாலத்தில கூட கொலைகள் குறிப்பிட்ட காலத்துக்குள்ள நடந்திருக்காது எண்டுதான் நினைக்கிறன். நிலைமை உப்பிடியே மோசமாகிக் கொண்டு போனால் இருக்கிறசனமும் வீடுவாசல்களை விட்டுப் போட்டு ஓடிப் போயிடுங்கள் ம்... சனத்தைப் பற்றி யார் யோசிக்கினம். எல்லாம் தங்கட தங்கட சுக போகங்களைப் பற்றித்தானே யோசிக்கினம்.

# சமாதானத்துக்காக வன்முறை செய்யாதீர்கள்

அலசுவது
- மதியூகி -

**கடந்த** 12ஆம் திகதி திருகோணமலையில் நடந்த வன்முறைகள் பல உண்மைகளைத் தெளிவுபடுத்தியுள்ளது. இம்மாதம் ஏழாம் திகதி தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் என்பவரான விக்னேஸ்வரன் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பல பேரின் உயிரைக் குடிக்கும் இன வன்முறைக்கு வழி சமைத்துள்ளது. விக்னேஸ்வரனின் கொலையாளிகள் யார் என்பதைப் பற்றியும், கொலைக்கான பின்னணி பற்றியும் ஆய்வுகள் நடத்தப்படுவதற்கு முன்பதாகவே தாக்குதல் சம்பவங்கள் ஆரம்பித்துவிட்டன. இரண்டாம் கட்ட ஜெனீவாப் பேச்சுக்குப் புலிகள் இரணைமடுவிலிருந்து போக வேண்டும் எனக் கேட்டிருந்தனர். அதற்கு அரசு மறுப்புத் தெரிவித்ததோடு, புலிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதாகவும் தெரிவித்தது. பெரிதும் சலசலப்பை புலிகளின் ஜெனீவாப் பயணம் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்தச் சலசலப்புகளுக்கு இடம் கொடுக்காமல் அரசு முற்றுப்புள்ளி வைத்தது. அதையடுத்து கிழக்கிலுள்ள புலிகளின் தளபதிகள் தமது கடற்கலங்கள் ஊடாக வன்னிக்கு வருகை தர வேண்டும் என்று புலிகள் தெரிவித்ததோடு, அவ்வாறு வரும் தளபதிகளுடன் இரண்டாம் கட்ட ஜெனீவாப் பேச்சுக்களில் பிரஸ்தாபிக்கப்படும் விடயங்கள் பற்றிக் கலந்தாலோசிக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தனர். இந்த விடயமும் இழுபறிக்கு உட்பட்டுக் கிடக்கிறது. காரணம், கடல் மார்க்கத்தில் புலிகள் பயணம் செய்வதற்கு ஒப்பந்தம் வழிவிடவில்லை. ஆனால் அதைப் புலிகள் மறுத்து தமது படகுகள் பயணிக்க வேண்டும் எனத் தெரிவித்தனர். இறுதியில் கண்காணிப்புக் குழு ஊடாக அரசு ஒரு படகை வழங்கியது. இறுதி நேரத்தில் அந்தப் பயண ஒழுங்கையும் நிராகரித்துவிட்ட நிலையில் ஜெனீவாப் பேச்சு இம்மாதம் 19ஆம், 20ஆம், 21ஆம் திகதிகளில் நடைபெறுவதாக இருந்த திகதிகள் தள்ளிப் போடப்பட்டு, எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எப்படியோ ஜெனீவாப் பேச்சுக்கள் இழுபட்டு இன்னொரு தவணைக்குப் போகும் என்றே நிலைமை நாளுக்கு நாள் மாறி வருகிறது. ஒன்றன் பின் ஒன்றாக விதிக்கப்படும் நிபந்தனைகளும் ஆத்திரமூட்டும் தாக்குதல்களும் புலிகள் மீதான நம்பிக்கையை கேள்விக்குள்ளாக்கியுள்ளதாக அரசுத் தரப்பு தெரிவித்துள்ளது.

சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகள் இவ்வாறு இருக்கையில் திருமலையில் நடைபெற்ற வன்முறைகள் அரச தரப்பு மீதும், புலிகள் மீதும் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளன.

கடந்த 12ஆம் திகதி திருமலை சந்தைப் பகுதியில் அடுத்தடுத்து வீசப்பட்ட கைக்குண்டுச் சம்பவமும் அதைத் தொடர்ந்து சிங்களக் காடையர்களால் திட்டமிட்டுத் தமிழ் மக்கள் தாக்கப்பட்டதும், கடைகள் தீக்கிரையாக்கப்பட்டதுமானது திருமலையின் இயல்பு நிலையையும், இனங்களுக்கிடையிலான நம்பிக்கையையும் சுக்கு நூறாக உடைத்துப் போட்டுள்ளது.

இவ்வாறு தமிழ் மக்கள் குறிவைக்கப்பட்டுத் தாக்கப்படுவது திருமலையில் இது முதல் தடவையில்லை.

ஒவ்வொரு முறையும் யுத்தம் கூர்மையடையும் போது இது நடைபெற்றே வந்துள்ளது. எனினும் அக்கால கட்டங்களில் நடந்த கசப்பான சம்பவங்களை இருதரப்பு மக்களும் அவ்வப்போது மறந்து நட்புணர்வோடு வாழ்ந்து வருவதைக் கடந்த காலம் உணர்த்தியது. துரதிர்ஷ்டவசமாக மீண்டுமொரு இன வன்முறை நடைபெற்றுள்ளது. இந்த வன்முறைகளில் பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு, வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதுபோல் ஆண்களும், சிறுவர்களும் கொல்லப்பட்டுள்ளார்கள்.

> **சமாதானமும் - விடுதலையும் வருகின்றபோது ஆடி அசைந்து வரட்டும். அதுவரை நிம்மதியாக எங்களை வாழவிடுங்கள். எங்களுக்கு வன்முறைகள் மீதோ, படுகொலைகள் மீதோ துளியளவு விருப்பமுமில்லை. எங்களுக்காக யாரும் கொலை வெறியோடு போராட வேண்டாம். நாங்கள் யாரையும் எங்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுச் செயற்படவில்லை என்ற பாதிக்கப்பட்ட அல்லது உடன்பிறப்புகளைப் பலிகொடுத்த அப்பாவி மக்களின் அவலம் நிறைந்த வேண்டுகோளை புலிகளும் சரி - அரசும் சரி - அல்லது வன்முறைகளோடு தொடர்புடையவர்களும் சரி - புரிந்துகொள்ளுதல் அவசியமாகிறது.**

சுமார் 18க்கும் அதிகமானவர்கள் இது வரையிலான வன்முறைகளில் கொலை செய்யப்பட்டும், 65க்கும் அதிகமான பொதுமக்கள் காயங்களுக்கு உள்ளாகியும் உள்ளதோடு, இரண்டாயிரம் பேரளவில் அச்சம் காரணமாக தமது வீடுகளை விட்டு அகதிகளாகவும் சென்றுள்ளனர். அரசு நிலைமையைக் கட்டுப்படுத்த அவ்வப்போது அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்தி வருகின்றபோதும், மக்கள் மத்தியில் எந்த வேளையில் எது நடக்குமோ, எவன் புகுந்து வெட்டுவானோ என்ற விதமாக நம்பிக்கையற்ற சூழலே இன்னும் நிலவுகிறது.

இந்தச் சம்பவங்களின் பின்னணியை எந்தவித அரசியல் நோக்கமுமில்லாமல் ஆராய்ந்து பார்க்கும் போது பலவிதமான சந்தேகங்கள் மேலெழும்புகின்றன. சாதாரண பொதுமக்களின் கருத்துக்களின் பக்கமிருந்து பார்த்தால், வன்முறைகள் அல்லது கொலைகளின் பின்னணியில் அரச தரப்பு அல்லது புலிகள் ஆகிய இரு தரப்பினருமே சம்பந்தப்படுகின்றனர். அவ்வாறு பார்க்கின்ற போது, விக்னேஸ்வரனின் கொலையைப் புலிகள் நடத்திவிட்டு, தமது இரணைமடுவிலிருந்தான பயணத்தை வலியுறுத்துவதற்குரிய அழுத்தத்துக்கான ஆரம்பமாக நடத்தியிருக்கலாம். அதாவது விக்னேஸ்வரன், புலிகளின் நேரடி முகவர். அவர் மக்கள் பேரவை எனும் பெயரில் திருமலையில் புலிகளுக்குச் சார்பான அல்லது புலிகள் நடத்திய பல எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தியவர். தவிரவும், அதற்கான கூலியாக எம்.பி. பதவியைப் பெற இருந்தவர். அவ்வாறானவரை புலிகளுக்கு எதிர்த்தரப்பினர் சுட்டுக் கொலை செய்து விட்டனர். இதனால் தமிழ் மக்கள் அல்லது தமிழ் தேசியத்திற்காகக் குரல் கொடுப்பவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள் என்ற பிரசாரத்தைப் புலிகள் செய்திருக்கலாம்.

ஏனெனில் ஒரு விக்னேஸ்வரன் மரணமாவது புலிகளை எந்த வகையிலும் பாதிக்காது என்ற மக்களின் கருத்தை நிராகரித்து மறுபுறத்தில் விக்னேஸ்வரன் ஒரு புலி ஆதரவாளர் என்பதால் அவரைக் குறிவைத்து தாக்கிவிட்டார்கள், இதனூடாக ஏனைய புலிகளின் ஆதரவாளர்களுக்கும் அச்சுறுத்தல் உள்ளது என்பதை உணர்த்துவதற்காகப் புலிகளின் எதிர்த்தரப்பினர் விக்னேஸ்வரனை கொலை செய்துவிட்டனர். ஆக புலிகளுக்கோ, தமிழ் மக்களுக்கோ சிங்கள அரச தரப்பிடமிருந்து பாதுகாப்பு உத்தரவாதத்தைத் தர முடியாது என்பது உறுதியாகிறது என்றும் கருத்துக் கொள்ளும் மனோ நிலையும் மக்களிடம் காணப்படுகிறது. அதே போல் நடந்த இன வன்முறைகள் பற்றியும் மக்கள் மத்தியில் பல சந்தேகங்கள் உண்டு. கிளைமோர் தாக்குதல்கள், கடத்திக் கொலை செய்தல் என்பவற்றை நடத்தி படைத்தரப்பினரைக் கொலை செய்யும் புலிகளுக்கு ஒரு படிப்பினையை படிப்பிக்க வேண்டும் என்று சிங்களத் தரப்பு திட்டமிட்டு கைக்குண்டுகளை சந்தைப் பகுதியில் வீசிவிட்டு, அதில் சிங்கள மக்கள் குறிவைக்கப்பட்டதான ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தி சிங்கள இளைஞர்கள் பதில் தாக்குதல் நடத்துவதற்கு ஏதுவான ஒரு சூழலை தோற்றுவித்து, அதனூடாகத் தமிழ் மக்களை வெட்டியும், தீ வைத்தும் கொலை செய்வதும், தமிழ் மக்களின் சொத்துக்களை அழிப்பதும் சிங்களத் தரப்பால் நன்கு திட்டமிட்ட நிகழ்வாக இருக்கும் என்று நம்பும் தமிழ் மக்கள் மத்தியில் இதே கருத்துக்கு மாறாக, எனினும் கொலைகளை நியாயப்படுத்தாத - அதேவேளை உயிர்கள் பல கொல்லப்படுவதை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும் என்று கருத்துக் கொண்டிருக்கும் சிலரின் கருத்து, வன்முறைகள் அல்லது தாக்குதல்கள் என்பது தனியே புலிகளுக்கும், படையினருக்குமிடையில் நடந்தால் அதில் மக்களுக்கு அக்கறையில்லாமல் போய்விடும். மக்கள் பாதிக்கப்படுகின்றபோதும் தாக்கப்படுகின்ற போதும்தான் போராட்டத்திற்கான வற்புறுத்தலுக்கு நியாயம் கிடைக்கும் எனத் திட்டமிடும் புலிகள், சிங்கள மக்களைச் சீண்டி விடும் நோக்கத்தோடுதான் இவ்வாறான மக்கள் நடமாட்டம் அதிகமான சந்தைப் பகுதிகளிலும், குடியிருப்புகளுக்கு அருகாமையிலும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்று கூறும் மக்களும் இருக்கிறார்கள். சுதந்திரமாகச் சிந்திக்கும் மக்களின் சந்தேகங்களும், அச்சங்களும் எவ்வாறானதாக இருக்கின்ற போதும் இவ்வாறான சம்பவங்களுக்கு தீர்வு காண்பது என்பது சம்பந்தப்பட்ட தரப்புகளின் நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது. இதில் தனியே அரசாங்கத்திடம் மட்டும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும்படி கோர முடியாது. இச் சம்பவங்களின் பிரதான சூத்திரதாரிகளாக இருக்கும் புலிகளும் சுமுக நிலை தோன்றப் பாடுபட வேண்டும். ஜெனீவாப் பேச்சுக்கு முன்னர் கிளைமோர் தாக்குதல்கள் இடம் பெற்றபோது அதை மக்கள் செய்கிறார்கள் என்று புலிகள் கூறியபோதும், அத் தாக்குதல்களைப் புலிகள்தான் செய்தார்கள் என்பதைப் பல தரப்பினரும் உறுதிப்படுத்தினர்.

தற்சமயமும் இடம் பெற்றுவரும் தாக்குதல் சம்பவங்கள், குறிப்பாகக் கிளைமோர் தாக்குதல்களைப் புலிகள்தான் செய்கிறார்கள் என்பதை தமிழ் மக்களே உணர்ந்து வெறுப்படைந்துள்ளனர். இந்த உண்மை தெரிந்தும் கிளைமோர் தாக்குதல்கள் ஒரு முடிவுக்கு வந்ததாக இல்லை. இதிலிருந்து புலிகள் சுமுகச் சூழ்நிலை ஒன்று ஏற்படுவதற்கு முரணாக எத்தகைய இடையூறுகளைச் செய்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. மறுபக்கத்தில் அரசு குறைந்த பட்சம் தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளாவது தனது செயற்பாட்டை விஸ்தரித்து தாக்குதல் சம்பவங்கள் இடம் பெறுவதைக் கட்டுப்படுத்துவதாக இல்லை. ஒரு யுத்த காலத்தைப் போல் நாளாந்தம் தொடரும் தாக்குதல்கள், கொலைகள் என்பவற்றுக்கு மத்தியில் வெற்று சமாதானப் பாட்டுப் பாடும் அரசின் கொள்கை தொடர்பாக மக்கள் தெளிவடையாதவர்களாக இருக்கிறார்கள். சரி, அரசுக்கும் புலிகளுக்கும் இவ்வாறானதொரு சூழல்தான் தேவையென்றால் தயவு செய்து தாக்குதல்களையும், கொலைகளையும், மக்களுக்கு இடையூறு இல்லாத காட்டுப்பகுதிக்குள் நடத்திக் கொள்ளலாம். மக்களைப் பணயமாக வைத்து உங்கள் நம்பிக்கையீனங்களை பரிசீலிக்காதீர்கள். சமாதானத்தின் பெயரால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை சீர்குலைத்து மக்களை பலியிடாதீர்கள் என்பதுவே மக்களின் கோரிக்கையாகவுள்ளது.

சமாதானமும் - விடுதலையும் வருகின்றபோது ஆடி அசைந்து வரட்டும். அதுவரை நிம்மதியாக எங்களை வாழவிடுங்கள். எங்களுக்கு வன்முறைகள் மீதோ, படுகொலைகள் மீதோ துளியளவு விருப்பமுமில்லை. எங்களுக்காக யாரும் கொலை வெறியோடு போராட வேண்டாம். நாங்கள் யாரையும் எங்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுச் செயற்படவில்லை என்ற பாதிக்கப்பட்ட அல்லது உடன்பிறப்புகளைப் பலிகொடுத்த அப்பாவி மக்களின் அவலம் நிறைந்த வேண்டுகோளை புலிகளும் சரி - அரசும் சரி - அல்லது வன்முறைகளோடு தொடர்புடையவர்களும் சரி - புரிந்துகொள்ளுதல் அவசியமாகிறது.

---

## அதிரடி அய்யாத்துரை



**திருவாணமலையில்** வன்முறை நடக்கேக்க சம்மந்தமானவர் இருக்க யில்லையாம். அப்புடித்தான் இல்லாட்டியும், சம்பவம் நடந்தாப்பிறகெண்டாலும் ஸ்பொட்டுக்கு வராமல் இருந்து போட்டாரே எண்டு சம்பந்தமானவரை 'மின்னல்' புகழ் ரங்கமணி ஏகத்துக்கு எடுத்துவச்சி வையிராருங்கோ. அப்புடி என்னடாப்பா வயசான சம்பந்தமானவர் மேலை உவருக்குக் கோபம் எண்டு ரங்கமணிக்கு நெருக்கமானவையிட்ட கேட்டதில தானுங்கோ பூதம் வெளிக்கிட்டுது. அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யவேணும் எண்டு திருவாணமலைக்குப் பொறுத்தமானவர் யார் எண்டு கேட்டதுக்கு சம்பந்தமானவர் கொஞ்சம் பின்னடிச்சு நிக்கேக்க, விக்னேஸ்வரனார் தான் முன்னின்று செய்யிறன் எண்டவராம். அப்புடியானவர் பிரபலமான ஸ்பீடிலையே காலமாகியும் போயிட்டார். உந்த சம்பந்தமானவர்தான் தான் திருவாணமலையின்ர மைந்தன் எண்டு சொல்லிக் கொண்டு பார்ளிமெண்டுக்கு வந்தவர். உருப்படியா போராட்டத்துக்கு ஒண்டும் செய்யவுமில்லை; சும்மா எம்.பி. - எம்.பி.யெண்டு கணக்கு விட்டுக் கொண்டிருக்கிறார் எண்டதாலை ஓவரா இல்லாமல் சந்தனம் பூசுமாப் போலை சகதியை அவரின்ர பேரில பூசிவிடுங்கோ. அவரின்ர ரிஎக்ஷன் என்ன எண்டு பிறகு பாப்பம் எண்டு ரங்கமணிக்கு மெஸேஜ் வந்திருக்குதாம். சம்பந்தமானவர் தற்சமயம் நாட்டில இல்லாத நேரத்தில அவருக்கு வேட்டுவைக்கினம். உதுக்கு கூத்தமைப்பு தலைவர் பதவிமேலை குறிவச்சு இருக்கிற வடக்கு கூத்தமைப்பு எம்.பி. ஒருவரும் உடந்தையாம். சம்மந்தர் எதிரிகளையே வோச் பண்ணிறதை விட்டுப்போட்டு நண்பர்களையும் வோச் பண்ணினால் நல்லது. இல்லாட்டில் திருவாணமலை இன்னொரு இழப்பையும் சந்திக்குமோ தெரியல்லையெண்டு ரங்கமணி அந்த வகையில சொன்னவராம்.

**கொத்மலை** நீர் மின் திட்டம் நடைமுறைக்கு வருமாக இருந்தால் அதைச் சுத்திக் குடியிருக்கிற குடும்பத்தில கும்மியடிச்சுப் போடும் எண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பண்ணினவை இப்ப வாய் பொத்தி கை கட்டி நிக்கினமே. ஏன் எல்லாம் பொலிரிக்ஸா எண்டு கேட்டால் உதுக்குள்ள பொலிரிக்ஸும் இல்லையுங்கோ; ஒரு வலிரிக்ஸுமில்லையுங்கோ. எல்லாம் பணமுங்கோ பணம். "பணம், காசைக் கண்டு புட்டால் பனங்காட்டு நரி கூட புல்லைத் திங்கும்" எண்டொரு பாட்டு இருக்குதெல்லோ. அந்த நரியே அப்புடியெண்டால் எங்கட பொலிரிக்ஸ்காரர் எதையுங்கோ சாப்பிடமாட்டினம். உந்தத் திட்டத்தாலை குடி முழுகிப் போகும் எண்டு சொன்னவை இப்ப வெட்டு கொமிசனை எண்டு இம்போர்ட் எக்ஸ்போர்ட் வேலை செய்யப்போகினமாம். அப்ப பொலிரிக்ஸை விட்டிட்டினமோ எண்டால் ஆ....ஹா... பொலிரிக்ஸில உது சைட் பிசினஸ் எண்டினம். நாங்கள் சீமெந்துப் பக்கற்றை இறக்கித் தாரம் எண்டது தானுங்கோ உந்தக் கொமிசன் பிஸினஸ். தூக்கிப் பாருங்கோ, குடிகளோ, கொமிசனோ வெயிட் எண்டு. உதுதானுங்கோ பொலிரிக்ஸ்.

**கண்காணிப்புக்** குழுக்காரர் தயார் பண்ணின படகுப் பயணத்துக்கு சரியெண்ட ரெண்டெழுத்தார், கடைசி நேரத்தில முடியாதெண்டு காலைவாரி விட்டிட்டினமே எண்டு குழுவின்ர குரல் குடுக்குற அம்மணியிற்றக் கேட்டதுக்கு, அம்மணி கடவாயை பொறங் கையாலை துடைச்சு விட்டுக் கொண்டு என்ன சொன்னா தெரியுமோ. உது படகு சம்பந்தப்பட்ட பிரச்சினையில்லையாம். உது ஏதோ பொலிரிக்ஸ் உள் விளையாட்டாம் எண்டு ரெண்டெழுத்தாரின்ர போக்கை விமர்சிச்சிருக்கா. ஒரு பொய்யை எவ்வளவு காலத்துக்குத்தான் மறைக்க முடியுமுங்கோ. அப்புடியில்லை இப்புடியில்லை. உது சம்பந்தமாக எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நாங்கள் யார் மேலையும் குற்றம் சொல்ல முடியாது. விசாரணைகள் செய்து வருகிறோம். கொலை செய்தவன் நிரூபிக்கப்படாத வரை நிரபராதிதான் எண்டெல்லாம் முன்னைய நாட்களில அசம்பாவிதங்கள் நடக்கேக்க வியாக்கியானம் பேசிக் கொண்டிருந்தவை இப்ப தங்கட மூக்கு உடைஞ்ச கதையை மறைக்க டங்கை சிலிப் பண்ண விடுகினம், உது ஏதோ பொலிரிக்ஸ் விளையாட்டு எண்டு. அட கொப்புறானே நாட்டில எந்த சம்பவம்டாப்பா பொலிரிக்ஸ் இல்லாம நடக்குது. உது சாதாரண ஒருவருக்கே தெரியும். உந்தப் பொடலங்கா குழுவுக்கு இப்பதான் தெரிஞ்சிருக்காக்கும் எண்டு சனம் சொல்லுதுகளுங்கோ.

**கூத்தமைப்பு** எம்.பி. ரவியான ராயர் திருவாணமலையில தாக்குதல் நடத்தேக்க படைத்தரப்பார் நிண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திச்சினம் எண்டு சொன்னவரெல்லோ. அதுபற்றி படைத்தரப்பிற்ற கேட்டதுக்கு அவை என்ன சொல்லினம் தெரியுமோ. உவர் உண்மையையே பேசமாட்டார் எண்டது ஒருபக்கமிருக்கட்டும். உவரைத் தாக்கேக்க படைத்தரப்பு தலையிட்டு ஆகாய வேட்டுத் தீர்த்துக் காப்பாத்தி கூட்டிட்டு வரயில்லையெண்டால் அண்டைக்கே ரவியான ராயருக்கு பச்சை சாணி வெளிக்கிட்டு இருக்கும். நன்றி கெட்ட மனிசன். உதவினவங்களையே மறந்து பேசிறார் எண்டினம். என்ன இருந்தாலும் உந்த கிளைமோர் குண்டு வெடிப்புக்கு கூத்தமைப்பு எம்.பி.மார் எல்லாம் தலைநகரில வந்து ஒதுங்கிக் கொண்ட போது ரவியான ராயர் திருவாணமலைக்குப் போனது ஒரு துணிச்சலான காரியம் தானுங்கோ. ஒரு மாமனிதருக்கு இன்னொரு மாமனிதர் அஞ்சலி செலுத்தப் போகேக்க கும்பல் தாக்கினது மெகா பிழையுங்கோ. எங்கட கவலையும் கண்டமும் மாமனிதர்களுக்கு உரித்தாகட்டும் எண்டு சில தேசிய தேச பிதாமார் சொல்லினமுங்கோ. அனுதாப அலை அடிக்கிறதை தக்க வைக்கத் தெரியாத ரவியான ராயர்தான் ஆயுதம் தூக்கவேண்டி வரும் எண்டு உறுமுறாருங்கோ. யோசிச்சுப் பாருங்கோ, உப்பிடி உசுப்பேத்தி உசுப்பேத்தி சனத்தை என்ன நிலைக்குக் கொண்டு வந்து விட்டுப்போட்டு கூத்தமைப்பு எம்.பி. மார் கொழும்பில போய் குளிர் ரூமுகளுக்குள்ள இருக்கினமெண்டு.

**கிளைமோர்** தாக்குதல்கள் அதிகரித்து வருவதும், அதில படைத்தரப்பு மட்டுமில்லாமல் பொதுமக்களும் அகப்பட்டுப் பலியாகினம் எண்டதும் கண்டனத்துக் குரியதுங்கோ.

உதுக்குத் தீர்வாக கிளைமோர் குண்டு பொருத்திறவை என்ன சொல்லியிருக்கினம் தெரியுமோ. ஆபத்துக்களைத் தவிர்க்க வேணுமெண்டால் படைத்தரப்பு பயணம் செய்யேக்க அவையின்ர வாகனங்களுக்கு அருகாமையாகப் போவதை பொதுமக்கள் தவிர்க்க வேணுமாம். சனம் உந்த வன்முறையே வேண்டாம்டா சாமி எண்டு திரியேக்க "குண்டு வெடிக்கத்தான் போகுது. நீங்கதான் கொஞ்சம் சைட் எடுத்து ஒதுங்கிப் போக வேணும்" எண்டினமே. உந்த நாசமாப் போனதுகளாலை எங்கட பிள்ளையளின்ர படிப்பும் எங்கட நிம்மதியும் நாசமாப்போகுது எண்டு சனம் திட்டுதுகள். உதைத்தான் "ஆடு நனையுதெண்டு ஓநாய் அழுகுதெண்ட கதை" எண்டு சொல்லிறதோ என்னவோ...

**ரெண்டெழுத்தார்** சமரசப் பேச்சுக்கு வரமாட்டினம். அது மட்டுமில்லாம எந்த சமரசத்துக் கூடாகவும் இஸ்லாமிய மக்களுக்கு கௌரவமான பங்கைத் தர மாட்டினம் எண்டெல்லாம் அந்த மக்களுக்கு நம்பிக்கையீனமும், அச்சமும் இருக்குதெண்டு சொல்வதற்கு மரக் கட்சிப் பிரதிநிதிகள் எண்டாலென்ன, இல்லாட்டில் எந்தக் கட்சிப் பிரதிநிதிகள் எண்டால் என்ன அவைக்கு உரிமை இருக்கு. அதுக்காகக் கொஞ்சம் ஓவராகி வடக்கையும், கிழக்கையும் பிரிக்க வேணும் எண்டிறது வேடிக்கையானதுங்கோ. இணைந்த வட-கிழக்கு எண்டதுக்காகத்தான் இத்தனை போராட்டங்களை நடத்தியிருக்கினம். போராட்டம் திசைமாறி, சொந்த இனத்தையும் கொன்று, சகோதர இனத்தையும் கொன்று, குறுக்கு வழி போகுதெண்டதும், அந்தப் பங்கை ரெண்டெழுத்தார் வகிக்கினமெண்டதும் மறுக்க முடியாததுதான். அதுக்காக தமிழ் மக்களின்ர போராட்டத்தை கொச்சைப்படுத்திப் போடாதீங்கோ. பிறகு ஆரம்பத்தில இருந்து போராட்டம் நடத்த வேண்டியிருக்கும் எண்டு கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு வாத்தியார் சொல்லுறாருங்கோ... கூல் டவுன்... கூல் டவுன். என்னாச்சு எண்டு கேட்டதுக்கு அண்மையில உல்லாவோ - சுல்லாவோ எண்டவர் வடக்கு, கிழக்கைப் பிரிக்கத்தான் வேணும் எண்டாராம். அதுக்குத்தானாம் அவரின்ர பேச்சு உரிமைக்கண்டு உப்பிடி உணர்ச்சி வசப்படக் கூடாது தெரியுமோ...




## வாசகர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர் களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## சூரியன் எப்.எம்.

சூரியன் எம்.எம்.மில் சில மாதங்களாக 'சுட்டெரிக்கும் நிமிடம்' என்ற ஒரு நிகழ்ச்சியை நடத்துகிறார்கள். இது பகல் 12.45 செய்திக்குப் பின்னர் ஒலிபரப்பப்படுகிறது. இந்த நிகழ்ச்சி வரவேற்கத்தக்கது. ஏனென்றால் பல இடங்களில் காணப்படும் பிரச்சினைகளான வீதி ஒழுங்கின்மை, குடிநீர் வசதி இன்மை இப்படியான பல பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் நிமிடமாக இருக்கின்றது. எந்த ஒரு ஒளிவு மறைவும் இன்றி உள்ளதை உள்ளபடியே பிரச்சினைகளை எடுத்து கூறும் அவர்களின் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கான வழிமுறைகளை செய்யவும்.

*–என்.மாலதி, புத்தளம்.*

## 'ஐ' அலைவரிசைக்கு மாற்றுங்கள்!

மஹாராஜா கூட்டு நிறுவனத்தின் ஓர் அங்கமான 'சிரச' ரி.வி.யானது, அண்மைக் காலங்களில் இலங்கை கிரிக்கெட் அணியினர் பங்கு பற்றும் போட்டித் தொடர்களை ஒளி, ஒலி பரப்புச் செய்யும் உரிமையினைப் பெற்று வருகின்றது. இதற்கு முன்னர் வழமையாக் சகல போட்டித்தொடர்களும் 'ஐ'(Eye) அலைவரிசையில் ஒளி, ஒலிபரப்புச் செய்யப்பட்டு வந்தது.

தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் யாழ். மக்களின் நலன் கருதி 'ஐ' அலைவரிசையினை யாழ்ப்பாணத்தில் மிகத் தெளிவாக ஒளி, ஒலி பரப்புச் செய்ய உதவி புரிந்துள்ளார்.

இச் சந்தர்ப்பத்தில் இவ் ஒளி, ஒலி பரப்பு உரிமையினை 'சிரச' ரி.வி. பெற்றுக் கொள்வதால் யாழ்.கிரிக்கெட் இரசிகர்கள் இத் தொடர்களைப் பார்க்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ் உரிமையினை ஐ அலைவரிசையிடம் விட்டால் யாழ். மக்கள் இத் தொடர்களைப் பார்க்க முடியும்.

இதைவிடுத்து 'சக்தி' ரி.வி.யில் ஒரு மணிநேர ஒளிபரப்பு, மறு ஒளிபரப்பு என யாழ் இரசிகர்களை ஏமாற்ற வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

சிங்கள இனத்தவரான ஜனாதிபதி அவர்களுக்கு யாழ். மக்கள் மீது இருக்கும் அக்கறை, தமிழரான மஹாராஜா கூட்டுநிறுவனத்தின் பொறுப்பதிகாரிக்கு இல்லாமல் போனமையை இட்டு கவலை அடைவதோடு, இதற்கான தீர்வினை யாழ். நேயர்கள் எதிர்பார்க்கின்றோம்.

*–ஏ.ரமேஸ், கோப்பாய்.*

## யாழ்.தீவுப் பகுதிகளுக்கு அம்புலன்ஸ் படகு

யாழ்ப்பாணத்தை அண்டியுள்ள தீவுப் பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்களின் அவசரத் தேவைகளுக்கென ஒன்றரை கோடி ரூபா பெறுமதியான அம்புலன்ஸ் படகொன்றினை ஹியூமெடிக்ஸ் நிறுவனம் வழங்கியுள்ளது. இப் படகில் நிரந்தரமாக ஒரு டாக்டர் சேவையில் ஈடுபடுத்தப்படுவார். சகல மருத்துவ வசதிகளும் கொண்ட இப்படகு, நெடுந்தீவைத் தளமாகக் கொண்டு யாழ்ப்பாணம், அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பகுதிகளுக்கான சேவைகளில் ஈடுபடுத்தப்படும். கடந்த 8ஆம் திகதி இச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத் தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி. **- ஆசிரியர்**

## யாழ். பல்கலைக்கழகத்தில் கண்ணகி பாணியில் கலாட்டா!

"**என்** கணவன் கள்வனோ" என்று ஒற்றைக் கால் சிலம்போடு பாண்டியன் அவைக்குள் புகுந்து நீதி கேட்ட கண்ணகியைப் போன்று யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் இரு வாரங்களுக்கு முன்பு புகுந்த தமிழ்ப் பெண்மணியொருவர் நீதி கேட்டுப் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளார். யாழ்.பல்கலைக்கழக 'சமூகம்' என்ற பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரமொன்றில் அதே பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் தொடர்பாகப் பல கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டிருந்தன. துண்டுப் பிரசுரத்துடன் விரிவுரையாளர்களை அணுகிய அப்பெண், யார் இந்த பல்கலைக்கழக சமூகத்தினர் என்று கேள்வி எழுப்பியுள்ளார். விரிவுரையாளர்கள் தெரியாதெனக் கையை விரிக்க, மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளிடம் சென்று அதே கேள்வியை எழுப்பியுள்ளார். அவர்களும் தெரியாதென்று கூறவே, அப்பெண் அங்கு பெரும் அமளிதுமளியை ஏற்படுத்தியுள்ளார். கலாசாலையின் கல்விசாரா ஊழியர் ஒருவரே இந்த ராஜ வேலையில் ஈடுபட்டிருந்தாரென்ற சங்கதி பின்னர் அம்பலத்துக்கு வரவே, தனிப்பட்ட கோபதாபங்களுக்கும் பல்கலைக்கழக சமூகம் சோரம் போகிறதா? என ஆக்ரோசமாகக் கேட்டாராம் அந்தப் பெண். பல்கலைக்கழகத்தையே திணறடித்த அந்தப் பெண் வேறு யாருமல்ல. பாதுகாப்பு ஊழியரின் மனைவிதான்.

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 4,300 | ரூ.2,150 | ரூ.1,100 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,900 | ரூ.2,450 | ரூ.1,250 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,800 | ரூ.1,900 | ரூ. 950 |
| உள்ளூர் | ரூ. 1,500 | ரூ.750 | ரூ. 375 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் D.D. Enterprises என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- (E-mail):– murasu@sltnet.lk

## இலங்கைக் கடற் பரப்பில் புலிகளுக்கு உரிமையில்லை -ஹக்ரப் ஹொக்லண்ட்

"**இலங்கையைச்** சுற்றியுள்ள கடற்பரப்பு முழுவதும் இலங்கைக் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. புலிகளுக்கு அக் கடற் பகுதியில் நடமாட எவ்வித உரிமையும் கிடையாது" என்று இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார். இலங்கைக் கடற்பரப்பில் புலிகளின் பயணத்தைக் கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அது பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்துமென்று புலிகளின் திருகோணமலை அரசியல் பிரதிநிதி எழிலன் விடுத்த எச்சரிக்கை பற்றிக் கேட்டபோதே ஹொக்லண்ட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


"இலங்கைக் கடலில் கடற்புலிகளுக்கு எவ்வித உரிமையுமில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆனால் புலிகள் என்றுமே இந்த உண்மையை ஏற்றுக் கொண்டதில்லை. சர்வதேசச் சட்டதிட்டங்களின்படி ஒரு நாடு, இன்னுமொரு கடற்படையைக் கொண்டிருக்க முடியாது. இப்போது நாம் எதிர்நோக்கும் பிரச்சினை இதுதான். இது குறித்து மேலதிக விபரங்களைத் தெரிவிக்க நான் விரும்பவில்லை. ஏனெனில் அவை அபாயகரமானவை. மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும்" என்றும் அவர் சொன்னார்.


**மட்டக்களப்பு மாந்திரீகம்**

**உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய, மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.**

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.
☎ 067-2250349




## மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P .K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -11 - 2344831
web- www.drpksamy .com

# இன்னொருவர் பார்வையில்

**இலங்கையைப் போன்றுதான் இந்தோனேசியாவின் ஆச்சே மாகாணத்திலும் ஐம்பது வருடங்களுக்கு முன்னரேயே அரசுக்கும் ஆச்சே மக்களுக்குமிடையிலான முறுகல் நிலை தோற்றம் பெறத் தொடங்கி விட்டது. இந்த முறுகல் நிலை, படிப்படியாக வளர்ச்சி பெற்று, அது ஆயுதப் போராட்டமாகவும் வெடித்து, இலங்கையைப் போலவே முப்பது வருடங்களுக்கு மேல் கடந்து விட்டது. இந்த நிலையில் 'சுனாமி' இரு நாடுகளையுமே தாக்கியது. அரச பயங்கரவாதத்தாலும் பின்னர் விடுதலையின் பேரால் மேற்கொள்ளப்பட்ட 'இயக்க' பயங்கரவாதத்தாலும் பாதிக்கப்பட்ட ஆச்சே மக்களுக்கு, பூமியதிர்ச்சி கொடுத்த மரண அடி, முரண்பட்டு மோதலில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையுமே மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க உந்தித்தள்ளியது. சுனாமியால் பாதிக்கப்பட்ட பதினான்கு நாடுகளில், இயற்கையின் சீற்றத்துக்கு கூடியளவில் காவு கொடுத்தது ஆச்சே. அதற்கு அடுத்தபடியாகப் பெருமளவில் பழிவாங்கப்பட்டது எமது நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதிகள். இலங்கையின் பிரச்சினைத் தீர்வு முயற்சி, இன்னமும் கிடப்பில் கிடக்க, முயற்சிகள் ஆரம்பித்து ஒரேயொரு வருடத்துக்குள் வெற்றிக்கம்பத்தை எட்டிவிட்டது ஆச்சே. நளின் சுவாரிஸ் என்ற அரசியல் ஆய்வாளர், இரு பிரச்சினைத் தீர்வுகளையுமே ஓர் ஒப்பு நோக்கில் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் சாராம்சம் தமிழில் இந்த வாரம் தரப்படுகிறது. அடுத்த வாரம் மிகுதி வெளியாகும். "ஆச்சே - நோர்வே இல்லாத சமாதான வழிமுறை" என்ற தலைப்பில் எழுதப்பட்ட இக் கட்டுரை 'த ஐலண்ட்' ஆங்கிலப் பத்திரிகையில் இம்மாதம் முதல் வாரத்தில் மூன்று பகுதிகளான வெளிவந்தன.**

# 'ஆச்சே' பிரச்சினைத் தீர்விலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை

**2004ஆம்** ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி கடலுக்கடியில் 9.0 ரிச்டர் அளவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி, மிக மோசமான சுனாமியை ஏற்படுத்தியது. இந்தோனேசிய மாகாணமான 'ஆச்சே'யின் மேற்குக் கரையோரப் பகுதியின் நீண்ட பிரதேசங்களை அது அழித்தொழித்தது. சுமார் இரண்டு இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். ஐந்தரை இலட்சம் பேர் வீடு, வாசல்களை இழந்தனர். வீதிகள், பாலங்கள் உட்பட ஆச்சேயின் 22 சதவீதமான உட்கட்டமைப்பு வசதிகளை அது அழித்தது. மேற்குக் கரையோரப் பகுதியிலிருந்த உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தையுமே கடல் நீர் அடித்துச் சென்றது. 78 சதவீதமான வாழ்வாதாரங்கள் அழித்தொழிக்கப்பட்டன. 450 கோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்ததாக மதிப்பிடப்பட்டது. இது ஆச்சே மாகாணத்தின் மொத்த உள்ளூர் உற்பத்தியில் 97 சதவீதத்துக்குச் சமமானதாகும்.

சுமாத்ராவின் வடகோடிப் பிராந்தியத்தில் ஆச்சே அமைந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டு வரை அது சுதந்திரமான சுல்தானிய இராஜ்யமாக விளங்கியது. பல தசாப்தங்களாக நடைபெற்ற பயங்கர யுத்தத்தின் பின்னர் டச்சுக்காரர்களால் அது கைப்பற்றப்பட்டது. 1945இல் இந்தோனேசியா சுதந்திரப் பிரகடனம் செய்தது. இதன்போது ஆச்சே, இந்தோனேசியாவின் மாகாணமாகியது. ஆச்சே மக்கள் தீவிர சுன்னி முஸ்லிம் பிரிவினராவர். ஆச்சே தான் இந்தோனேசியாவிலேயே இஸ்லாமிய ஷரியாச் சட்டம் சம்பிரதாயபூர்வமாகப் பின்பற்றப்படும் ஒரேயொரு மாகாணமாகும்.

1950களின் மத்தியில் இந்தோனேசிய அரசாங்கம், ஆச்சே மாகாணத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறதென்ற பரவலான உணர்வு, இந்தோனேசிய மத்திய அரசுக்கெதிரான உணர்வுகளை ஏற்படுத்தியது. சுதந்திர இஸ்லாமிய ராஜ்யத்தைக் கோரிய டாருல் இஸ்லாம் இயக்கம் இக் காலகட்டத்தில் ஆச்சேயின் பலமான ஆதரவைப் பெற்றது. இந்தோனேசிய அரசாங்கம் 1959ஆம் ஆண்டு ஆச்சேக்கு 'விசேட பிராந்தியம்' என்ற தனி அந்தஸ்தை வழங்கியது. கெரக்கா ஆச்சே மெர்டெகா (காம்) என்றழைக்கப்படும் தீவிரவாத சுதந்திர ஆச்சே இயக்கம், 1976ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. பிரிவினைவாதக் கிளர்ச்சியும் அதற்கெதிராக இந்தோனேசிய அரசாங்கத்தின் பயங்கரவாதச் செயற்பாடுகளும் கிட்டத்தட்ட முப்பது வருடங்கள் நீடித்தன. இதனால் சுமார் 15,000 பேர் கொல்லப்பட்டனர். பல மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்தனர். இந்தோனேசிய இராணுவ அரசாங்கம் அடக்குமுறை யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டது. ஜனநாயகக் கட்டுப்பாடு இல்லாததால், இந்தோனேசியப் படைகள் பயமின்றி அத்துமீறல்களில் ஈடுபட்டன. இதனால், இந்தோனேசியப் படைகளை ஆக்கிரமிப்பு இராணுவமாக ஆச்சே மக்கள் பார்க்கத் தொடங்கினர். 1980களின் பிற்பகுதியிலும் 1990களிலும் ஆச்சே சுதந்திர இயக்கம் வலுவான சக்தியாக வளர்ச்சி பெற்றது. இந்தோனேசியாவின் ஊழல் பேர்வழிகளை இராணுவ ஜெனரல்கள் ஆச்சே மாகாணத்தின் இயற்கை வளங்களைக் கொள்ளையிட்டமையும் அந்த மக்களை ஆத்திரப்படுத்தியது. ஆச்சேயில் இயற்கை வளங்கள் அபரிமிதமாகக் காணப்பட்டன. பெற்றோல், இயற்கை எரிவாயு, மரங்கள், கனிஜ வளங்கள் நிறைந்திருந்தன. இந்தோனேசியாவின் பெற்றோல் மற்றும் எரிவாயு உற்பத்தியில் 15-20 சதவீதம் ஆச்சேயிலிருந்தே பெறப்பட்டது. ஆச்சே பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண இந்தோனேசிய இராணுவம் விரும்பாமைக்கு பொருளாதார அம்சமும் ஒரு காரணமாகும். சில இந்தோனேசிய இராணுவ ஜெனரல்கள் மார்ஜுவானா போதைவஸ்து உற்பத்தியிலும் கடத்தலிலும் ஈடுபட்டனர்.

ஆச்சேயின் செல்வங்கள் பல்தேசியக் கம்பனிகளாலும் சர்வாதிகாரி சுஹார்ட்டோவின் கைக்கூலிகளாலும் சுரண்டப்பட்டன. இந்தோனேசியாவின் வறிய மாகாணங்களில் ஒன்றாக ஆச்சே விளங்கியது. வேலையில்லாத் திண்டாட்டம் மோசமாக நிலவியது. கிட்டத்தட்ட 40 சதவீதமான மக்கள் வறுமைக் கோட்டின் கீழேயே வாழ்ந்தனர்.

2002ஆம் ஆண்டு 48 சதவீத மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்கப்பெறாத நிலையே இருந்தது. ஐந்து வயதுக்கும் குறைவான பிள்ளைகளில் 36 சதவீதத்தினர் போஷாக்கின்மையால் வாடினர். 38 சதவீதமான மக்களுக்குச் சுகாதார வசதிகள் கிட்டவில்லை. ஜனநாயக வழிமுறைக்கு இந்தோனேசியா திரும்பிய பின்னர், ஜனாதிபதி ஹபிபிக்குப் பின்னர் ஜனாதிபதியான வாஹித், ஆச்சேயில் நிலைகொண்டிருந்த படையினரின் எண்ணிக்கையைக் குறைத்ததோடு, பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணவும் முனைந்தார். அவருக்குப் பின்னர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற மேகவதி சுகர்னோ, யுத்தத்திற்குத் தயாராகவிருந்த போதிலும் அரசியல் தீர்வொன்றினை விரும்பினார். ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் 2000ஆம் ஆண்டு மே மாதம் 'ஒரு மனிதாபிமான ஒப்பந்தம்' கைச்சாத்திடப்படுவதற்கு வழிவகுத்தது.

2002ஆம் ஆண்டு டிசம்பரில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டது. இது ஆச்சேக்கு கூடிய சுயாட்சி வழங்க முன்வந்தபோதும் 'காம்' இயக்கம் அதில் அக்கறை செலுத்தவில்லை. ஆனால் உள்ளூரிலும் சர்வதேச மட்டத்திலும் சட்டபூர்வ அந்தஸ்தைப் பெறுவதற்கு ஜெனீவா பேச்சுகளை அது பயன்படுத்தியது. 2000 - 2003ஆம் ஆண்டுக்கிடையிலான முக்கியப் பேச்சுவார்த்தைக் காலகட்டத்திலும் இந்தோனேசிய அரசாங்கம் தனது பந்தோபஸ்து விழிப்புணர்வைத் தளர்த்தவில்லை.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஆறு மாதங்களுக்கு மட்டுமே நீடித்தது. 2003ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி, மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்தது. மறுநாள் இந்தோனேசியாவில் இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதோடு ஆச்சே சுதந்திர இயக்கத்துக்கு (காம்) எதிராகப் பாரிய இராணுவத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இராணுவத்துக்குப் பலத்த வெற்றி கிட்டியது. அத்துடன் இராணுவச் சட்டம் 2004ஆம் ஆண்டில் சிவில் அவசரகாலச் சட்டமாகக் குறைக்கப்பட்டது. 2004ஆம் ஆண்டு செப்டம்பரில் சுசிலோ பாம்பாவ் யுதோயொனோ ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர், இந்த முப்பது வருட மோதலுக்கு முடிவு கட்ட திட்டவட்டமான அணுகுமுறையொன்றினைக் கையாண்டார். அவர் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்துக்கு அப்பால், மேலும் முன்னேற்றமான நடவடிக்கையெடுக்கத் தயாரானார். இந்தக் கட்டத்தில் தான் சுனாமி தாக்கியது.

இந்தோனேசிய அரசாங்கமும் ஆச்சே சுதந்திர இயக்கமும் பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்புவதற்கு நேரடியான காரணம் சுனாமியெனப் பொதுவாகக் கருதப்படுகிறது. ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளே, பேச்சுவார்த்தை மேசைக்கு இரு தரப்பும் திரும்ப வழிவகுத்தது என்பதே உண்மை. ஆச்சே சுதந்திர இயக்கத்தை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்தியதே அவர்களை பேச்சுவார்த்தை மேசைக்கு வரவைத்த தீர்க்கமான அம்சமாகும்.

மேகவதி சுகர்னோ, ஜனாதிபதியாக இருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பராசி தேர்பாடு' என்ற ஒருங்கிணைக்கப்பட்ட இயக்கம் ஆச்சே மக்களின் இதயங்களை வென்றெடுத்தது. இந்தோனேசிய அரசின் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகள், ஆச்சே சுதந்திர இயக்கத்தை, மக்கள் தொகை மிகுந்த கரையோரப் பகுதிகளிலிருந்து மலைப்பகுதிகளுக்குச் செல்ல வைத்தது. இந்த இயக்கத்துக்குக் கிடைத்து வந்த ஆயுத மற்றும் நிதி உதவிகளைத் துண்டித்ததன் மூலம் கெரில்லாக்கள் மக்களிடமிருந்து பிரிக்கப்பட்டனர். 'காம்' இயக்கத்தின் தொலைத்தொடர்புகள் சீர்குலைக்கப்பட்டன. அவர்களின் போராளிகளுக்குத் தலைமையகத்தை நெருங்க முடியாத நிலையேற்பட்டது. இது காம் இயக்கத்தின் கீழ் மட்ட மத்திய மட்ட உறுப்பினர்களை அழிக்க உதவியது. யுத்தத்தால் சலிப்படைந்திருந்த ஆச்சே மக்கள் வெறுப்படையத் தொடங்கினர். குறிப்பாக மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அவர்களைப் பெரும் ஏமாற்றத்துக்குள்ளாக்கியது. இந்த இயக்கம் விதித்துவந்த வரிகளும் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தின. ஆச்சேயின் சுயாட்சிக்கான சாத்தியங்களும் குறைவாகவே தென்பட்டன. 'காம்' என்ற இந்த ஆச்சே சுதந்திர இயக்கத்தின் 'வரி சேகரிப்பாளர்கள்' மற்றும் அதன் 'அதிகாரிகளுக்கும்' எதிராக மக்கள் மாறத் தொடங்கியதால், அதன் மக்கள் ஆதரவு பெரிதும் பாதிக்கப்பட்டது. சுனாமியும் அந்த இயக்கத்துக்குப் பெரும் அடியாக விழுந்தது. அதன் ஆயுத ஆதரவுத் தளங்களைச் சுனாமி முடக்கியது. கரையோரச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காம் மின் தளபதிகள் பலர் சுனாமியால் உயிரிழந்தனர். இந்த இயக்கத்தின் போராட்டத்திறன் இதனால் மட்டுப்படுத்தப்பட்டது. இந்தப் பாரிய சுனாமி நெருக்கடியால் தமது இயக்கத்தைப் பேணுவதே பெரும் பிரச்சினையாக அமைந்தது. இதனால் காம் இயக்கம் அழிக்கப்படக் கூடிய ஆபத்தை எதிர்நோக்கியது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்குமாறு இந்தோனேசிய அரசுக்கும் காம் இயக்கத்துக்கும் சர்வதேச அழுத்தம் அதிரிக்கத் தொடங்கியதால், அதனை ஓர் சந்தர்ப்பமாக காம் இயக்கம் பயன்படுத்திக் கொண்டது.



*பின்லாந்தின் தலைநகரான ஹெல்சிங்கியில் 'காம்' என்றழைக்கப்படும் ஆச்சே சுதந்திர இயக்கப் பிரதிநிதிகளும் இந்தோனேசிய அரச பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம்.*

இந்தோனேசிய இராணுவம், ஆச்சே மாகாணத்தில் கொண்டிருந்த அதிகாரக் கட்டுப்பாட்டையும் சுனாமி அடித்துச் சென்று விட்டது. அதன் பொலிஸ், இராணுவக் கட்டுப்பாடுகளையும் சுனாமி அள்ளிச் சென்று விட்டது. புலனாய்வு ஆவணங்களும் அழிந்து போய்விட்டன. ஆச்சேயின் அரசியல் சக்தியைச் சுனாமி தீர்க்கமான முறையில் இடம்பெயரச் செய்துவிட்டது. இதனால் ஆச்சே மக்களின் துயரநிலை குறித்து சர்வதேசத்தின் கவனம் திசை திரும்பியது. சுனாமி ஏற்படுத்திய சக்திமிக்க அதிர்ச்சி, பொதுநோக்குகளான நிவாரணம், மீளமைப்பு, புனர்நிர்மாணம் ஆகியவற்றை நோக்கிக் கவனத்தைத் திருப்பியது. ஆச்சேயின் மீது சர்வதேசத்தின் பார்வை திசைதிரும்பியிருந்த இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த இந்தோனேசிய அரசாங்கமும் ஆச்சே தீவிரவாதிகளும் தீர்மானித்தனர். இதனால் உண்மையான சமாதானத்தை உருவாக்கும் நோக்கத்துக்கு இரு தரப்புகளுமே சதி செய்ய முனையவில்லை. இதுவே சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முதலாவது அம்சமாக விளங்கியது.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்குச் சாதகமாக அமைந்த இரண்டாவது அம்சம் யுதோயொனோ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமையாகும். அவர் முன்னர் இராணுவத் தளபதியாகப் பணியாற்றியவர். இந்தோனேசிய இராணுவத்துக்குள்ளிருந்த சீர்திருத்தவாதப் பிரிவின் தலைவர்களில் ஒருவராகவும் விளங்கியவர். ஊழல் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகாதவர். இந்தோனேசியாவின் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட முதலாவது நேரடிப் போட்டியில் இரண்டாவது சுற்றில் மகத்தான வெற்றியை ஈட்டியவர். (61 சதவீத வாக்குகள்). உப ஜனாதிபதி பதவிக்கு இவரோடு இணைந்து போட்டியிட்டவர் யூசுப் கல்லா என்பவர். இவர் வெற்றிகரமான வர்த்தகர். முரண்பாட்டுத் தீர்வுகளிலும் பேச்சுவார்த்தைகளிலும் கணிசமான திறமை கொண்டவர்.

ஆச்சே மாகாணத்தின் பிரச்சினைத் தீர்வுக்கு முன்னுரிமை வழங்குவேனென்று, ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது யுதோயொனொ தெரிவித்தார். ஹெல்சிங்கியில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இந்தோனேசிய அரசாங்கத்தின் தூதுகோஷ்டிக்கு யூசுப் கல்லா தலைமை தாங்கினார். இந்தோனேசிய அரசாங்கமும் 'காம்' தீவிரவாதிகளும் யுகோயொனோ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் இரகசியமாக நடத்தத் தொடங்கிய பேச்சுவார்த்தைகள் தீர்வுக்கு உதவிய மூன்றாவது அம்சமாகும். தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பதிலாக மாற்றுத் தீர்வுகள் பற்றி ஆராய காம் அமைப்பு இணக்கம் தெரிவித்தது.

முரண்பாட்டுத் தீர்வுகளுக்கு இரண்டு மார்க்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. மூன்றாம் தரப்பு ஏற்பாட்டாளர் அல்லது மத்தியஸ்தர் என்ற உத்தியோகபூர்வ (அரசாங்கம்) வழிமுறை முதலாவது மார்க்கம் என்று குறிப்பிடப்படுகிறது. இரண்டாவது மார்க்கம் என்பது, உத்தியோகபூர்வமற்ற, ஆனாலும் மிகவும் மதிப்புவாய்ந்த தன்னார்வத் தொண்டர் நிறுவனமொன்றினால், தொழில்திறன்சார் முரண்பாட்டுத் தீர்வு இராஜதந்திரத்தைக் குறிப்பிடுகிறது.

(தொடரும்.....)

# கவிஞர் வாலி எழுதுகிறார்!


## —வாழ்க்கைச் சரிதம்—

சித்தர்களுக்கும் -

**நான்,** கவியரசர்
கண்ணதாசன் அமரரான
பன்னிரண்டாம் நாள் பாடிய -
வசன கவிதையை மீண்டும்
வாசகர்களுக்குத் தருகிறேன்.

'கண்ணதாசனே! - என்
அன்பு நேசனே!

நீ
தாடியில்லாத தாகூர்;
மீசையில்லாத பாரதி!
சிறுகூடற் பட்டியில்



சிற்றோடையாய் ஊற்றெடுத்து -
சிக்காகோ நகரில்
சங்கமித்த ஜீவ நதியே!
உனக்கு
மூன்றுதார மிருப்பினும் - உன்
மூலாதாரம் முத்தமிழே!
திரைப் பாடல்கள்
உன்னால் -
திவ்வியப் பிரபந்தங்களாயின;
படக் கொட்டகைகள்
உன்னால் -
பாடல் பெற்ற ஸ்தலங்களாயின!

நீ
ஆண் வேடத்தில்
அவதரித்த சரஸ்வதி;
கண்ணனின் கைநழுவி -
மண்ணில் விழுந்த
புல்லாங்குழல்.
அயல்நாட்டில்
உயிர் நீத்த -
தமிழ்நாட்டுக் குயிலே!
பதினெட்டுச்
சித்தர்களுக்கும் -

நீ
ஒருவனே
உடம்பாக இருந்தாய்;

நீ
பட்டணத்தில் வாழ்ந்த
பட்டினத்தார்.
கோடம்பாக்கத்தில்
கோலோச்சிக் கொண்டிருந்த
குணங்குடி மஸ்தானே!

நீ -
தந்தையாக இருந்தும் -
தாய் போல்
தாலாட்டுகளைப் பாடியவன்;
இசைத்தட்டுகளில் மட்டுமல்ல -
எங்கள் நாக்குகளிலும்
உன்
படப் பாடல்கள்
பதிவாகி யிருக்கின்றன!

உன்
மரணத்தால்
ஓர் உண்மை புலனாகிறது...
எழுதப் படிக்கத் தெரியாத
எத்துணையோ பேர்களில் -
எமனும் ஒருவன்;
அழகிய கவிதைப் புத்தகத்தைக்
கிழித்துப் போட்டுவிட்டான்.'

இன்னும் பல வரிகள் பாடினேன்; இப்போது நினைவில்லை.

திரையுலகத்தில் என்னுடைய சாதனை என்று எதையேனும் நான் சொல்லிக் கொள்ள வேண்டுமாயின், கண்ணதாசன் என்னை அங்கீகரித்து அன்பு பாராட்டியதுதான், தலையாய பெருமை என்பேன்.

கண்ணதாசன் தன்னைக் கவர்ந்த என் பாடல் வரிகளை நினைவில் வைத்துச் சொல்லுவார்.

இன்னொருவர் இருக்கிறார். ஆதி நாட்களில் அவரது படங்களுக்கு நான் எழுதிப் பயன்படுத்த முடியாது போன பாட்டுகளையெல்லாம், ஒரு FILE போட்டு அவர் பத்திரப்படுத்தியது உண்டு.

'கவிஞரே!' என்று வாயார என்னை விளித்து, நான் உயர்வதற்கு என் உடம்பில் உற்சாக ஊசிகளைச் செலுத்திய அவர்.


கண்ணதாசனுக்கு மிகவும், வேண்டப்பட்டவராக இருந்தும், என்னையே அதிக அளவு பயன்படுத்தினார்.


நான் எழுதும் நல்ல வரிகளில் தன் நெஞ்சை இழப்பார். அவருக்கு வலக்கரமாகவும் இடக்கரமாகவும் விளங்கிய வித்வான் திரு.வே. லட்சுமணன் அவர்களிடமும், பேராசிரியர் டாக்டர் திரு.நா. பாண்டுரங்கம் அவர்களிடமும் - என் பாடல் வரிகளைப் பரவசத்தோடு படித்துக் காட்டி, என் கவித்துவத்தைக் கண்ணதாசன் போலவே கௌரவப்படுத்திய என் அருமை நண்பர் இன்றளவும் என் நன்றிக்குரியவர்.

அவர்தான் -

இன்றைய உணவு அமைச்சர் மாண்புமிகு திரு.ஆர்.எம்.வீ. அவர்கள்.

(தொடரும்.......)




தாய்வானில் வெளிநாட்டு நடனங்களுக்கு நல்ல வரவேற்பு உண்டு. இதைப் பயன்படுத்திக் கொள்ளும் கலைஞர்கள் தங்களால் இயன்றளவு வெளிநாட்டு நடனங்களை மேடையேற்றி வருகின்றனர். இங்குள்ளது அரபு நாடுகளில் புகழ் பெற்ற பெல்லி நடன நிகழ்ச்சி ஒன்றினை மேடையேற்றத் தயாராகும் சீனப் பெண்கள் சிலரே....


## போராடுவோம்..... போராடுவோம்.....

**அகதிகள்** சட்டத்தை அமெரிக்காவின் கலிபோர்னியா அரசு திருத்தம் செய்வதை கண்டித்து வெளிநாட்டு இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். அவர்களுக்கு ஆதரவாக நேற்று வகுப்பை புறக்கணித்து போராட்டத்தில் குதித்த சவுத்கேட் பகுதி சிரேஷ்ட வகுப்பு மாணவர்கள் இவர்கள். பாருங்கள் போராட்டம் என்றால் எப்படியெல்லாம் இயங்குகிறார்கள் என்று....






**சிறு** வயதிலேயே நீச்சல் பயிற்சி கொடுத்தால், இரத்த ஓட்டம், சுவாசம் உட்பட எல்லா இயக்கங்களும் சீராக இருக்கும் என்பதால், கிரீஸ் தலைநகர் ஏதென்சில் இருக்கும் ஒலிம்பிக் மைதான குளத்தில் 6 மாத குழந்தைகளுக்கு எப்படி நீச்சல் கற்றுத் தருவது என்று சொல்லிக் கொடுக்கிறார் நடுவில் உள்ள பெண் பயிற்றுவிப்பாளர்.




**இந்தியாவின்** ஜார்க்கண்ட் மாநிலத்தில் அகில இந்திய யோகா போட்டிகள் நடந்தன. அதில் ஒரு சிறுவன் யோகாசனம் செய்து அசத்துகிறான்.





**சீனாவின்** தலைநகர் பீஜிங்கில் நடைபெற்ற சர்வதேச ஆடைக் கண்காட்சியில் உள்ளாடைகள் போட்டியில் சில இளைஞர்கள் தங்கள் (உள்) ஆடைகளைக் காட்டி நிற்கும் காட்சியே இது.

இப்போதெல்லாம் சீனாவிலும் கூட இப்படியெல்லாம் நடந்து வருகிறது.



**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....**




**ஒட்டுக்** கேட்கின்ற கருவிகள் நுணுக்கமான அமைப்புகள் கொண்ட மிகச் சிறிய கருவிகளாக இருக்கின்றன. கால் அங்குலத்திற்கும் குறைவான அகலமுடையவை சில. ஆகவே வெளியே தெரியாதபடி எந்த இடத்திலும் அவற்றை சுலபமாக பொருத்திவிட முடியும். பூந்தொட்டிகள், அழகு பொம்மைகள், திரைச்சீலை தொங்க விடப்படும் கம்பிகள் ஆகிய எதிலும் பொருத்தி வைத்து விடலாம். ஆனால் இந்தக் கருவிகள் இரண்டு மூன்று ஃபர்லாங் வரையில்தான் செய்திகளை அனுப்ப முடியும். வெளியில் இருந்தபடியே அது அனுப்பும் செய்திகளை பதிவு செய்து கொள்வது வழக்கம்.

சர்க்கரை படிகங்கள் அளவிற்குள்ள மிகச் சிறிய செய்தி அனுப்பும் கருவிகளும் இருக்கின்றன. இவற்றில் நான்கைந்தை பேசுகிற இடத்தில் வைத்துவிட்டால் பல மைல்களுக்கு அப்பாலிருந்தும் ஒட்டுக் கேட்க முடியும். இந்தக் கருவிகள் குறைந்தது நூறு மணி நேரம் தொடர்ந்து வேலை செய்யக் கூடிய பாட்டரிகளைக் கொண்டவை.

சில சமயங்களில் தாங்கள் அணிந்துள்ள சட்டைக் காலர்களிலும் இடுப்பு பெல்ட்டுகளிலும் ஓசைகளைக் கிரகிக்கும் அன்டெனாக்களைப் பொருத்தி வைத்திருப்பார்கள். இவை ஓசைகளைக் கிரகித்து வெளியில் அனுப்பிக் கொண்டேயிருக்கும்.

கென்னடி படுகொலை மிகத் திறமையாகவும் நுணுக்கமாகவும் திட்டமிட்டு செய்யப்பட்ட படுகொலை ஆகும். இது பற்றி எத்தனையே புதுப் புதுத் தகவல்கள் இப்போது வெளியாகி உள்ளன. கென்னடியை சுட்டுக் கொல்வதற்கு அவர் வந்த பாதையெங்கும் பல கொலைகாரர்கள் ரீவால்வருடன் காத்திருந்தார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு கென்னடியின் கார் வந்தவுடன் அனைவரும் ஒரே சமயத்தில் அவரை நோக்கிச் சுடவேண்டும் என்பதே திட்டம். அவர்கள் அனைவருக்கும் கேட்கும் கருவிகள் கொடுக்கப்பட்டிருந்தன. கூட்டத்தில் ஒருவன் குடைபிடித்துக் கொண்டு நின்றிருந்தான். அவன் ஐந்து வரை எண்ணவேண்டும் என்பதும் அவன் ஐந்து என்று சொல்லுகின்றபோது அனைத்துக் கொலையாளிகளும், தாங்கள் இருந்த பல்வேறு திசைகளிலிருந்து ஒரே சமயத்தில் கென்னடியை நோக்கி சுடவேண்டும் என்பதும் ஏற்பாடு.

குறிப்பிட்ட இடத்திற்கு கென்னடியின் கார் வந்தவுடன் குடை வைத்திருந்தவன் கைப்பிடி அருகில் வாயை வைத்து ஒன்று இரண்டு என எண்ணத் தொடங்கினான். ஐந்து என்று அவன் சொன்னபோது பல திசைகளிலிருந்தும் துப்பாக்கிகள் வெடித்தன. அவன் வைத்திருந்த குடையின் நுனி அவன் சொல்லுவதை ஒலிபரப்பும் அன்டெனாவாக செயல்பட்டது.

டெலி:போனில் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதை இடமறிந்து பதிவு செய்வது நீண்டகாலமாக இருந்துவரும் ஒரு பழக்கமாகும்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)



# பூலான் தேவியின் மறுபக்கம்

**குலை** நடுங்க வைக்கும் கொள்ளைக்காரியாக இருந்து, மனம் திருந்தி 11 ஆண்டுகள் சிறைவாசம் கண்டு,

பிறகு அரசியலில் புகுந்தவர் பூலான் தேவி. சாம்பல் பள்ளத்தாக்குப் பகுதி கொள்ளையர்களின் கூடாரமாக விளங்கியது. பலரது தலைமையில் கொள்ளை கோஷ்டிகள் இயங்கி வந்தன.

இவற்றில் சில கொள்ளைக்கும்பல்கள் பெண்களைத் தலைவியாகக் கொண்டு செயல்பட்டன.

இது போன்று சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு அதிபயங்கர கொள்ளைக்காரியாக விளங்கியவள் தான் பூலான் தேவி.

அவளது வாழ்க்கை வரலாறு பண்டிட் குயின் என்ற பெயரில் சினிமாப்படமாக வெளிவந்தது. அந்த திரைக்காவியம் பெரும் சர்ச்சையைக் கிளப்பினாலும் பூலான்தேவியைப் பற்றிய விவரங்கள் ஓரளவு வெளி உலகுக்குத் தெரியவந்தது.

பிறவியிலேயே பூலான் தேவி கொள்ளைக்காரி அல்ல. கொள்ளைக்காரியாக ஆக்கப்பட்டாள்.

### ஏழைக்குடும்பம்

பூலான்தேவி உத்திரப்பிரதேச மாநிலத்தில் ஜலான் மாவட்டத்தில் இருக்கும் ஜோர்க்கி கபர்வா என்ற கிராமத்தில் பிறந்தவள். மல்லாஸ் எனப்படும் மிகவும் தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவள். தந்தை பெயர் தேவிதீன்; தாயார் பெயர் மூலா இவர்கள் மிகவும் ஏழைகள். படகோட்டிப் பிழைத்து வந்தார்கள்.

### பூலான்தேவியுடன் பிறந்தவர்கள்

4 சகோதரிகள். ஒரு தம்பி உண்டு. பாலிய விவாகம் (சிறு வயதில் திருமணம்) என்பது அங்கு சர்வசாதாரணமான விஷயம். வயதுக்கு வரும் முன்பே (அதாவது 11 வயதில்) பூலான் தேவிக்கு திருமணம் நடந்தது.

கணவன் பெயர் புட்டிலால். பூலான்தேவியை விட 20 வயதுக்கு மூத்தவன். ஏற்கனவே 2 பெண்களைத் திருமணம் செய்தவன்.

திருமணம் ஆன பெண், வயது வரும் வரை பெற்றோர் கண்காணிப்பில் இருப்பது வழக்கம். அதன்படியே முதலில் பூலான்தேவி தாய் வீட்டில் இருந்தாள்.

ஆனால் கணவனோ அவளை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றுவிட்டான். அங்கு அவளை அவன் சித்திரவதை செய்து கொண்டிருந்தான். இதனால் மனம் உடைந்து போன பூலான்தேவி, ஒரு கொள்ளை கூட்டத்தினரிடம் சரண் அடைந்தாள். அக் கொள்ளை கூட்டத்தின் தலைவனாகிய விக்ரம் மல்லாவை பூலான்தேவி திருமணம் செய்து கொண்டாள்.

இந்த சந்தர்ப்பத்தில் பூலான்தேவி தன்னுடைய முதல் கணவன் புட்டிலாலை சந்தித்து பிரம்பால் அவனை அடித்து தனது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டாள்.

இதன் பிறகே பூலான் தேவி முழு அளவில் கொள்ளைக்காரியாக மாறினாள். விக்ரம்மல்லாவின் உதவியோடு தனக்கு தீங்கு செய்தவர்களை ஒருவர் பின் ஒருவராகத் தீர்த்து கட்டினாள். ஆனாலும் அவளுடைய ஆத்தரம் தணியவில்லை.

### காதலன் கொலை

இந்த நிலையில் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 ஆம் தேதி கொள்ளை கோஷ்களுக்குள் மோதல் ஏற்பட்டது. இதில் விக்ரம் மல்லா கொல்லப்பட்டான். இதனால் பூலான் தேவி மீண்டும் தனிமைப்படுத்தப்பட்டாள்.

தாகூர் வகுப்பைச் சேர்ந்த சிலர் பூலான்தேவியைச் சிறைப்பிடித்து சென்றனர். அவர்கள் அவளது கற்பை கிராம மக்கள் முன்னிலையில் கிராம மக்களின் சிலரும் சேர்ந்து சூறையாடினார்கள். சில கிராம வாசிப் பெண்களின் உதவியினால் அங்கிருந்து தப்பித்து சென்றாள் பூலான் தேவி.

விக்ரம் மல்லாவைக் கொன்றவர்களை பழிக்குப்பழி வாங்கத் துடித்த பூலான்தேவி, மான்சிங் என்ற கொள்ளைக்காரனுடன் இணைந்து ஒரு புதிய கொள்ளைக் கூட்டத்தை உருவாக்கினாள்.

### 22 பேர் படுகொலை

1981ஆம் ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி டெல்லி அருகேயுள்ள பிக்மாய் என்ற கிராமத்துக்குத் தனது கொள்ளை கோஷ்டியுடன் சென்றாள். விக்ரம் மல்லாவைக் கொன்றவர்களுக்கு அந்த கிராமவாசிகள் தஞ்சம் அளித்தனர் என்று குற்றம் சாட்டினாள்.

அந்த கிராம மக்கள் ‘எங்களுக்கு எதுவும் தெரியாது’ என்று எவ்வளவோ கெஞ்சியும் பூலான்தேவி அந்த



கிராமவாசிகளை வரிசையில் நிற்க வைத்து குருவியைச் சுடுவது போல் சுட்டாள். அதில் 22 பேர் துடிதுடித்துச் செத்தார்கள். 8 பேர் கை - கால்களை இழந்தார்கள்.

இந்த கொலைச் சம்பவம் இந்தியா முழுவதையும் உலுக்கியது. பூலான் தேவியைப் பற்றிய செய்தி நாடு முழுவதும் பரவியது. அது மட்டுமல்ல உத்திரபிரதேச அரசியலில் பெரும் திருப்பத்தையும் ஏற்படுத்தியது.

உத்திரபிரதேச முதல் மந்திரியாக இருந்த வி.பி.சிங் 1982இல் பதவியை ராஜினாமா செய்தார்.

### கடைசி தாக்குதல்

உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய இரு மாநில பொலிஸ் படைகளும் உஷார் படுத்தப்பட்டன. காடுகளுக்குள் புகுந்து தேடுதல் வேட்டை நடத்தினார்கள். ஆனாலும் அவள் சிக்கவில்லை.

பூலான் தேவியை உயிருடனோ, பிணமாகவோ கொண்டு வந்தால் ரூபா 2 லட்சம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பொலிஸ் கண்ணில் படாமல் திரிந்த பூலான்தேவி, அப்போதும் தனது எதிரிகளை தீர்த்துக்கட்டியபடியே இருந்தாள்.

நேபாளத்துக்கு அவள் தப்பி ஓடிவிட்டதாக பேசப்பட்டது. ஆனாலும் கொஞ்ச நாளிலேயே அவள் உத்தரப்பிரதேசத்துக்குத் திரும்பினாள்.

1982ஆம் ஆண்டு டிசம்பரில் ஜலான் மாவட்டத்தைச் சேர்ந்த 3 மிராசுதாரர்களை கடத்திச் சென்றாள். இதுவே அவள் கடைசியாக அரங்கேற்றிய தாக்குதலாகும்.

பூலான்தேவி மீது கொலை, கடத்தல், கொள்ளை, சூறையாடல் என்ற 48 பெரிய குற்ற வழக்குகள் பதிவாகி இருந்தன.

வடமாநிலங்களை குலைநடுங்க வைத்த பூலான்தேவி குள்ளமான பெண் ஆவாள். அவளது உயரம் 4 அடி 10 அங்குலம் மட்டுமே.

ஆனால் அவளது தோற்றம் கம்பீரமாக இருந்து வந்திருக்கிறது. குதிரை மீது ஏறி அவள் வலம் வந்தால் அந்த சுற்று வட்டாரமே நடுங்கும்.

கிராமவாசிகள் மண்டியிட்டு வணக்கம் செலுத்துவார்கள். காக்கி நிற உடையில் நெற்றியை சுற்றி சிவப்பு நிற ரிப்பனை கட்டியிருப்பது அவளுடைய தனி முத்திரையாகும்.

எப்போதும்“ தோளில் துப்பாக்கி தொங்கிக் கொண்டிருக்கும். துப்பாக்கி தோட்டா (குண்டுகள்) ‘பெல்ட்’ உடம்பை சுற்றி காட்சி தரும்.


(பக்கம் புரளும்)

# ௨ஆம் உலகப் போர்

## 11

**எதிர்க்கட்சிகளைத்** தடை செய்தார். பத்திரிகை சுதந்திரத்தை நசுக்கினார். தன்னை எதிர்த்தவர்களை நாடு கடத்தினார். அது மட்டுமல்ல. தன் எதிரிகளைச் சிரச்சேதம் செய்யும்படி (தலைகளைத் துண்டிக்கும்படி) உத்தரவிட்டார். மூன்றே ஆண்டுகளில் இவ்வாறு சிரச்சேதம் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்துக்கும் மேல்! இவ்வளவு கொடுமைகள் செய்த முசோலினி, மக்களைக் கவரப் பல திட்டங்களைக் கொண்டு வந்தார்.

விவசாயிகளுக்கு இயந்திரக்கலப்பைகள் வழங்கினார். அதனால் உணவு உற்பத்தி



முசோலினி

பெருகியது. வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வரிகள் குறைக்கப்பட்டன. மருத்துவ வசதிகள் பெருகின. இதனால், முசோலினியை மக்கள் ஆதரித்தனர். நிலைமை தனக்குச் சாதகமாக இருந்ததால், பொதுத் தேர்தலை நடத்தினார் முசோலினி. அதில் அவர் கட்சி மகத்தான வெற்றி பெற்றது. அதன்பின் பாராளுமன்றத்தின் அதிகாரங்களையும் தானே எடுத்துக்கொண்டார்.

1922ஆம் ஆண்டு முதல் இத்தாலியின் மாபெரும் சர்வாதிகாரியாக முசோலினி விளங்கினார். 1933இல் ஜெர்மனியில் ஆட்சியைக் கைப்பற்றிய ஹிட்லர், முசோலினியின் நண்பரானார். 1934இல் வெனீஸ் நகருக்குச் சென்று முசோலினியைச் சந்தித்துப் பேசினார் ஹிட்லர். அதைத்தொடர்ந்து, இத்தாலி இராணுவத்தைப் பலப்படுத்தவும், ஆயுதத் தொழிற்சாலைகளை அமைக்கவும் ஹிட்லர் உதவினார். இந்த நிலையில், அரசாங்க விருந்து ஒன்றில் கிளாரா என்ற அழகியை முசோலினி சந்தித்தார். அவள் அழகில் மனதைப் பறிகொடுத்தார். ஏற்கனவே திருமணம் ஆன முசோலினி, கிளாராவை எப்படியும் அடைந்தே தீருவது என்று தீர்மானித்தார். கிளாரா, விமானப்படை அதிகாரி ஒருவரை மணந்து விவாகரத்துப் பெற்றவள்.

இரண்டாண்டுகளாகத் தனியாக வாழ்ந்து வந்தார். தனது வசீகரப் பேச்சால் கிளாராவைக் கவர்ந்த முசோலினி, அவளைத் தன் ஆசை நாயகியாக்கிக் கொண்டார்.

இரண்டாம் உலகப்போரில் ஹிட்லரும், முசோலினியும் ஓரணியில் நின்று நேச நாடுகளை எதிர்த்தனர். முதலில் இவர்களுக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்தது. மக்கள் புகழ்ந்தனர். பிறகு போரின் போக்கு மாறியது. மக்களின் வெறுப்புக்கு உள்ளாயினர். போர் முனையில் இத்தாலி இராணுவம் தோல்வியைச் சந்தித்ததால் முசோலினியை 1943 ஜூலை 9ஆம் திகதி பாசிஸ்ட் கட்சி மேலிடம் டிஸ்மிஸ் செய்தது. அவரையும் அவர் குடும்பத்தினரையும், ஆதரவாளர்களையும் கைது செய்து, வீட்டுக் காவலில் சிறை வைத்தது.

முசோலினி சிறை வைக்கப்பட்ட சம்பவம் ஹிட்லருக்கு அதிர்ச்சி அளித்தது. தன் ஆத்ம நண்பரை விடுவிக்க முடிவு செய்தார். பகிரங்கமாக படையெடுத்துச் சென்று முசோலினியை விடுவிப்பது முடியாத காரியம் என்பதைப் போர்க்கலையில் வல்லவரான ஹிட்லர் அறிந்திருந்தார். முசோலினியை மீட்க தனது ரகசியப்படையை அனுப்பினார். ரகசிய படையினர் முசோலினி இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து முசோலினியையும் அவர் குடும்பத்தையும் மீட்டனர். வடக்கு இத்தாலியில் முசோலினிக்கு ஓரளவு ஆதரவு இருந்தது.

மனைவியுடனும் காதலி கிளாராவுடனும் அங்கு தப்பிச் சென்றார். அங்கு ஒரு பொம்மை அரசாங்கத்தை அமைத்துக் கொண்டார். இத்தாலியின் உண்மையான அதிபர் நானே என்று பிரகடனம் செய்தார். அப்போது இத்தாலி விடுதலை இயக்கம் என்ற புரட்சிக்கர இயக்கமே தோன்றியது. இத்தாலி முழுவதும் புரட்சிக்காரர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். முசோலினியை பிடித்து கொலை செய்வது என்று புரட்சிக்காரர்கள் சபதம் எடுத்துக் கொண்டனர். புரட்சிக்காரர்களால் தனக்கு ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்து கொண்ட முசோலினி, அண்டை நாடான சுவிட்சர்லாந்திற்கு தப்பி ஓட முடிவு செய்தார்.

இரண்டு இராணுவ லாரிகளில் தனது இரண்டு குடும்பத்தினரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். ஆனால் வழியிலேயே அந்த லாரிகளைப் புரட்சிக்காரர்கள் மடக்கினார்கள். முசோலினியை கைது செய்தார்கள். இதைக்கண்ட முசோலினியின் காதலி கிளாரா அலறிக் கொண்டு லாரியிலிருந்து குதித்தாள். அவளையும் புரட்சிக்காரர்கள் பிடித்துக் கொண்டனர். முசோலினியின் மனைவி லாரிக்குள் பதுங்கிக் கொண்டதால் அவள் புரட்சிக்காரர்கள் கண்ணில்படவில்லை.



ஹிட்லர், முசோலினி

இது நடந்தது 1945ஆம் ஆண்டு. ஏப்ரல் 27ஆம் திகதி அன்று டோங்கா நகரில் ஒரு அறையில் முசோலினியும், கிளாராவும் அடைத்து வைக்கப்பட்டனர். மறுநாள் அவர்களை புரட்சிக்காரர்கள் ஒரு காரில் அழைத்துச் சென்றனர். மலைப்பகுதியிலிருந்து கார் கீழே இறங்கியதும் முசோலினியையும் காதலி கிளாராவையும் கீழே இறங்கச் சொன்னார்கள்.

கீழே இறங்கியதும் அவர்களை நடுரோட்டில் நிற்க வைத்தார்கள். தங்களை சுடப்போகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்ட முசோலினி, முன்னால் வந்து நின்று முதலில் என்னைச் சுடுங்கள் என்றார்.

(தொடரும்)




பரிதி யென்னும் பொருளிடை யேய்ந்தனை
பரவும் வெய்ய கதிரெனக் காய்ந்தனை;
கரிய மேகத் திரளெனச் செல்லுவை,
காலு மின்னென வந்துயிர் கொல்லுவை;

- சுப்பிரமணிய பாரதியார்

# பாப்பா முரசு



## அழகு ராணி!



அன்று வானம் மந்தாரமிட்டது. சோலையில் மயில் ஒன்று பறந்து வந்தது. மழை மேகத்தைக் கண்ட மயில் தன் தோகையை விரித்து நடனமாடத் தொடங்கியது.

அப்படியும், இப்படியுமாக வளைந்து, நெளிந்து மிகவும் சிறப்பான முறையில் நடனம் ஆடியது அந்த மயில்.

தன்னையே மறந்தபடி நீண்ட நேரமாக அந்த மயில் நடனமாடிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் சோலைக்குள் காகம் ஒன்று பறந்து வந்தது. அந்தக் காகமானது நெடுநேரமாக மயிலின் நாட்டிய அழகினையே இரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தது. 'ஆஹா! இந்த மயில் தோகையை விரித்து

### பாப்பா முரசு சிறுகதை


நடனம் ஆடுகின்ற வேளையில் எவ்வளவு அழகாக இருக்கிறது. நாம் இதன் அழகிற்கு ஒப்பாக முடியாது' என்று மனதுள் நினைத்தது காகம்.

சிறிது நேரத்தில் மயில் தனது நடனத்தை நிறுத்தியது. மயிலின் அருகே காகம் வந்தது. "மயிலே! நீ நன்றாக நடனம் ஆடினாய்! அதோடு மிகவும் அழகாகவும் இருக்கிறாய்," என்றது காகம்.

"காகமே! என்னுடைய அழகு போலி அழகுதான். உனக்கு இரை கிடைத்தால் நீ உன் இனத்தாரையெல்லாம் கா...கா...என்று கரைந்து அழைத்து உண்கின்றாயே! அது தான் உண்மையான அழகு. அதனால் அழகு மிக்கவன் நீதான்" என்று காகத்தைப் பாராட்டியது மயில்.

"மயிலே...நீ அழகாக இருப்பதுடன் மிகவும் அழகாகப் பேசுகிறாய். அழகு இருக்கும் இடத்தில் பெருமை இருக்கும். ஆனால், இத்தனை தாழ்மை குணம் உள்ள உன்னை அழகில் பீட் பண்ண யாரும் கிடையாது. என்றும் நீ தான் பறவைகளின் அழகு ராணி!" என்று கூறிய காகம் மறுநிமிடம் அழகிய தேவதையாக மாறி மயிலை ஆசீர்வதித்துவிட்டு மறைந்தது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 25.04.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 640**

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 638

**பரிசுக்குரியவர்:**
த. திவ்யா,
புதிய தெரு உப்புக் குளம், மன்னார்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஜாவின் மிரான்டா, பிரதான வீதி, பெரிய போரத்தீவு. | என் துஷ்யந்தி, வேம்படி மகளிர் வித்தியாலயம், யாழ்ப்பாணம். |
| ச. சர்மிளா, மணிக்கூடு வீதி, கொழும்பு - 10 | நிரோஜன், புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்னார். |
| எஸ். நித்தியா, கண்டி வீதி, வவுனியா. | மயூரன், டி.எஸ். சேனாநயக்கா கல்லூரி, கொழும்பு 07. |
| கே. தேவியா, அளுத்மாவத்தை வீதி, மட்டக்குளி. | கே.ப்ரியா, ஸ்டேஸ் வீதி, கொழும்பு 14. |
| ஆர். மீரா, சுழிபுரம், யாழ்ப்பாணம். | எம். கதீஜா, மேபீல்ட் வீதி, கொட்டாஞ்சேனை. |

## ஆத்திசூடி


### பழிப்பன பகரேல்

நீ மற்றவர்களை அழுக்காறு காரணமாகத் தரக்குறைவாகக் கேவலமான வார்த்தைகளால் பேசாதே.

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

## மேதை லெனினைப் பாடுவோம்!



பசியும் பிணியும் பதைக்க வதைத்த
பண்டை இரசிய நாட்டி லே
பகிர்ந்து மகிழ்ந்து வளரும் இந்நாள்
பாரெல் லாம்புகழ மோச்சு தே.


ஏழை செல்வர் என்றே இல்லா
இன்பச் சமத்துவ நாட்டி லே
இரப்பா ருமங் கில்லைக் கண்டீர்
இதுஅ தியுயர் வாழ்க்கை யாம்.

ஜாரின் ஆட்சி வீழ்ந்தே கிருத
யுகமே எழுந்த நாட்டி லே
இறந்தும் இறவா லெனினின் உடலம்
இருக்கும் விந்தைக் காட்சி காண்.

அனைத்து உலகை அணைத்துப்
பொதுமை
புலர்த்தும் புதுமைக் கருத்தி லே
பழகும் தமிழில் மேதை லெனின்
பசுமைப் புரட்சியைப் பாடு வோம்.


## அதிசய உலகம்

### யானைச் சாணத்தில் பேப்பர்!



**தாய்லாந்தில்** உள்ள அயோத்யா என்ற நகரில் உலகின் மிகப் பெரிய யானைகள் சரணாலயம் இருக்கிறது. இந்த யானைகளின் சாணத்தைப் பயன்படுத்தி, எழுதும் காகிதங்கள், உறைகள், வாழ்த்து மடல்கள், கோப்புகள் போன்றவற்றைத் தயாரித்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தும் வருகின்றனர். விலையும் மிகவும் மலிவு. யானையின் உணவில் தாவரப் பொருள் அதிகம் உள்ளதால் அதன் கழிவு, காகிதம் செய்ய நன்கு பயன்படுகிறது.

### ஊர்வன இனத்து அரக்கர்கள்!



**ஆழமான** நதிகள், அடர்ந்த காடுகள், அவற்றின் அருகேயுள்ள சேறும் சகதியும் நிறைந்த இடமே முதலைகளுக்குப் பிடித்த இடங்கள் ஆகும். ஊர்வன இனத்தைச் சேர்ந்த உயிரினங்களில் - தற்போது உயிர் வாழும் இனங்களில் - மிகப் பெரியது முதலைதான்.

முதலைகளில் 23 இனங்கள் உண்டு. அவற்றுள் மிகப் பெரியது 'எஸ்டுவரின்' எனப்படும் உப்பு நீரில் வாழும் முதலைதான். 20 அடிக்கும் மேல் வளரக் கூடிய இந்த முதலை, ஒரு டன் எடை இருக்கும். ஈரமான சகதியில் நதிக்கரையில் தன் கூரிய பற்கள் தெரிய வாயைப் பிளந்து கொண்டு தன் இரையைத் தேடிக் காத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாலே பயங்கரமாக இருக்கும். முதலைக்கு தண்ணீரில் வசிப்பதுதான் பிடித்தமானது என்றாலும், தரையிலும் வசிக்க முடியும். ஆற்றங் கரையினில் கிடைக்கும் சிறு பறவைகள், மிருகங்கள், நீர்வாழ் ஆமைகள் ஆகியவையே முக்கிய உணவு என்றாலும், கரடிகளையும், ஆடு, மாடுகளையும் கூடத் தாக்கித் தின்றுவிடும் சக்தி கொண்டது.


## உங்கள் பொது அறிவு எப்படி?

### சரித்திர பிரசித்திபெற்ற இடங்களும் வாழ்க்கைத் தொடர்புகளும்

1. கோக்கிக்கா - ஓர் தீவு. நெப்போலியன் பிறந்த இடம்.
2. சாரநாத் - புத்தபிரான் முதன் முதலில் தமது போதனையைப் போதித்த இடம்.
3. ஜெருசலேம் - முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், யூதர்களுக்கும் புனிதமான ஒரு நகரம்.
4. 'லக்சல' - என்பது நம்நாட்டின் சுதேச கைத்தொழில் பொருட்களைக் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டிருக்கும் காட்சி நிலையம்.
5. ரொயிட்டர் - ஓர் உலக செய்தி ஸ்தாபனத்தின் பெயர்.
6. மொனாக்கோ - ஐரோப்பாவிலுள்ள மிகச் சிறிய தேசம்.
7. 1945 - உலக வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு.
8. 1964 - சர்வதேச பண நிதியம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு.
9. 1950 - கொழும்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு.
10. பிறிமா ஆலை - திருகோணமலையிலுள்ள வெளிநாட்டவர்களின் மா ஆலையின் பெயர்.


# தகவல் பெட்டி

## சாதனைத் தந்தை



இச் செம்மறி ஆட்டுத் தந்தையின் பெயர் 'டொப் ஜோ'. இவர் உண்மையில் சாதனைத் தந்தையாகக் கருதப்படுவதற்குக் காரணம், இவர் மூலம் பல்வேறு செம்மறி ஆட்டுத் தாய்மாருக்கு 1000 குட்டிகள் பிறந்திருப்பது தான். அது மட்டுமின்றி 'டொப் ஜோ'வின் குட்டி ஒன்று 50,000 ஸ்டேர்லிங் பவுண்களுக்கு சந்தையில் விற்பனையாகிறதாம்.


## வண்ணத்துப் பூச்சி மீன்



**சீனர்கள்** வித்தியாசமான மனிதர்கள். அதுபோல் அவர்களுக்குக் கிடைக்கும் பொருட்களும் மிகவும் வித்தியாசமானதாகவே இருக்கிறது. அண்மையில் சீனாவின் கடற்றொழிலாளர்கள் சிலர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, அவர்களின் வலையில் சிக்கிய வண்ணத்துப் பூச்சியின் தோற்றமுடைய வித்தியாசமான மீனே இது.

## உயர்ந்த ஆசனம்

**கதிரை** என்றாலும் உட்கார முடியாத அளவுக்கு வானளவு உயர்ந்த இந்த ஆசனத்தைத் தயாரித்திருப்பவர்கள் ஸ்பெயின்காரர்கள். 26 மீட்டர் உயரமான இக்கதிரை, எட்டு மாடிக் கட்டடமொன்றின் உயரத்திற்குச் சமமாகவுள்ளதாம். இக்கதிரை கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடிப்பதற்கென்றே விசேடமாகத் தயாரிக்கப்பட்டது என்று தகவல்கள் கூறுகின்றன.





## கண்காட்சி



**நாய்களுக்கு** விதவிதமான ஆடைகளை அணிவித்து அழகு பார்த்த பல சம்பவங்களைப் பற்றி இதற்கு முன்னரும் நாம் அறிவித்திருக்கிறோம். அவ்வாறான ஃபெஷன் ஷோ ஒன்றே இதுவும், 'டோக்கியோ பெட் ஷோ' என்ற பெயரில் அழைக்கப்படும் இக்கண்காட்சியைக் கண்டுகளிக்க 20,000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் சமுகமளித்திருந்தனர்.

## போத்தல் பயணம்

**ஸ்பெயின்** டெனரிஸ் தீவில் வசிக்கும் ஒரு தம்பதியினர், சிறுவர் பராமரிப்பு இல்லமொன்றுக்கு நிதி சேர்க்குமுகமாக அத்திலாந்திக் சமுத்திரத்தில் மிதந்து நியூயோர்க் செல்லத் திட்டமிட்டுள்ளனர். அதற்காக அவர்கள் தயார் செய்துள்ள பிரத்தியேகப் போத்தல் வாகனமே இது.





அபே - சுனிதா
பை 2

# ‘எனக்கு அழகு....’ - அசின்

“விருது, கிருது குறித்தெல்லாம் நான் கவலைப்படுவதே இல்லை. நல்லா நடிச்சா போதும்” என்று ரொம்ப இயல்பாகப் பேசுகிறார் அசின்.

கேரளாவின் குட்டி தொழிலதிபரான அசின் இப்போது தமிழ் சினிமாவின் குட்டி இளவரசியாக பீடு நடை போட்டு வருகிறார்.

அதிக படங்களில் நடித்து வந்த அசின் இப்போது ஓரிரு படங்களில் மட்டுமே புக் ஆகியுள்ளார். ஆனால் படங்களுக்கு இணையாக ஏகப்பட்ட விளம்பரங்களில் அசின் தலை, முகம், உதடுகளை பார்க்க முடிகிறது.

“என்ன திடீர்னு விளம்பரங்களுக்குப் போய் விட்டீர்கள். பீல்டு அவுட்டா” என்று கேள்வியைப் போட்டதும்தான் தாமதம். அசின் களேபரமாகி விட்டார்.

“சேச்சே, அப்படியெல்லாம் எதுவும் இல்லை சேட்டா. நான் ஆரம்பத்திலிருந்தே மாடல்தானே. முதல்ல விளம்பரப் படங்களில்தான் அதிகம் நடித்தேன். இப்போது சிறு இடைவெளி கிடைத்துள்ளது. அதனால் மறுபடியும் விளம்பரங்களில் நடிக்கிறேன். அவ்ளோதான், மேட்டரை போட்டு மூடிடாதீங்க ப்ளீஸ்” என்று கெஞ்சலாக ஆரம்பித்தார்.

அத்தனை முன்னணி ஹீரோக்களுடனும் நடித்தாகி விட்டது. அடுத்து விருதுக்குக் குறியா என்று அடுத்த கேள்வியை தூக்கிப் போட்டால், சாரி பிரதர், நமக்கு விருது, கிருது மேல் எல்லாம் நம்பிக்கை இல்லை.

அதை நான் எதிர்பார்ப்பதும் இல்லை. நல்லா நடிக்கணும், நல்ல நடிகை, சமத்துப் பொண்ணு அப்படின்னு பெயர் வாங்கினால் போதும். மற்றபடி வேற எந்த எய்மும் எனக்கு இல்லை!


நான் நடித்த படங்களிலேயே எனக்கு ரொம்பப் பிடித்த படமாக இதுவரை இருந்தது எம்.குமரன் சன் ஆப் மகாலட்சுமிதான். இப்போது கஜினிதான் என்னோட பேவரைட் பிலிம்” என புளகாங்கிதப்படுகிறார் அசின்.

கையில் என்ன இருக்கு என்று கேட்டால், பத்து விரல்கள் இருக்கு என்று கிளுகிளுவென சிரித்தவாறு நமக்கே பம்மாத்து காட்டியவர்.

இப்போ மலையாளத்தில் எதிலும் நடிக்கவில்லை. தெலுங்கில் ஒரு படம் இருக்கிறது. தமிழில் அஜீத்துடன் காட்பாதரில் நடிக்கிறேன் என்றார்.

மேலும் விக்ரம் பட வாய்ப்பு ஒன்று வரவுள்ளது. விஜய்யுடன் ஒரு படத்தில் நடிக்கப் போகிறேன். அவ்வளவுதான் இப்போதைக்கு என்றார்.

கொஞ்சம் புஷ்டியாகலாமே என்று யோசனை சொன்னால், ஸ்லிம்மான உடல்தான் அசினுக்கு ரொம்ப அழகு தெரியுமோ என்கிறார் படபடவென.



# சினி விசிட்



## இதுதாண்டா விருது!

‘ஈ’ படத்தில் லோக்கல் ரவுடியாக ஒரு மாதிரியான கெட்டப்பில் நடிக்கிறார் ஜீவா. கடந்த வாரம் ஏவி.எம்.மில் இந்தப் படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தபோது செட்டை விட்டு ரிலாக்ஸாக வெளியே வந்திருக்கிறார் ஜீவா. மறுபடி ஸ்டுடியோவுக்குள் நுழையப்போன போது யாரோ எவரோ என்று சொல்லி செக்யூரிட்டிகள் தடுத்து நிறுத்திவிட்டார்கள். உடனே டைரக்டருக்கு போனைப் போட்டுச் சொல்லவும்...யூனிட் ஆட்கள் ஓடிவந்து ஜீவாவை கூட்டிப்போயிருக்கிறார்கள். இதனால் ஜீவா அப்செட்டில் இருப்பாரோ என எல்லோரும் தயங்கிக்கொண்டிருக்க... “என்னைப் பார்த்து அடையாளம் தெரியாத அளவுக்கு அந்த கேரக்டராவே நான் மாறியிருக்கேன்னா, இதை நான் பெரிய விருதா நினைக்கிறேன்” என பாஸிட்டிவாக எடுத்துக் கொண்டிருக்கிறார் ஜீவா.



பிரவீன்காந்த் - குருளின் சோப்ரா
துள்ளல்

## ரஜினியின் சூப்பர் பைட்

ராயல் மியூசிக் சென்டர் என்கிற ஒரு கண்ணாடி மாளிகை செட்டப்பில் ஸ்டண்ட் மாஸ்டர் பீட்டர் கெய்ன் இயக்கத்தில் ரஜினி அதிரடி ஆக்ஷன் பண்ணும் காட்சி ஒன்று ‘சிவாஜி’ படத்துக்காக சில நாட்களுக்கு முன் எடுக்கப்பட்டது. இதற்காக 80 லட்ச ரூபா செலவில் இந்தக் கண்ணாடி மாளிகை செட்டை அமைத்திருக்கிறார் தோட்டாதரணி. ரஜினி ஜீன்ஸ் பேன்ட்டும் டி-ஷர்ட்டும் போட்டுக்கொண்டு ‘நான் சிகப்பு மனிதன்’ பட ஹேர்ஸ்டைலில் வில்லன்களை பஞ்ச் பண்ண, அவர்கள் கண்ணாடிகளை உடைத்துக்கொண்டு வெளியே விழும் காட்சிகள் எடுக்கப்பட்டன. அப்படி வெளியே விழுந்த சில ஸ்டண்ட்மேன்களுக்கு ஆங்காங்கே கண்ணாடி குத்தி காயம் ஏற்பட...அருகிலேயே தயாராக இருந்த மருத்துவடீம் உடனடி சிகிச்சையை மேற்கொண்டிருக்கிறது. இந்தச் சண்டைக் காட்சியில் டி.ராஜேந்தர் ஸ்டைலில் பாட்டுப் பாடிக்கொண்டே சண்டை போடுகிறாராம் ரஜினி. ஆனால் டி.ஆர்.அளவுக்கு ‘வாடா எம்மச்சி வெங்காய பஜ்ஜி’ போல் இருக்காது என நம்புவோம்.



அஜித் - சதா
திருப்பதி

## அரசன் வேலு - ஒற்றன் காளை!

‘இம்சை அரசன் 23ஆம் புலிகேசி’ ஒரு நகைச்சுவையான அரசர் காலத்துப் படம். இதில் அரசராக வடிவேலுவும் ஒற்றனாக முத்துக்காளையும் ஜோடி போட்டுக் குமுறுகிறார்கள். அந்தச் சந்தோஷத்தில் இருந்த முத்துக்காளையை, கோடம்பாக்கம் படத்தில் சிறப்பாக நடித்ததற்காகப் பாராட்டினோம்.

“நீங்க மட்டுமில்லேண்ணே, இந்தப் படத்தால எனக்கு தெலுங்குலயும் நடிக்க வாய்ப்பு கிடைச்சிருக்கு. உதயசங்கர் டைரக்ஷன்ல மீராஜாஸ்மின் நடிக்கிற புதுப்படத்தில் காமெடி ரவுடியாக நடிச்சிக்கிட்டிருக்கேன். இதுபோக ஜில்லுனு ஒரு காதல், நாளை, யாமிருக்க பயமேன், சுதேசி, பேரரசு, வீராசாமின்னு லிஸ்ட் நீளுதுண்ணே” என்றார்.


அதெல்லாம் சரி... ‘ஸாரி எனக்கு கல்யாணமாயிடிச்சி’ படத்துல ஷகீலாவோட மன்மதராசா ஆட்டம் போட்டீங்களே? இப்போ கோடம்பாக்கத்துல தேஜாஸ்ரீக்கு சைக்கிள் ஓடச் சொல்லித்தாரேன்னு இடுப்பையெல்லாம் புடுச்சி ஏடாகூடம் பண்ணிட்டீங்க போல?

“என்னண்ணே இப்படிச் சொல்லிட்டீங்க” என வெட்கப்பட்ட முத்துக்காளை, அந்த அனுபவத்தைச் சொன்னார்.

சொல்லாவிட்டால் அவரை யார் விட்டது?


“எத்தனை டேக் ஆனாலும் பரவாயில்ல. கூச்சப்படாம தேஜாஸ்ரீயின் இடுப்பைப் புடி. கூச்சப்பட்டுக்கிட்டு சரியா புடிக்காம இருந்தா நான் விடமாட்டேன். எனக்கு திருப்திவர்ற வரைக்கும் நீ இடுப்ப புடி என கேமராமேன் யு.கே.செந்தில்குமார் சொல்லிட்டாரு. அப்புறம் என்னண்ணே பண்ண முடியும்” என தன் உள்ளங்கையை உற்றுப் பார்த்தபடி சொன்னார்.

இன்னொரு சந்தோஷமான செய்தி! முத்துக்காளைக்கு குட்டிக்காளை ஒன்றும் இன்னும் ஆறேழு மாதங்களில் பிறக்கப் போகிறதாம்.



அஜித் - சதா
திருப்பதி





விவேக் - சாயாசிங்
சொல்லி அடிப்பேன்

## பொலீஸ் ஸ்டோரி

365 நாட்களும், 24 மணி நேரமும் ஓய்வின்றி பணியாற்றும் கண்ணியமான காவல்துறையின் கடமை வீரர்களைச் சித்தரிக்கும் இமயவரம்பன் இ.கா.பா. படத்தில் சம்பத்குமார், வடிவுக்கரசி, பயில்வான் ரங்கநாதன், அமரசிகாமணி, ஜோதிஷா, ரகு, ஹரி, சிவ நாராயண மூர்த்தி, கவிதா பாலாஜி மற்றும் பலர் நடித்து வருகின்றனர். இப்படத்தில் கௌரவ வேடத்தில் முன்னணி நடிகர் ஒருவரும் முன்னணி நடிகை ஒருவரும் பங்குபெற உள்ளனர்.

ஓய்வுபெற்ற காவல் துறைக் கமிஷனர் அவர்களின் இல்லத்தில் படப்பிடிப்பு தொடங்கி தொடர்ந்து நடந்துவருகிறது.

டிஜிட்டல் ஃபிலிம் வடிவில் தியேட்டர்களில் திரையிடப்படும் வகையில் இப்படம் தயாராகி வருகிறது. இமயவரம்பன் இ.கா.பா. உலகத் திரைப்பட விழாவிலும், இந்தியத் திரைப்பட விழாவிலும் திரையிடப்படும். தமிழகக் காவல்துறைக்கு அர்ப்பணம் செய்யப்படும் இந்தக் குறும்படம், தேசிய திரைப்பட வளர்ச்சித்துறை, தமிழ்த் திரைப்பட வளர்ச்சித்துறை, தேசிய குறும்படத் தேர்வுக்குழு போன்ற பலவேறு துறைகளின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.




பிரசாந்
தகப்பன்சாமி

## 'சேத்னாவின் இரவுகள்'

ஹிந்தியிலிருந்து தமிழுக்கு வரும் படம் 'சேத்னாவின் இரவுகள்' சில பெண்கள் பணத்திற்காக பகட்டான வாழ்விற்காக ஈஸியான வழியென்று விபசாரத்தில் சிக்கிக்கொள்கிறார்கள். இவர்களுக்கு மத்தியில் அஞ்சலி தன் தோழி வீட்டில் தங்கி தன் குடும்பத்தைக் காப்பாற்ற நேர்மையாக உழைக்கிறாள். ஆனால் இப்படியெல்லாம் நேர்மையாக உழைத்தால் எப்படி முன்னேறுவது என அஞ்சலியின் தாயே மிரட்டி அஞ்சலியை விபசாரத்தில் ஈடுபடுத்துகிறாள். இந்த வாழ்க்கையிலிருந்து அஞ்சலி எப்படி மீள்கிறாள் என்பதே 'சேத்னாவின் இரவுகள்' படத்தின் கதை.

இந்தப் படத்தில் ரீனாகபூர், சோனாலி, டிம்பிள், மனிஷா என ஏகப்பட்ட இளம் பெண்கள் நடித்திருக்கிறார்கள்.



## இசையமைக்கும் வக்கீல்!

வழக்கறிஞர்கள் மத்தியில் ஜெரோம் புஷ்பராஜ் என்ற பெயர் 'பாப்புலர். இவர் வக்கீலாக 25 ஆண்டுகளுக்கு மேல் பெயரும், புகழும் பெற்று முன்னணியில் இருக்கிறார். இவருக்கு இருக்கும் இசை ஆர்வத்தைப் பார்த்த அருண்பாண்டியன் 'விகடன்' படத்திற்கு இசையமைப்பாளராக அறிமுகம் செய்தார். விகடன் படத்தில் நல்ல பெயர் கிடைக்கவும் அதைத் தக்கவைத்துக்கொள்ள மேலும் சில படங்களுக்கு இசையமைத்து வருகிறார்.

தற்போது சத்ரபதி படத்தை இயக்கிய ஸ்ரீமகேஷ் இயக்கும் 'பார்க்கணும்போல இருக்கு' படத்திற்கு இசையமைத்து வருகிறார். அத்துடன் வேலு பிரபாகரன் இயக்கும் 'காதல் அரங்கம்' ராதாபாரதி இயக்கும் 'இளமை புதுமை' சுப்ரமணி இயக்கும் 'சூறாவளி' போன்ற படங்களுக்கும் இசையமைத்துக் கொண்டிருக்கிறார்.

## ப்ளே பாய்ஸ்

இதேபோல் ஹிந்தியிலிருந்து தமிழுக்கு வரும் இன்னொரு படம் 'ப்ளே பாய்ஸ்'. கிரண், சங்கீதா திவாரி, சொப்னா ஆகியோர் நடித்திருக்கிறார்கள்.




பிரசாந்
தகப்பன்சாமி



## கோடம்பாக்கத்தில் கோழிக் காய்ச்சல்!

ஊரெல்லாம் பறவைக் காய்ச்சல் பயத்தில் கோழி சாப்பிடாமல் இருக்கிறார்கள் மக்கள். ஆனால் கோலிவுட்டில் உற்சாகமாக இருக்கிறது 'வெடக்கோழி' விவகாரம்.

மங்கை அரிராஜன் தயாரிப்பில் மும்பை விபசார விடுதியைப் பின்னணியாகக் கொண்டு தயாராகும் படம் 'வெடக் கோழி'. இந்தப் படத்தில் மும்தாஜ் உட்பட ஏற்கனவே சில கவர்ச்சிக் கோழிகள் நடித்து வருகிறார்கள். போதாக்குறைக்கு இப்போது மாளவி காவும் படு கவர்ச்சி காட்டி நடித்து வருகிறார்.

பிராய்லர் கோழியால் 'பறவைக் காய்ச்சல்' வருமென்றால், வெடக் கோழியால் 'வாலிபக் காய்ச்சல்' வரும் போலிருக்கே.

## திருப்பதி

ஏவி.எம். தயாரிப்பில் பேரரசு இயக்கத்தில் அஜீத் நடிக்கும் 'திருப்பதி' செம ஸ்பீடில் படப்பிடிப்பு நடந்துவருகிறது. படத்தைப் பற்றி டைரக்டர் பேரரசு சொன்ன சில பாயிண்டுகள் :

அஜீத், சதா, ரியாஸ்கான், லிவிங்ஸ்டன், அருண்பாண்டியன், கஞ்சா கருப்பு, கெஸ்ட்ரோலில் மல்லிகா, தங்கச்சி ரோலில் தீபு நடிக்கிறார்கள்.

நான் ஆட்டோ டிரைவராக நடிக்கிறேன்.

படத்தில் ஆறு பாடல்கள். இதில் ஒரு பாடல் மட்டும் மென்மையாக இருக்கும். பாக்கி 5 பாட்டும் அலப்பற பாட்டுதான்.

கோயில் திருவிழாவில் 2000 துணை நடிகர்களோடு 'திருப்பதி வந்தா திருப்பம், தீப்பொறி போல இருப்போம்' என்கிற பாடலை எடுத்திருக்கிறோம்.

சொல்லவும் முடியல, மெல்லவும் முடியல என்கிற பாடல் வெளிநாட்டில் படமாக்கப்பட்டுள்ளது.

கீரை விதைப்போம் வாடா கோமாளி என்ற பாடலை பொள்ளாச்சியில் எடுக்கிறோம். 6 பாடல்களைப் போலவே அனல் பறக்கும் 6 சண்டைக் காட்சிகளும் படத்தில் உண்டு. கிளைமாக்ஸ் காட்சியில் டூப் போடாமல் ஒரு கார் சேஸிங் ஃபைட்டில் அசத்தியிருக்கிறார் அஜீத்.

## காமெடியன் அஜீத்!

### -சொல்கிறார் ஒரு காமெடியன்

அஜீத் அதிரடியாய் ஆக்ஷன் பண்ணுவார். அழகாய் காதல் பண்ணுவார். இதெல்லாம் தெரியும். காமெடி பண்ணுவாரா?


பண்ணுவாரா...காமெடியில் பட்டையைக் கிளப்புகிறார் என்கிறார் பெஞ்சமின்.

விஜய்யுடன் 'திருப்பாச்சி'யில் நண்பனாக நடித்த பெஞ்சமின் இப்போது அஜீத்தின் 'திருப்பதி'யில் நண்பனாக நடிக்கிறார். திருப்பாச்சிக்குப் பிறகு செலக்டிவ்வாக படங்கள் செய்ய வேண்டும் என நினைத்திருந்த பெஞ்சமினுக்கு 'திருப்பதி' ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

படப்பிடிப்பில் அஜீத் காமெடிக் காட்சியில் நடிப்பதைப் பார்த்து காமெடியனான் நானே விழுந்து விழுந்து சிரித்தேன். ஆக்ஷன், செண்ட்டிமெண்ட், காமெடி என ஒரு பெரிய வெற்றிப் படமாக வரப்போகுது திருப்பதி. இந்தப் படம் மூலம் எனக்கும் ஒரு நல்ல பெயர் காத்திருக்கிறது என்கிறார் பெஞ்சமின்.

திருப்பதி தவிர வீராசாமி, சொல்லி அடிப்பேன், கைவந்த கலை எனப் பல படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார் பெஞ்சமின்.

படப்பிடிப்பு இல்லாத நாட்களில், பெஞ்சமின் ஆட்டோகிராப் என்கிற தனது இசைக்குழு மூலம் இசைநிகழ்ச்சிகள் நடத்துகிறார்.






ரஜினி
சிவாஜி




## அழைப்பிதழ்

நீயும் நானும்
எச்சில்படுத்தி
துப்பிய இனிப்பை
எறும்பு கூட
சுவைக்கவில்லை...
நம் காதலின்
புனிதம் கெட்டுவிடுமென்று...
என் வீட்டுத் தோட்ட
ரோஜாச் செடியும்
பிரசவத்தை
நிறுத்திக் கொண்டது
நம் காதல்
தடைபட்டதிலிருந்து...
நன்கு தெரியும் உனக்கு
உன்னைத் தவிர யாரும்
என் மனதிலில்லையென்று.
ஆனால்
எனக்குத் தான்
தெரியாது போனது
உன் மனதிலே
இன்னொருவனுக்கும்
இடமிருந்ததென்று.
உன் திருமணத்துக்கு
எனக்கும்
அழைப்பிதழ் கொடுத்திருந்தாய்.
நானும் பதிலுக்காய்
உன்னை அழைக்கிறேன்
என் திருமணத்துக்கல்ல;
சாவுக்கு!
கணவனோடு வா...

*–ஏத்தாலையூர் முஹம்மது இன்பாஸ்.*

## நீ தேடும் சிகரம்!

உனது
தோல்வியும்
வெற்றியும்
உன்னிடமே
இருக்கின்றன.
அதைத் தீர்மானிப்பது
உன்
முயற்சி அளவுதான்!

உனது
ஓய்வுக்குள்தான்
விழித்திருக்கிறது
உனது தோல்வி!

பல மடங்கு
பாரம் சுமக்கும்
எறும்பை விடவா
சிறியவன்
நீ!

நீயே
தோண்டி
நீயே
விழுந்து புதைகின்ற
குழிதான்
விரக்தி!

கவலையின் போதுதான்
நீயே
உனக்குத் தெரிகிறாய்

இருள் சூழ்ந்ததும்
விண்மீன்கள்
தெரிவது போல!

விழுந்தால்
எழுந்திடலாம்
சாய்ந்தால்
நேராகிவிடலாம்
குனிந்தால்
நிமிர்ந்திடலாம்
ஆனால்
உடைந்து போகாதே!

நிச்சயம்
முத்துக்கள் கிடைக்கும்
உன்
வியர்வைக் கடலில்
நீ மூழ்கும் போது!

உன் வாழ்க்கையை
நீயே கொல்கிறாய்
நீ
சோர்ந்து போகின்ற
ஒவ்வொரு
நிமிடங்களிலும்.

உன் உழைப்பில்
இருக்கிறது
நீ
தேடும் சிகரம்!

## காதலர் தினம்


என் வாழ்வு மீது படர்ந்திருக்கும்
என் அன்பின் மீது
சத்தியம் செய்கிறேன்
இந்தத் தினம்
பொருத்தமானது என்பதனால்!

எனது இரவாகவும் பகலாகவும்
நான்காண்டு காலமாய்
ஆகிப் போயிருக்கும் நீ!
என் சுவாசத்தில்
மூச்சுக் காற்றாய் கலந்திருப்பது
என் பிறப்பின் பாக்கியமல்லவா!


எதிர்ப்பு, ஏச்சுப் பேச்சு
எல்லாக் காதலுக்கும்
ஏற்படக்கூடியதுதான்
ஆனால்
ரோசாப் பூ மாதிரியான
காதலுக்கு
பெரும் புயலின் வல்லமையும்
இருக்கிறது.

அதனால்தான்
காதலை இதயத்தில்
சுமக்கின்ற நமக்கு
வேதனை விளங்குவதில்லை.

தூங்கு முன் நினைப்பது
தூங்குகையில் கனவில்
மிதப்பது,
காணுகிற நிலவில்,
பூக்களில்,
நட்சத்திரங்களில்
உன் முகத்தைக் கற்பனை
பண்ணுவது போன்ற
காதலின் பரம்பரை நாகரீகம்
இன்னும் என்னோடிருக்கையில்
உன் அன்பின் சிறைக்குள்
அகப்பட்டுக் கிடக்கத்தான்
ஆசைப்படுகிறேன்!



இது சர்வதேச
காதலர் தினம் என்கிறார்கள்
உன்னை நானும்
என்னை நீயும்
சுவாசிக்கும்
இந்த உயிர்க்
காதலின் ஸ்பரிசத்தில்
இந்தக் காதலர் தினம்
நம்மிருவருக்கு மட்டும்
வந்ததாகத்தான் நான் உணர்கிறேன்.



*–காவத்தமுனை ஜாபிர் எச்.எம்., குவைத்.*

## புரியவில்லை!

நம்
நட்பின்
மிச்சமாய்
எஞ்சியிருப்பது
கண்ணீரும்
கசப்புணர்வும் தான்
எனக்கு...

விடிகின்ற
ஒவ்வொரு
பொழுதும்
உன்
ஞாபகங்களை
நினைவூட்ட....
உன்னை
மறக்கவும்
முடியாமல்
வெறுக்கவும்
முடியாமல்
தடுமாறுதென்
மனது.

எல்லாம்
முடிந்த
பின்னும்
என்
இதயம்
மட்டும்
உன்னையும்
உன்
நினைவுகளையும்
சுற்றி வருகிறது
இதுதான்
உண்மையான
நட்பா?
புரியவில்லை
உனக்கு...

*–அகிலா ஜெகதீஸன், நாவலப்பிட்டிய.*

## நிலையான பாசம்

நேற்றைய காற்றுடன்
பழைமைகளின்
கஜானாக்களின்
இத்துப் போன
நினைவுகளோடு
தடம்புரளும்
தன்னம்பிக்கையும்...

குளோனிங் நினைவுகளோடு
என்
வாடகை மூச்சுக் காற்றுக்கும்
சில
வாக்குவாதங்கள்...!

இருபத்தொராம்
நூற்றாண்டிலும்
காதலுக்காய்
கசங்கிய இதயத்துடன்
தினமும்...
தாவணிகளின்
தண்டிப்புக்களுடனும் -
ஓர்
கருத்த காளையனின்
கனவுகள் இவை...!

அவளைப் பற்றிய
ஆரவாரிப்புக்களோடே
மரணக் கடலில்
மூழ்கிச் சாகும்
மனசு...!

நேற்றுப் பெய்த
மழையில்
நட்சத்திரங்கள் - சில
நனைந்து
போனாலும்...
உன்
வீடு தாண்டி வந்த
தென்றல் கொஞ்சம்
தடுக்கி விழுந்தாலும்...
ஒளித் தொகுப்பு
இல்லாமலே
பூக்கள் பல
பூத்து நின்றாலும்...
என்
நிலையான பாசத்தில்
தடுமாற்றம்
ஏதுமில்லையடி....!

*–புத்தளம் நஸீம்ரூமி.*

## ஏமாற்றுத் தேர்தல்கள்!

பதவிகளின் ஆசையினால் தலைவரெல்லாம்
பகை மறந்து எம் வாசல் வருவார்கள்.
உதவியெலாம் புரிவோமெனும் பழங்கதைக்கு
ஊடகங்கள் தனைவாங்கிக் கொள்வார்கள்.
விதவிதமாய் நிறமெடுத்து சின்னத்தோடு
வீதிவலம் வந்தெம்மை அணைப்பார்கள்.
கதவடைப்புச் செய்யாமல் வாக்கைத் தம்
கட்சிக்காய் இடச்சொல்லிக் கேட்பார்கள்.

யார் மானம் போனாலும், போகட்டும்
யாமிங்கு வந்திட்டால் அதற்காகவோர்
தீர்மானம் எடுத்ததனை மீட்போமெனும்
தீர்மானம் உள்ளதெனச் சொல்வார்கள்.
தீர்மானம் எடுப்பதற்கோர் தீர்மானந்
தீர்மானிக்க தீர்மானமிலா நிலையில்
போர் வாழ்வை முடிப்போமெனும்
பொய்யதனை
புதுமொந்தை பழங்கள்ளாய் நெய்வார்கள்.

தமக்குள்ளே இருக்கின்ற பூசல்களை
தார்மீக வழிதீர்க்கா இவரெல்லாம்
நமக்கென்ன செய்தார்கள்? செய்வார்கள்?
நாமிங்கு நினைத்தேதான் பார்த்தாலும்
எமக்கென்று இருக்கும் கள்ளவோட்டு
என்றைக்கும் காப்பாற்றும் என எண்ணும்
எமனுள்ள நாட்டினிலே என்றைக்கும்
ஏமாற்றுத் தேர்தல்கள் தழைத்தோங்கும்.

*–மெய்யன் நட்ராஜ், டோஹா – கட்டார்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

உலக வலம் வரும் இணையங்களை எம்நாட்டு மற்றும் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்கள் தமது உள்ளத்திலிருக்கும் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாகப் பயன்படுத்துகிறார்கள் அந்த வகையில் இங்குள்ளவையும் தமது தாயக உறவுகளையும் தாங்கள் பட்ட துன்பங்களையும் மறக்கமுடியாமல் பல இளம் கவிஞர்கள் தங்கள் பங்கிற்கு வடித்த கவிதைகளின் சில துளிகள் இவ்வாரம் சிறப்புக் கவிதைகளுக்காக:



முரசின் கவிதை பயிற்சிக்களம் பகுதியில் புதிய கவிஞர்களின் வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமது கவிதை வெளியீடுகளை அல்லது வெளியிடப்படவிருப்பவற்றை வெளிக் கொண்டுவர விரும்புவோர் முரசுடன் தொடர்பு கொள்ளலாம்.

## காதல் சுகமென்று...

காதல் சுகம்தான்...
வாழ்க்கையை வென்றவர்க்கு காதல்
சுகம்தான்.

ஆனால் இங்கே வயதையும்
வாழ்க்கையையும்
காதலுக்கென்று விற்று விட்ட ஒரு கூட்டம்
காதல் சுகமென்றும், மற்றொரு கூட்டம்
காதல் சுடுமென்றும் சொல்லித் திரிகிறது.

குடும்பத்தையும் நாட்டையும் தாங்கி
நிற்க வேண்டிய வலிமைத் தூண்கள்
முதுகெலும்புகளை களவு கொடுத்துவிட்டு
முகத்தில் முள் முளைக்க
விட்டிருக்கிறார்கள்
காதல் தோல்வியாம்...

பூகம்பம் நிகழ்த்தப் பிறந்த இளைஞர்கள்
பூக்கள் மோதி உடைந்து போகிறார்கள்.
கல்யாணத்திற்கு எதிராகவே பலர்
காதலிக்க ஆரம்பித்துவிட்டதால்
அந்த உள்ளங்களின் யதார்த்தம்
வெறும் இனக்கவர்ச்சியின்
இன்னொரு முகமாகிப் போனது.

வாழ்க்கையின் அந்த வெயில் மறைவுப்
பிரதேசம் நமக்கு வேண்டாம் நண்பா.
உன் கனவுகளை கையெறி குண்டுகளால்
காயப்படுத்திய என்னை கண்டிக்கும் முன்
காதலித்துப் பார் என்று கத்திக்
கொண்டிருக்கும்
கவிஞர்களை நகர்ந்து நிற்கச் சொல்.

இப்படி வா...
நாம் முதலில் வாழ்க்கையை வாழ்ந்து
பார்ப்போம்.

*–எட்வின் பிரிட்டோ.*

## இன்னொரு இருள் தேடும்...

செருகும் கண்களுக்குள்
உருகும் பனி தனியல்
நனைந்த மலரொன்று
காதலென்று கனவில் வந்து
காதோடு கதைத்தது.
பற்றிய விரல்களோடு
பயணித்தது சிகரம் நோக்கி
உச்சியில் சென்றது மெல்ல
உருமாறி மணமாய் நிறைந்து
மறைந்து போக
விழித்த விழியதனில்
விரல்களில் மலர்வாசம்
கண்டுநாசி நுகர
இழுத்தடக்கிய மூச்சுடன்
இன்னொரு இருள் தேடி காத்திருப்பு
மின்னும் நட்சத்திரங்களை
எண்ணியபடி மல்லாந்திருக்க
விடியல் தேடும் மனிதர்களை
விந்தையென நொந்தபடி.

*–திலகபாமா, சிவகாசி.*

## மரணம்

தினம் தினம் உயிருடன் மரித்தது போய்
திடீரென நிரந்தரமாய் இன்று...

ஆயிரம் மைல்கள் தாண்டி வந்து
அழுது முடித்து காத்திருக்கும் மகன்...

கால் தொட்டு கும்பிட்டு கண்ணீர்
வரவழைத்து
கதவோரம் கவலையாய் மருமகள்...

கட்டிப் பிடித்து கதறியழுது கண்சிவந்து
காயா கண்ணீர் கோட்டுடன் மகள்...

இணைபிரியா நட்பு சொல்லிக்காமல்
போனதாய்
இதயமும் கண்ணீர் கசியும் நண்பர்கள்...

இருசொட்டு கண்ணீர் சிந்தி
'இன்னைக்கே எடுத்து வாங்களா?' என
உறவுகள்...

பெரியவர்கள் கண்ணீர் பார்த்து
பெருங்குரலெடுத்து பேரன்கள்...

காணும் கண்களில் எல்லாம் காவிரி
இருக்க
வறண்டு போன வைகையாய் நான்
மட்டும்!

அழுதிடு எனும் அறிவுரைகள்...
அழவேயில்லை எனும் ஆதங்கங்கள்
அழலையா எனும் ஆச்சர்யங்கள்...

அவர்களுக்குத் தெரியாது

திரவ உணவுக் குழாய்களும்
திறவத் திராணியற்ற கண்களும்
செயற்கை மூச்சுக்காற்றும்
செல்லரித்துப்போன அணுக்களும்
படுக்கையிலே குளியலும்

படுத்தே புண்ணாய்ப் போன உடம்பும்...

உயிரோடு தினம் மரித்தவர் கண்டு
அழுதழுதே அமைதியாகிப் போனேன்
நான்...

'அதை ரொம்ப நேரம் வச்சிருக்க
மாட்டாங்க...'
யாரோ சொல்வது கேட்க
விரக்திப் புன்னகை வெளியே தெரியால்
விட்டம் வெறிக்கிறேன்...


அவர் அதுவாகிப்போனது அவர்களுக்கு!
அது அவராகிப் போனார் எனக்கு...!

*–ஜெயந்தி சேது*


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : யே.அருள் பிரேமதாஸ்
வயது : 26
முகவரி : P.O.Box - 40209,
Doha - Qatar.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி



பெயர் : இ.சிவகுமார்
வயது : 20
முகவரி : பிரதான வீதி,
பனிச்சங்கேணி, வாகரை.
பொழுதுபோக்கு : வானொலி,
பத்திரிகை.



பெயர் : கு.குகதாசன்.
வயது : 27
முகவரி : P.O.Box - 40209,
Doha - Qatar.
பொழுதுபோக்கு : பத்திரிகை




பெயர் : எம்.எச்.எம். சியாட்.
வயது : --
முகவரி : தீகவாபி வீதி, குடிவில்,
இறக்காமம். (E.P)
பொழுதுபோக்கு : வழமையானவை




# தொங்கும் திரை

**வீட்டின்** தொங்கும் திரைகளை சுவற்றின் நிறம், சுவற்றிலுள்ள கலைப்பொருட்கள் மற்றும் ஃபர்னிச்சர் ஆகியவற்றுக்கு ஏற்றபடி அமைக்க வேண்டும். அதற்காக நீங்கள் தொங்கும் திரை அமைப்பவர் அல்லது தையல்காரராக இருக்க வேண்டிய



அவசியமில்லை. தொங்கும் திரையைத் தேர்ந்தெடுக்க உங்களுக்கு உதவும் சில குறிப்புகள் பின் வருமாறு :

தொங்கும் திரையைத் தேர்ந்தெடுக்கப் பல விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். முதலில் நாம் கவனிக்க வேண்டியது நம் பட்ஜெட். எவ்வளவு காலம் நாம் இந்தத் திரைகளைப் பயன்படுத்துவோம் என்பதையும் கவனத்தில் கொண்டு, அவை முழு நீளத்துக்கு அமைக்கப்பட வேண்டுமா? ஒளி ஊடுருவக் கூடியதாக இருக்க வேண்டுமா? பட்டுத் துணியால் அல்லது சாதாரண துணியால் அமைக்க வேண்டுமா? என்பதைக் கவனிக்க வேண்டும். அடிக்கடி விருந்தினர் உபசரிக்கப்படும் வீட்டில் ஆடம்பரமான தொங்கு திரை அமைக்க வேண்டும். வாடகைக்குத் தொங்கும் திரை வாங்குபவர்கள் ஒளியை மறைக்க அல்லது ஜன்னலை மறைக்கத் தேவையானதை வாங்குவார்கள்.

அடுத்து டிசைன், ஸ்டைல் மற்றும் நிறம் பற்றித் தீர்மானியுங்கள். கட்டிடத்தின் அமைப்பு இதற்கு உங்களுக்கு உதவும். பண்டைய காலக் கட்டிடம் மற்றும் உயரமான அறைகள் உள்ள வீடுகளில் பழங்கால ஓவியங்கள் உள்ள தொங்கும் திரைகளை அமைக்கலாம். நவீன காலக் கட்டிடங்களில் நவீன டிசைன் போட்ட தொங்கும் திரைகளை அமைக்கலாம். சுவரின் நிறம், ஃபர்னிச்சர் நிறம், தரையின் நிறம் ஆகியவற்றுக்கு ஒத்துப் போகும் நிறம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள துணியின் மாதிரியை கடையில் கேட்டு வாங்கி அதை திரை தொங்கும் இடத்தில் வைத்துப் பார்க்கவும். இது நீங்கள் நல்ல துணியைத் தேர்வு செய்ய உதவும்.

வீட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக நிறம், டிசைன் ஆகியவற்றில் தொங்கும் திரை தேர்ந்தெடுப்பவர்கள் குறைவு. ஹால், சாப்பாட்டு அறை, படுக்கை அறை எனத் தனித்தனி நிறச் சுவர் இருந்தாலும் எல்லாவற்றுக்கும் பொதுவாக ஒரே நிறம்



மற்றும் டிசைனில் துணி எடுப்பவர்கள் அதிகம். அப்படி ஒரே துணியை எடுக்கும் போது கூட, மற்ற அறைகளின் நிறத்துக்கு நேர் மாறானதான துணி எடுப்பதைத் தவிர்க்கவும்.

எந்த விதமான கம்பி, வளையங்கள் உங்கள் ஜன்னல்களில் உள்ளன என்பதையும் நினைவில் வைப்பது முக்கியம். உதாரணத்திற்கு பூ போன்ற வடிவில் ஜன்னல் கம்பிகள் இருந்தால் பூக்கள், இலைகள் போன்ற வடிவங்கள் உள்ள தொங்கும் திரைகள் வாங்குவது நல்லது.

# பெண்களை மிளிர வைக்கும் ஜாக்கெட்

**பெண்கள்** பலர் விதவிதமான சேலை வாங்கி அணிகிறார்கள். ஆனால் அதற்குப் பொருத்தமான கலரில் ஜாக்கெட் அணிவ தில்லை. இதனால் அப்பெண்ணின் தோற்றம் அழகற்றதாகவே இருக்கிறது. இது பெரும் பாலான பெண்களுக்குத் தெரிவதில்லை. தாங்கள் தேர்ந்தெடுத்த ஜாக்கெட் நிறம் தான் சேலைக்குப் பொருத்தமாக இருப் பதாக நினைத்துக் கொள்கிறார்கள்.



உங்களது சேலையில் ஒன்றுக்கும் மேற்பட்ட பளிச் நிறங்கள் இருந்தால் ஒரு வண்ணத்தில் ஜாக்கெட்டும் முதுகுப் புறங் களில் வேறொரு வண்ணத்தில் டிசைனும் செய்தால் அழகாக இருக்கும்.

டிசைனர் ஜாக்கெட்டுக்களை சாதாரண நேரங்களிலெல்லாம் அணிவது நன்றாக இருக்காது. திருமணம் போன்ற விசேஷ நாட் களில் இத்தகைய ஜாக்கெட்டுகளைப் பயன் படுத்தலாம்.

பொதுவாகச் சொல்ல வேண்டுமானால் சேலையின் பார்டர் நிறத்தில் ஜாக்கெட் அணிந்தால் பார்ப்பதற்கு எடுப்பாக இருக் கும்.

ஒரு வேளை பார்டர் இல்லாத சேலை எடுத்திருந்தால் அந்தச் சேலையில் எந்த நிறம் கண்ணைப் பறிப்பதாக இருக்கிறதோ அந்த நிறத்தில் ஜாக்கெட் தைத்து அணிய லாம். கடந்த சில ஆண்டுகளாக, சேலைத் துணியிலேயே அதற்குப் பொருத்தமான நிறத்தில் ஜாக்கெட் துணியும் கிடைக்கிறது. இந்த வகை ஜாக்கெட்டுகளுக்கு லைனிங் கொடுத்துத் தைத்தால் கச்சிதமாக இருக்கும். நீங்கள் ஜாக்கெட் துணியைத் தைக்கக் கொடுப்பதற்கு முன்பு, அதை இஸ்திரி போட்டுக் கொடுப்பது நல்லது. இப்படிச் செய்தால் ஜாக்கெட்டின் அளவில் மாறுதல் ஏற்படாமல் கச்சிதமாக இருக்கும்.

டெய்லரிடம் சரியான அளவுள்ள ஜாக்கெட் துணியைக் கொடுங்கள்.

டிசைனிங் ஜாக்கெட்டைத் தைக்க வேண்டுமானால் பட்டு அல்லது மற்ற வகை அடர்த்தியான துணியைத் தேர்ந் தெடுக்க வேண்டும். இவற்றில்தான் மேற் கொண்டு டிசைன்களைச் செய்ய முடியும்.

தற்போது பெண்களிடம் அதிக வரவேற்பைப் பெற்றிருப்பது குட்டைக் கை ஜாக்கெட், கையில்லாத ஜாக்கெட், டிசைனர் ஜாக்கெட் போன்றவைதான். இந்த கைய ஜாக்கெட் அணியும் பெண்கள் தங் கள் உடல் விசயத்தில் அதிக அக்கறை யுடன் செயல்பட வேண்டும்.

முதுகுப் பகுதியில் நன்றாகச் சோப்புப் போட்டு சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மேலும் இத்தகைய ஜாக்கெட் அணியும் பெண்கள் கச்சிதமான உள்ளாடைகளை அணிவது அவசியம். கையில்லாத ஜாக் கெட் அணிபவர்கள், அதற்கு முன்பு கை யைச் சுத்தமாகக் கழுவிய பிறகு அணிய வேண்டும். ஒல்லியாக இருப்பவர்கள் கையில்லாத ஜாக்கெட் அணிந்தால் எடுப்பாக இருக்காது. அதனால் அதைத் தவிர்ப்பது நல்லது.

# கோடைக்கேற்ற ஆடை

**கோடையின்** கொளுத்தும் வெயிலில் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் அல்லது எங்கேனும் குளிர் பிரதேசத்துக்கு ஹாலிடே ட்ரிப் செல்ல வேண்டும் என்பது தான் அனைவரின் ஆசையாகவும் இருக்கும். ஆனால் கல்லூரி, ஆபீஸ் - அட்லீஸ்ட் கடை வீதிக்காவது போகாமல் இருக்க முடியுமா? இந்தக் கொளுத்தும் வெயிலைச் சமாளிக்க என்ன அணியலாம்?



ஆள் பாதி ஆடை பாதி இல்லையா! கோடைக்கேற்ற ஆடை அணிந்து வெளியில் செல்லவில்லை என்றால், இந்த வெயிலில் பாதி ஆளாகத்தான் வீடு திரும்ப வேண்டி யிருக்கும்.

பிட்டிங்காக அணிய வேண்டும் என்ற பேஷன் ட்ரெண்ட் சிறிது நாள்கள் மறக் கலாம். உடலில் வியர்வையோடு சேர்ந்து வெப்பமும் இந்த பிட்டான ட்ரஸ்ஸால் தங்கி விடும். அதனால் வெயில் நாள்களில் சிறிது தளர்ந்த உடைகளையே அணிவோம். அதற் காக தொள தொள ட்ரஸ் என்று கூற வில்லை. கால்கள் மற்றும் கைகளில் இறுக்க மற்று தளர்ந்து இருக்கும் வகையில் அணிய லாம். ஸ்கர்ட்ஸ் அணிபவரா நீங்கள்? சம்ம ருக்கு ஏற்ற உடை அது.

ஸ்லீவ்லெஸ் உடைகள் அணிவது மிகவும் சௌகரியமாக இருக்கும். ஸ்லீவ் லெஸ் அணிய மாட்டீர்கள் என்றால், குட்டை யான கையுள்ள ஆடைகளை அணியலாம்.

சிந்தடிக், பாலியஸ்டர், ரேயான் - கோடை முடியும் வரை தள்ளி இருங்கள். காட்டன், லினன், சில்க் போன்றவை கோடைக்கேற்ற ஆடைகள். அயர்ன் செய்ய வேண்டுமே - அது தானே உங்கள் கவலை! இளமஞ்சள், வெண்மை, வான்நீலம், பிங்க் போன்ற லைட் கலர் ஆடைகள் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருப்பதுடன் உங்களுக்கும் வெயிலின் உக்கிரம் தெரியாமல் இருக்க உதவும். முழுவதும் கறுப்பு நிறத்திலான ஆடைகளை இந்த வெயிலில் அணிந்து செல்வதைத் தவிருங்கள்.

வெளியில் செல்லும் போது, முகத்தை மறைக்கும் வகையில், தலையில் தொப்பி (ஹேட்) அணிந்து செல்லப் பழகுங்கள். நகை கள் அதிகம் அணிந்து செல்லாதீர்கள். மெட் டல் வெப்பத்தினால் இன்னும் அதிக எரிச்சலை ஏற்படும். உடற்பயிற்சி செய்யும் போது காட்டன் அணிந்து செல்லாதீர்கள். வியர்வை யில் காட்டன் உடைகள் உடலுடன் ஒட்டிக் கொள்ளும்.

மேலே உள்ள டிப்ஸ்கள் உங்களுக்குக் கண்டிப்பாகக் கோடை வெயிலைச் சமாளிக்க உதவும். என்ன கோடையிலும் வெளியில் உலாவத் தயாராகி விட்டீர்களா?

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!


## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி


18

பெயர் : ....................

முகவரி : ....................

AR

தே.அ. அட்டை இல : ....................

கையொப்பம் : ....................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி
முரசு பரிசுப் போட்டி - 17
தினமுரசு வாரமலர்
த.பெ.இல - 1772
கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
25.04.2006

**பரிசுப் போட்டி இல - 16
பரிசு பெறும்
அதிர்ஷ்டசாலி**

**எம். ஸ்ரீதரன்,
155, திருவையாறு, கிளிநொச்சி.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது - ஷோபா -

## ரொட்டி உப்புமா

**தேவையான பொருட்கள் :**

| | |
|---|---|
| ரொட்டி | - 4 அல்லது 5 துண்டுகள் |
| கடுகு | - அரைக் கரண்டி |
| உளுத்தம் பருப்பு | - அரைக் கரண்டி |
| வற்றல் மிளகாய் | - 3 |
| வெங்காயம் | - 2 |
| உப்பு | - அரைக் கரண்டி. |

**செய்முறை :**

முதலில் ரொட்டியைச் சிறு துண்டுகளாகப் பிய்த்துக் கொள்ளவும். ஒரு வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு, கடுகு, உளுத்தம் பருப்பு, வற்றல் மிளகாய் இவற்றை வறுத்துக் கொண்டு, சிறு துண்டுகளாக நறுக்கிய வெங்காயத்தைப் போட்டு உப்பு சேர்த்து சிறிது வதக்கி, 2 கரண்டி நீர் விடவும். வெங்காயம் வெந்தவுடன் ரொட்டித் துண்டுகளைப் போட்டு இரண்டு நிமிடங்கள் கிளறி இறக்கி வைக்கவும்.




"**கைதியே,** எழுந்து நில்!" என்றார் தனது உயிரற்ற குரலில்.

எழுந்து நின்றேன். நீதிமன்றத்தில் முழு நிசப்தம் நிலவியது. எல்லோரும் மூச்சைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். என் இதயம் சிறிது வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. ஜூரர்களில் சிலர் என்னைக் கவனித்தவாறு இருந்தார்கள். மற்றவர்கள் தலை குனிந்திருந்தார்கள் - வெட்கப்பட்டவர்கள் போல.


"கைதியே! எல்லாக் கேள்விகளுக்கும் ஜூரர்கள் 'ஆமாம்' என்று பதிலளித்திருக்கிறார்கள் - திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டதா என்ற ஒரு கேள்வியைத் தவிர. ஆகையால் உனக்கு ஆயுள் தண்டனை விதிக்கிறேன். நீ ஏதாவது சொல்ல வேண்டுமா?"

நான் துவளவில்லை. இயல்பாகவே நின்று கொண்டிருந்தேன். கூண்டின் சட்டத்தைச் சற்று இறுக்கமாகப் பிடித்துக் கொண்டேன். அவ்வளவுதான். "ஆமாம், நீதிபதியவர்களே, நான் சொல்ல நினைப்பது இதுதான்! நான் உண்மையிலேயே நிரபராதி. பொலிசார் செய்த சதிக்கு நான் இரையாகி விட்டேன்."

நீதிபதிகளின் பின்னால் நாகரிகமாக உடையணிந்த சில பெண்கள் - கௌரவப்பட்டவர்கள் - உட்கார்ந்திருந்தார்கள். அங்கிருந்து ஒரு முணுமுணுப்பு என் காதில் விழுந்தது. குரலை உயர்த்தாமலே நான் சொன்னேன்; "மூடுங்கள் வாயை! பணக் கொழுப்பெடுத்து, இங்கே மட்டமான வேடிக்கைகளைப் பார்க்கலாமென்று வந்திருக்கிறீர்கள் நீங்கள். ஆட்டம் முடிந்து போச்சு. உங்கள் கெட்டிக்காரப் பொலிஸும் உங்கள் நீதி முறையும் ஒரு கொலை மர்மத்தை விண்டு விளங்க வைத்து விட்டார்கள். நீங்கள் எதற்காக வந்தீர்களோ அது நடந்து விட்டது!"

நீதிபதி கூறினார்: "வார்டர்! கைதியை அழைத்துச் செல்!"

நான் போகும்போது ஒரு குரல் என்னைக் கூப்பிட்டது; "கவலைப்படாதே, கண்ணே! நான் பிறகு வந்து உன்னைப் பார்க்கிறேன்." - என் அருமைக் காதலி. துணிச்சல்காரி அவள். அவளுடைய காதல் முழுவதும் அந்தக் குரலில் வெளிப்பட்டது. நீதிமன்றத்தில் குழுமியிருந்த என் தோழர்கள் கை தட்டினார்கள். நான் யார் மீதும் பழிபோடவில்லை. எந்த இரகசியத்தையும் வெளிப்படுத்தி விடவில்லை. அதிலே அவர்களுக்குப் பெருமை. அதைக் காட்டும் முறையில்தான் அந்தக் கை தட்டல்.



வழக்குத் தொடங்குவதற்கு முன்னால் நான் இருந்த அதே சிறிய அறைக்கு வந்து சேர்ந்தோம். பொலிஸார் என்கையில் விலங்கை மாட்டினார்கள். ஒரு பொலிஸ்காரர் என் வலது மணிக்கட்டையும் தன் இடது மணிக்கட்டையும் ஒரு சங்கிலியால் இணைத்துக் கொண்டார். ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஒரு சிகரெட் கேட்டேன். ஒன்று கொடுத்த சார்ஜெண்ட், எனக்காக அதைப் பற்ற வைத்துத் தந்தார். ஒவ்வொரு முறையும் அதை வாயிலிருந்து எடுக்கும் போதும், வாயில் வைத்துக் கொள்ளும் போதும் என்னோடு அந்தப் பொலிஸ்காரரும் தன் கையை மேலே தூக்கவும், கீழே இறக்கவும் வேண்டியிருந்தது.

ஏறத்தாழ முக்கால்வாசி சிகரெட்டைப் புகைக்கும் வரையில் நான் அங்கே நின்று கொண்டிருந்தேன். யாரும் எதுவும் பேசவில்லை. நான்தான் சார்ஜெண்டைப் பார்த்து, "போவோம்," என்றேன்.

ஒரு டஜன் பொலிஸ்காரர்கள் புடை சூழ, படியிறங்கிச் சென்றோம். கறுப்பு வண்டி எங்களுக்காக அங்கே

**எழுதியது: ஹென்ரி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

காத்திருந்தது. நாங்கள் பெஞ்சில் அமர்ந்து கொண்டோம்.

நாங்கள் சிறையை அடைந்ததும், தலைமை வார்டரிடம் என்னை ஒப்படைத்தார்கள் பொலிஸ்காரர்கள். அவர் ஒரு காகிதத்தில் - அவர்களுடைய ரசீது - கையெழுத்துப் போட்டார். ஒன்றும் சொல்லாமல் அவர்கள் புறப்பட்டார்கள். ஆனால் போவதற்கு முன் சார்ஜெண்ட் என் விலங்கிட்ட கைகளைக் குலுக்கினார். ஆச்சரியம்தான்.

"உனக்கு எவ்வளவு தண்டனை கொடுத்தார்கள்?" என்று தலைமை வார்டர் என்னைக் கேட்டார்.

"ஆயுள் தண்டனை!"

"மெய்யாகவா?" என்று கேட்டபடி, பொலிஸ்காரர்களைப் பார்த்தார். மெய்தான் என்று கண்டு கொண்டார். அந்த ஐம்பது வயது வார்டர் எவ்வளவோ பார்த்திருக்கிறார். என்னைப் பற்றி எல்லாம் தெரிந்து வைத்திருந்தார். "சோதாக்கள்! பைத்தியம்தான் பிடித்திருக்கிறது அவர்களுக்கு!" என்று என்னிடம் சொல்லும் அளவுக்கு கனிவு இருந்தது அவருக்கு.

மெதுவாய் என் கை விலங்குகளைக் கழற்றினார். தானே என்னைச் சிறைக்கு அழைத்துச் சென்றார் அந்த நல்ல உள்ளம் படைத்தவர். மரண தண்டனை பெற்றவர்கள், பைத்தியங்கள், மிகப் பயங்கரமான கைதிகள், ஆயுள் தண்டனை பெற்றவர்கள் ஆகியோருக்காக ஏற்பட்ட பிரத்தியேகமான சிறை அது.

என்னை உள்ளே அனுப்பிக் கதவைச் சாத்தும்போது, "தைரியமாக இரு. உன்னுடைய சாமான்களையும், உணவையும் உன் பழைய சிறையிலிருந்து தருவித்துத் தருகிறோம். உற்சாகத்துடன் இரு" என்றார்.

"நன்றி. என் மனசு நன்றாய்த்தான் இருக்கிறது. எனக்கு ஆயுள் தண்டனை கொடுத்தவர்கள்தான் செத்துச் சுண்ணாம்பாகப் போகிறார்கள்."

சில நிமிடங்கள் சென்றதும், வெளியே கதவில் யாரோ பிராண்டுகிற மாதிரி சத்தம் கேட்டது. "என்ன" என்றேன்.

"ஒன்றுமில்லை" என்றது ஒரு குரல். "கதவில் மேல் சீட்டு மாட்டுகிறோம். அவ்வளவுதான்."

"ஏன், சீட்டில் என்ன எழுதியிருக்கிறது?"

"ஆயுள் தண்டனை பெற்ற கைதி. எச்சரிக்கையுடன் கண்காணிக்கவும்."

பாறாங்கல் மாதிரி என் தலையில் விழுந்த தண்டனையினால் நான் மனமுடைந்து தற்கொலை செய்து கொள்வேன் என்று இவர்கள் நினைக்கிறார்களா, என்ன? நான் தைரியசாலி. இனிமேலும் எப்போதும் தைரியசாலியாகவே இருப்பேன். ஒவ்வொன்றையும், ஒவ்வொருவரையும் எதிர்த்துப் போராடப் போகிறேன் நான். இதோ, நாளையிலிருந்து போராட்டத்தை ஆரம்பிக்கப் போகிறேன்.

மறுநாள் காப்பி குடித்துக் கொண்டிருந்தபோது, அப்பீல் செய்து கொள்வதா, வேண்டாமா என்று யோசித்துப் பார்த்தேன். அதிலே என்ன அர்த்தம் இருக்கிறது? இன்னொரு நீதிமன்றத்திலே மட்டும் எனக்கு அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறதா என்ன? அதிலே எவ்வளவு காலம் வீணாகுமோ? ஒரு வருடம் ஆகலாம்; ஒன்றரை வருடம்கூட ஆகலாம். பலன் என்ன கிடைத்து விடப்போகிறது? ஆயுள் தண்டனை, இருபது வருடத் தண்டனையாகக் குறையலாம். அவ்வளவுதான்.

ஆயுள் தண்டனை என்றால், தென்னமெரிக்காவில் உள்ள பிரெஞ்சு கயானா சிறைக்கு என்னை நாடு கடத்துவார்கள் என்று எனக்குத் தெரியும்.

எப்படியும் தப்பிவிடுவது என்று நான் முற்ற முழுக்க முடிவு செய்துவிட்டேன். ஆகவே வருடங்களின் எண்ணிக்கையைப் பற்றி எனக்குக் கவலையில்லை.

சிறைக்குள் குறுக்கும் நெடுக்கும் நடந்தேன். என் மனைவிக்குத் தேறுதல் கூறி ஒரு தந்தி கொடுத்திருந்தேன். உலகத்தில் தன்னந்தனியே நின்று இந்தச் சகோதரனைக் காப்பாற்றுவதற்காக அரும்பாடுபட்ட என் சகோதரி ஒருத்திக்கும் ஒரு தந்தி கொடுத்திருந்தேன். எல்லாம் முடிந்தாயிற்று. என்னைக் காட்டிலும் என் உறவினர்களுக்குத்தான் அதிகத் துன்பம். வெகு தொலைவில் கிராமத்தில் வசிக்கும் என் தந்தை, இத்தனை பளுவான துன்பத்தைச் சுமக்கமாட்டாமல் திணறிப்போவார், பாவம்.

நான் நிரபராதி! குற்றமற்றவன்.

'குற்றமற்றவன், குற்றமற்றவன் என்று ஒவ்வொருவரிடமாகப் போய் அளந்து கொண்டிருக்காதே!' என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். உன்னைப் பார்த்துச் சிரிப்பார்கள். ஒரு கொலைக்காக ஆயுள்தண்டனை பெற்றுவிட்டு, கொலை செய்தவன் வேறுயாரோ என்று சொல்லிக்கொண்டு திரிந்தால், சுத்தக் கோமாளித்தனம். வாயை மூடிக்கொண்டு கிட.

ரொம்ப சரி. ஏற்கனவே தண்டனை பெற்றிருக்கும் நபர்களுடன் தொடர்பு கொள்வதுதான் இனி முதல் வேலை.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*

# சாதாரண உலகநாதன் 'கானா' உலகநாதன் ஆகிய கதை

## வெற்றியின் கதை

**சாதாரண** துறைமுகத் தொழிலாளியாக இருந்த உலகநாதன் 'கானா' உலக நாதன் ஆகி இன்று உலகம் அறிந்த உலகநாதன் ஆகி இருக்கிறார்.

அவர் இந்த இடத்தைப் பிடித்தது எப்படி? அவருடைய குடும்பப் பின்னணி



என்ன? அவரே சொல்கிறார்....

சென்னை வியாசர் பாடியைச் நேர்ந்த நான் துறைமுகத் தொழிலாளி. 9 வயதில் இருந்தே எனக்கு கானா பாடல்கள் மீது தனிவிருப்பம். பள்ளியில் நடைபெறும் விழாக்களிலும் கானா பாடல்களைப் பாடுவேன். கானா பாடல்களில் உலக நடப்பு தான் மையக்கருவாக இருக்கும். எனவே கானா பாடல்கள் எனக்கு மிகவும் பிடிக்கும்.

துறைமுக ஊழியராக இருந்தாலும் விழாக்களில் கானா பாடல்களைப் பாடிவந்தேன். பின்னர் ஒரு இசைக்குழுவை வைத்திருந்தேன். சினிமா பாடல்களையும் மேடையில் பாடுவேன்.



சில வருடங்களுக்கு முன்பு என்னை ஆந்திரா துறைமுகத்துக்கு மாற்றினார்கள். அதை எதிர்த்து வழக்கு போட்டேன். இன்னும் அது முடியவில்லை. இந்த நிலையில் நான் முழுநேர பாடகர் ஆகி விட்டேன்.

நானே கானா பாடல்களை எழுதி பாடினேன். 25 க்கும் அதிகமான பாடல் ஆல்பங்களை தயாரித்து இருக்கிறேன். பாடல்களும் பாடியுள்ளேன். புலவர் கபிலன் கானா பாடல் பற்றி ஆய்வு செய்தார். அப்போது அவருடன் நட்பு ஏற்பட்டது. அவர் மூலம் 'மச்சி' படத்தில் பாடிய 'கும்மாங்கோ' பாடல்தான் நான் முதன்முதலில் சினிமாவில் பாடிய பாடல். இந்தப் பாடல் பிரபலமானது என்றாலும் நான் பிரபலமாகவில்லை.

இதற்குப் பிறகு டைரக்டர் மிஷ்கின் அறிமுகம் கிடைத்தது. அப்போது நான் எழுதிய 'வாளமீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம்' பாடலை பாடிக்காட்டினேன். அந்தப் பாடல் அவருக்கு மிகவும் பிடித்து விட்டது. இசை அமைப்பாளர் சுந்தர் சி.பாபு இந்தப் பாடலுக்கு சுவை கூட்டும் வகையில் மெட்டு அமைத்துக் கொடுத்தார். நான் கை அசைத்து பாடிய விதத்தை பார்த்த டைரக்டர் மிஷ்கின் என்னையே அதே ஸ்டைலில் பாடி நடிக்கும்படி கூறினார். இன்று உலகம் முழுவதும் எனக்கு ரசிகர்கள் தோன்ற அவர்கள் தான் முக்கிய காரணம்.

துறைமுகத்தில் வேலை பார்த்ததால் எனக்கு மீனவ நண்பர்கள் அதிகம் உண்டு. அவர்கள் மீன் பிடிக்கும் அனுபவத்தைச் சொல்லும் போது கேள்விப்பட்ட மீன்கள் பெயரை வைத்து மீன்களுக்கு திருமணம் நடப்பது போல ஒருபாடல் எழுதும் எண்ணம் தோன்றியது.


அந்தத் திருமணத் பாடல்தான் என் வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்தும் என்று அப்போது நினைக்கவில்லை.

இந்தப் பாடல் பிரபலம் ஆனபிறகு உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கும் நான் பிரபலம் ஆகி விட்டேன். கனடா, லண்டன், இலங்கை, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் இசை நிகழ்ச்சி நடத்த அழைப்பு வந்திருக்கிறது.

'கபாலி', 'மதுரவீரன்', 16 நாட்கள்' உள்பட 7 படங்களில் பாடி நடிக்க வாய்ப்பு வந்திருக்கிறது. என் குடும்பம் ரொம்பப் பெருசு. அம்மா பெயர் சமுத்திரம். அப்பா சொக்கநாதன் நான் உலகநாதன். என் தம்பிகள் பெயர் மேகநாதன், குருநாதன்.

மகன்கள் காமராஜ், வசந்தராஜ் மகள் நந்தினி, மூத்த மகன் ப்ளஸ் 1, அடுத்த மகன் 10 ஆம் வகுப்பு, மகள் 8ஆம் வகுப்பு படிக்கிறார்கள்.

எங்கள் குடும்பத்தில் எல்லோருமே வியாசர்பாடியில் உள்ள பழைய ஓட்டு வீட்டில் தான் குடியிருக்கிறோம். பிள்ளை களை நன்றாகப் படிக்க வைக்க



வேண்டும். என்னைப் பார்க்க 4 பேர் வரும் போது அவர்களை வரவேற்கக் கூட வீட்டில் இடம் இல்லை. இனி கொஞ்சம் வசதியான வீடு பார்க்க வேண்டும். என் குடும்பத்தினருக்கும் முடிந்த வரை உதவி செய்ய வேண்டும்.

மீன் குழம்பு விரும்பிச் சாப்பிடுவேன். வாளமீன் - விலாங்குமீன் ருசி எனக்கு மிகவும் பிடிக்கும். தினமும் மீன் குழம்பு, வறுவல் வைத்தாலும் விரும்பிச் சாப்பிடுவேன்.

நல்ல படம், நல்ல கதை அம்சம் உள்ள படங்களில் நடிக்க வேண்டும். நகைச்சுவை வேடத்தில் நடிக்கவேண்டும் என்பது என் ஆசை.

# “வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்”



**துறையைச்** சேர்ந்தவர்கள் Music Hall - மியூஸிக் ஹோல் என்பது இங்கிலாந்தில் மிகப் பிரபலமாக இருந்த ஒரு கலை. அங்கு நாடகத்தைப் போலவே நடிகர், நடிகைகள் மேடை மீது பலவகையான நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். பாட்டு... கூத்து... நகைச்சுவை... அடிதடி சண்டைகள்... இப்படிப் பலவகை. அதாவது ஒரு பல்சுவை நிகழ்ச்சி. இதற்குச் சாதாரணமாக மேல்மட்டத்து மக்கள் பார்க்க வரமாட்டார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு நம் நாட்டிலும் நாடகம் அதே நிலையில் தான் இருந்தது! இந்தக் கலை அமெரிக்காவிலும் பரவியது. அங்கு அதற்கு வாட்வில் (Vaude Ville) என்று பெயர். சினிமாவின் வளர்ச்சிக்குப் பிறகு அமெரிக்காவின் இந்தக் கலை அழிந்துவிட்டது. சில பகுதிகளைப் படமெடுத்து காசு சேர்க்க வெளிநாடுகளுக்கும் அனுப்புவது உண்டு. அந்த வகையில் சென்னையில் கட்டப்பட்ட முதல் திரையரங்கான கெயிட்டியில் (Gaiety) காட்சிகள் காட்டப்படும். அதைப் பற்றி “பிட் நோட்டீஸ்களும்” அந்நாளில் அடிப்பார்கள். அதைத் தமிழில் “வாடி வில்லி” என்று அச்சிடுவார்கள். இது அந்நாளில் படித்தவர்களைச் சிரிக்க வைக்கும்.

லில்லியின் மனநிலை மிகவும் மோசமாகி, மருத்துவமனையில் சேர்க்க வேண்டிய நிலைமை



ஏற்பட்டு விட்டது. வீட்டில் தனியாக இருந்த இரு குழந்தைகளையும் அக்கம் பக்கத்துக்காரர்கள் பார்த்துக் கொண்டார்கள். பள்ளியிலும் சேர்த்தார்கள். ஆனால் சாப்ளினுக்கு அதில் எதிர்பார்த்தது போல் விருப்பம் இல்லை. வகுப்பில் வாத்தியார் இல்லாத பொழுது ஆடிப், பாடி நடித்து எல்லோரையும் சிரிக்க வைப்பார்! இது அவருக்குப் பிடித்திருந்தது. சாப்ளினின் நடிப்புத் திறமை அவர் வசித்து வந்த வட்டாரத்தில் பரவத் தொடங்கியது. சாப்ளின் குள்ளமானவர். அது அவருடைய நடிப்பிற்குச் சாதகமாகவே அமைந்தது. விரைவிலேயே அவருக்கு மேடையேறி தன் திறமையைக் காட்ட வாய்ப்பு வந்தது. ஓரளவிற்குக் காசும் கிடைத்தது. இவரைப் போலவே சில சிறுவர் சிறுமிகளைச் சேர்த்து “லாங்கஷைர் லேட்ஸ்” (Lancashire Lads) என்ற குழுவை அமைத்தார். ஜாக்ஸன் (Jackson) என்பவர்.

மியூஸிக் ஹோல் நிகழ்ச்சிகளில் சிறிய வேடங்களில் நடித்துக் கொண்டிருந்த போதிலும் சாப்ளினின் புகழ் பரவ ஆரம்பித்தது. சிட்னியும் நடித்துக் கொண்டிருந்தான். விரைவிலேயே சாப்ளினுக்கு இங்கிலாந்திலுள்ள பெரிய, சிறிய ஊர்களிலும் தன்னுடைய ஆடல், பாடல் நகைச்சுவைத் திறமைகளை காட்ட வாய்ப்புகள் வரத்தொடங்கின. யார் இந்தச் சிறுவன் என்று மக்களும் பத்திரிகைக்காரர்களும் கேட்கத் தொடங்கினார்கள்.

துப்பறியும் இலக்கியத்தில் அன்று போல் இன்றும் மங்காத புகழோடு ஜொலிக்கும் கற்பனைத் துப்பறிவாளர் (Sherlack Holmes) ஷெர்லக் ஹோம்ஸ். இதை எழுதியவர் சர் ஆர்த்தர் கானண்டாயில் (Sir Arthur Conan Doyla). மருத்துவராக வாழ்க்கையைத் தொடங்கிய காணன்டாயில், அவரிடம் வைத்தியம் பார்க்க யாரும் வராததினால் நேரத்தை வீணாக்க வேண்டாம் என்ற நல்ல எண்ணத்தோடு துப்பறியும் கதைகளை எழுதத் தொடங்கினார். தன்னுடைய கதைகளில் கதாநாயகனான துப்பறிவாளருக்கு



ஷெர்லக் ஹோம்ஸ் என்று பெயர் வைத்தார். இவருடைய துப்பறியும் கதைகள் மிகவும் பிரபலமாகி, இவர் கனவிலும் எதிர்பார்க்காத அளவிற்கு பணத்தையும் தந்தது. பணமும், புகழும் இவரைத் தேடி, நாடி ஓடிவந்தன. ஷெர்லக் ஹோம்ஸ் கதைகளை எழுதி எழுதி அலுத்துப் போன காணன்டாயில் அவரை கொன்றுவிட்டார்! அதை எதிர்த்து மக்கள் போராட்டமே நடத்தினார்கள். வேறு வழியின்றி, ஷெர்லக் ஹோம்ஸிற்கு உயிர்ப்பிச்சை கொடுத்து மீண்டும் கதைகளை எழுத ஆரம்பித்தார்.உயிர் பெற்ற பிறகு வந்த முதல் கதை ஒரு பிரபல லண்டன் பத்திரிகையில் வெளிவந்த பொழுது மக்கள் சாலைகளில் கட்டிப் பிடித்து நாட்டியமாடினார்கள்! குடித்துக் கும்மாளமும் போட்டார்கள். அவ்வளவு மகிழ்ச்சி மக்களுக்கு.

அந்நாளில் இங்கிலாந்தில் வில்லியம் ஜில்லட் (William Gillette) என்ற ஒரு பிரபல நாடக ஆசிரியர், நடிகர் இருந்தார். அவர் ஷெர்லிக்ஹோம் கதைகளை நாடகமாக எழுதி நடிக்கத் தொடங்கினார். நாடகத்தில் ஷெர்லிக் ஹோம்ஸிற்கு (Office Boy) ஒரு பணிப்பையன் வேடம் சாப்ளினுக்குக் கிடைத்தது. இந்த வேடம் சிறுவனான சாப்ளின் புகழை மேலும் வளர்த்தது. பத்திரிகைகளில் சாப்ளின் படமும் தோன்ற ஆரம்பித்தது.

இங்கிலாந்தில் அந்நாளில் ஃப்ரட்கார்னோ (Fred Karne) என்று ஒரு பிரபல நகைச்சுவை ததும்பும் மியூஸிக் ஹோல் நிகழ்ச்சி தயாரிப்பாளர். அவர் தன் பெயரில் ஒரு குழுவையே வைத்திருந்தார். அதில் பலவகையான நகைச்சுவை நிகழ்ச்சிகள், சிரிப்பூட்டும் கேலிக் கூத்துகள், குடிகாரனின் போதை சேஷ்டைகள் இப்படிப் பல. சாப்ளினுக்கு அந்தக் குடிகார நிகழ்ச்சி கொடுக்கப்பட்டது. அது விரைவிலேயே பிரபலமாகி பத்திரிகைக்காரர்களும் பாராட்டத் தொடங்கினார்கள்.

குடிகாரன் எப்படி தள்ளாடி தள்ளாடி நடப்பான்... சாலையைக் கடக்க அவன் எதிர்கொள்ளும் இன்னல்கள்... வீட்டின் கதவைத் திறக்க அவனுடைய முயற்சிகள் இவைகளையெல்லாம் சாப்ளின் அற்புதமாக நடித்து மக்களைப் பரவசப்படுத்தினார். சிரிப்புக் கடலில் மூழ்க வைத்தார். இந்தக் குடிகாரனின் சேஷ்டைகளை இவர் பின்னாளில் தன்னுடைய ஹாலிவுட் படங்களிலும் பல இடங்களில் புகுத்தினார். இவரைப் போலவே நடக்க வேண்டும், தள்ளாட வேண்டும் என்றெல்லாம் மொடக்குடி காரர்களும் இவரை பின்பற்றத் தொடங்கினார்கள்!

(ஹிந்தி திரையுலகில் கேஷ்தோ முகர்ஜி (Keshto Mukherjee) என்று ஒரு பிரபல நகைச்சுவை நடிகர். இவர் இந்தக் குடிகாரர் வேஷத்தை மட்டுமே அவர் நடித்த எல்லாப் படங்களிலும் நடித்து புகழ்பெற்றார். வட இந்தியாவில் இவருடைய பெயர் பிரபலமானது மட்டு மல்லாமல் மக்கள், நண்பர்கள் தள்ளாடும்பொழுது “என்னடா இது கேஷ்தோ முகர்ஜி மாதிரி ஆடுறே” என்று பேசுவார்கள்)!

*(தொடரும்)*

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

06

## வரலாற்றில் கொடூர ராணி

**இன்று** குடியாட்சி நடைபெறும் பிரான்ஸ் தேசம், ஒரு காலகட்டத்தில் முடியாட்சியில் தன்னிகரற்று விளங்கியது. அதேபோல இன்றும் பாராளுமன்ற ஜனநாயகம் நிலவும் இங்கிலாந்து தேசம் இன்னமும் முடி ஆட்சியை பின்பற்றுகின்றது. இற்றைக்கு ஏறக்குறைய 700 ஆண்டு காலத்திற்கு முன்னர் முடியாட்சி நிலவிய இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் தேச அரச பரம்பரையினரிடையே நெருங்கிய இராஜதந்திர உறவுகள் நிலவின. இரு தேச இராஜ பரபம்பரையினரிடையே திருமண உறவுகள் கூட சர்வசாதாரணமாக நிகழ்ந்தன. இக்கால கட்டத்தில் பல விசித்திரமான சம்பவங்களும் ஏன் மயிர்க்கூச்செறியும் நிகழ்வுகள் கூட அரங்கேறியுள்ளது. அவற்றில் ஒன்றுதான் இங்கிலாந்து மன்னர் இரண்டாம் எட்வர்ட்டின் கோரக் கொலையும் அவரைக்கொலை செய்த மகாராணி இசபெல்லாவின் கொடூர நடத்தையுமாகும். 1300ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் பிரான்ஸ் தேசத்தை நான்காம் பிலிப் மன்னர் அரசாட்சி செய்து வந்தார். அவருக்கு ஒரேயொரு மகள் இருந்தாள் அவள்தான் இசபெல்லா, தான் பிரான்ஸ் மன்னரின் ஒரே மகள் என்ற திமிரும் ஆணவமும் அவளுக்கு மிகவும் அதிகமாகவே இருந்தது.



சிறு வயதிலேயே எவருக்கும் அடங்காத திமிரும் பிறரை துன்புறுத்தி அதில் இன்பம் காணும் கொடூர புத்தியும் அவளிடம் தாராளமாகவே காணப்பட்டது. அரண்மனை பணியாளர்களின் பிள்ளைகளை அரண்மனைக்கு வரவழைக்கும் அவள், அரண்மனைத் தோட்டத்தில் விளையாடுகின்றேன் என்ற போர்வையில் சிறுவர்களை நிர்வாணமாக்கி அவர்களின் பிறப் புறுப்பில் கார பொடி வகைகளை தடவி அவர்கள் துடி துடிப்பதைப் பார்த்து ரசிப்பாள். சிறு வயதிலேயே இந்த குரூர புத்தி கொண்டவள் பிற்காலத்தில் அப்படி ஒரு விபரீதமான முடிவிற்குச் செல்வாள் என அப்போது எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை. அது 1308ஆம் வருடம். அப்போதைய இங்கிலாந்து மன்னர் இரண்டாம் எட்வர்ட்டிற்கும் இசபெல்லாவிற்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. இங்கிலாந்தின் முடிசூடிய அரசருக்கும் பிரான்ஸ் தேச அரசரின் ஒரே மகளுக்கும் என்ற ரீதியில் இத்திருமணம் போக்ளட் தீவில் மிக ஆடம்பரமாக இடம்பெற்றது. திருமணம் முடிந்து இரண்டாம் எட்வர்ட் மன்னரும் இசபெல்லாவும் ஆடம்பர சொகுசு கப்பல் மூலம் இங்கிலாந்து திரும்பினர். இங்கிலாந்தின் டோவர் துறைமுகத்திற்கு வந்திறங்கிய அரச தம்பதியினரை அரசரின் நெருங்கிய நண்பரும் அரச பிரதிநிதியுமாகிய டெஸ்பென்சர் என்பவர் வரவேற்றார். மன்னர் 2ஆம் எட்வர்ட்டை ஆரத்தழுவிய டெல்பென்சர் தமது மகிழ்ச்சியினை தெரிவித்துக்கொண்டார். இவையாவற்றினையும் பார்த்துக் கொண்டிருந்த இசபெல்லா முகம் சுளிக்கத் தொடங்கினாள். எந்த விடயம் என்றாலும் டென்பென்ஸரிடம் ஆலோசிக்காமல் மன்னர் செய்வதே கிடையாது. இதுவும் இசபெல்லாவின் மனதில் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாக அமைந்தது. ஒருமுறை லண்டன் சிறைச்சாலைக்கு செல்லும் சந்தர்ப்பம் இசபெல்லாவிற்கு கிடைத்தது. அங்கு வைத்து ரோவர் எனும் ஆயுள் கைதியை சந்தித்தாள். பல்வேறு கொலை கொள்ளைகளில் ஈடுபட்ட ரோவர் நல்ல கட்டுமஸ்தான ஆண்மகனாகக் காணப்பட்டான். ஏற்கனவே மன்னர் 2ஆம் எட்வர்ட்டில் வெறுப்பில் இருந்த இசபெல்லா அவரை பழிவாங்குவதாக நினைத்து ரோவருடன் தகாத உறவு கொள்ளத் தொடங்கினாள். சிறைச்சாலையே பள்ளியறை ஆனது. இந்த விடயம் வெளியே தெரிய வந்தபோது தனது செல்வாக்கினை உபயோகித்து ரோவரை தப்புவிக்கும்படி செய்தாள். இதனால் ஆத்திரமடைந்த மன்னர் இசபெல்லாவின் மகாராணி பட்டத்தினை பறித்து பிரான்ஸுக்கு நாடுகடத்தி விட்டார். ஆனால் பிரான்ஸ் சென்ற இசபெல்லா சும்மா இருக்கவில்லை. தான் சிறையில் இருந்து தப்புவிக்கச் செய்த தனது காதலன் ரோவருடன் சேர்ந்து கொண்டு பெரும் கூலிப்படையினைத் திரட்டிக் கொண்டு வந்து பிரித்தானிய ஆட்சியை கைப்பற்றினாள். தன்னை எதிர்த்தவர்கள் அனைவரையும் டென்பென்சர் உட்பட எல்லோரையும் மிகக் கொடூரமாகக் கொன்று குவித்தாள்.

இதில் உச்சக்கட்டம் தனது கணவரான இரண்டாம் எட்வர்ட் மன்னரை பதவியில் இருந்து விலக்கி கைது செய்து பெக்லி கோட்டையில் சிறைவைத்தாள். அங்கு அவர் மிகக் கோரமாகச் சித்திர செய்யப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. வரலாற்றில் மிகமோசமாக சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட ஒருவராகவே 2ஆம் எட்வர்ட் மன்னர் காணப்பட்டார்.

பெக்லி கோட்டையில் இசபெல்லா தானே நேரடியாக நின்று மன்னர் 2ஆம் எட்வர்ட்டை சித்திரவதை செய்தாள். அவரது காதுகள், மூக்கு, ஆணுறுப்பு முதலியன அறுக்கப்பட்ட நிலையில் ஒரு மேசையில் படுக்க வைத்து அவரது ஆசனவாயிலில் இசைக்கப் பயன்படும் ஊதுகுழல் ஒன்றினைச் செருகி கொதிக்கும் எண்ணெயினை ஊற்றியும் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் குழாய்களையும், கம்பிகளையும் உடல் முழுவதும் நுழைத்தும் திருகியும் குரூரமாக சித்திரவதை செய்து கொன்றாள். மன்னர் இறந்த பின்னரும் கூட அவர் எழுப்பிய அவலக் கூக்குரல் பல நாட்கள் தமக்கு கேட்பதாக பிரமை நிலவியதாக சிறைச்சாலை பணியாளர்கள் பின்னர் தெரிவித்தனர்.

*(இரகசியங்கள் தொடரும்...)*

## முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

# இலங்கை - இந்திய முறுகல் நிலைக்கு மத்தியில் தீர்வு முயற்சிகள் தீவிரம்

**1987ஆம்** ஆண்டின் ஆரம்ப காலங்களிலிருந்து இந்தியாவின் பேச்சுவார்த்தை முயற்சிகள் மீண்டும் முடுக்கி விடப்பட்ட போதிலும், இரு நாடுகளுக்குமிடையில் முறுகல் நிலையும் அதிகரித்திருந்தது. அதிலும் 1987 ஜூன் மாதம் யாழ். குடாநாட்டின் வானப் பரப்பில் இந்திய விமானங்கள் பறந்து உணவுப் பொருட்களைப் போட்ட பின்னர் இந்த முறுகல்நிலை முற்றி, இரு நாடுகளின் உறவுகளும் முறிவடையக் கூடிய நிலைக்கு இட்டுச் சென்றிருந்தது. இக் காலகட்டத்தில் இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சி தொடர்பாக ராஜீவ் காந்திக்கும் - ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்குமிடையில் நடைபெற்ற கடிதப் பரிமாறல்களிலும் இவற்றைக் காணக் கூடியதாக இருந்தது.




இலங்கை ஆயுதப் படையினர் வடமராட்சித் தாக்குதலை ஆரம்பிப்பதற்குச் சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை இந்திய உயர் ஸ்தானிகர் தீக்ஷித் கொழும்பில் சந்தித்துப் பேசியபோது, இந்த முறுகல்நிலையின் பிரதிபலிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. "தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க இந்தியா நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது என்பதே பிரதமர் ராஜீவ் காந்தியின் நிலைப்பாடாகும்" என்று தீக்ஷித் கூறினார். இதனால் குழப்பமடைந்த ஜெயவர்த்தனா, "இது இலங்கையின் உள்விவகாரங்களில் மேற்கொள்ளப்படும் தலையீடு" என்று பதிலளித்தார். "இந்தியா என்ன நினைத்தாலும் பரவாயில்லை. இலங்கையில் இராணுவம் நடவடிக்கைகள் தொடரும்" என்றும் ஜெயவர்த்தனா உறுதிபடக் கூறினார். அது மட்டுமல்ல, இலங்கையின் பயங்கர

**தமது கோரிக்கைகள் ஏற்கப்படாவிட்டால் நாடு பிரிவினைக்கான போராட்டம் தொடருமென்று புலிகள் அறிவித்தனர். இத்தகவல் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப் பட்டது. மேற்கண்ட நிபந்தனைகள் ஏற்கப்பட்டால் யுத்த நிறுத்தத்துக்குத் தாம் தயாரெனவும் புலிகள் அறிவித்தனர். இலங்கை அரசும் இந்தியாவும் இதற்கான ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள வேண்டுமென்றும் அதனை உறுதிப் படுத்தும் பிணையாளராக இந்தியா விளங்க வேண்டு மென்றும் புலிகள் அறிவித்திருந்தனர்.**

வாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு இஸ்ரேலின் உதவி பெறப்படுகிறது என்பதையும் ஜெயவர்த்தனா, தீக்ஷித்துக்கு வெளிப்படையாகக் கூறினார். ஒரு சந்தர்ப்பத்தில் கொழும்பில் தங்கியிருந்த இஸ்ரேலிய இராணுவ அதிகாரி லெவி என்பவரையும் தீக்ஷித்துக்கு அறிமுகப்படுத்தி இஸ்ரேலிய உதவிகள் குறித்துக் கலந்துரையாடுமாறும் சொன்னார்.

ஜெயவர்த்தனாவுக்கும் தீக்ஷித்துக்குமிடையில் நடைபெற்ற சம்பாஷணையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக அமையும்.

**ஜெயவர்த்தனா :-** ராஜீவ் காந்தியின் ஆலோசனையைக் கேட்டு, அதன்படி நான் நடக்காவிட்டால் இலங்கைக்கு என்ன நடக்குமென்று நினைக்கிறீர்கள்?

*(அரசியல் தொடர்)*

**தீக்ஷித் :-** ஐயா, ராஜீவ் காந்தியின் ஆலோசனைகளை நீங்கள் மதிக்கத் தவறுவதால் ஏற்படும் விளைவுகள் பற்றிக் கூறமுடியாது. அது நிச்சயமானதல்ல. அவ்வாறானதொரு சூழ்நிலையில் ஏற்படும் முழுப் பொறுப்பும் உங்களையும் இலங்கை அரசாங்கத்தையும் சார்ந்ததாகும்.

**ஜெயவர்த்தனா :-** தீக்ஷித் சரிவரச் சொல்லுங்கள். எதிர்வு கூறமுடியாத பின்விளைவுகள் என்று நீங்கள் கூறும்போது, என்ன நடக்குமென்று நீங்கள் தனிப்பட்ட முறையில் நினைக்கிறீர்களென்பதை எனக்குச் சொல்லுங்கள்.

**தீக்ஷித் :-** ஜனாதிபதி அவர்களே! இதனைச் சொல்வதற்காக என்னை மன்னிக்க வேண்டும். தமிழ் நாட்டிலிருந்து புலிகள் செயற்பாட்டு உதவியைக் கோரலாம். அது இலங்கையின் பிரிவினையில் முடியலாம். இலங்கை ஐக்கியப்பட்ட நாடாகத் தொடர்ந்தும் இருக்க முடியாமல் போகலாம். இதுவே எதிர்வுகூற முடியாத விளைவாகவும் இருக்கலாம்.

**ஜெயவர்த்தனா :-** தீக்ஷித் அவர்களே! எமது நாடு ஒரு சிறிய நாடு. நீங்கள் என்ன சொன்னாலும் பரவாயில்லை. பயங்கரவாத வன்செயல்களுக்கு நான் அடிபணிய மாட்டேனென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அத்துடன் இந்த வன்செயலுக்கு உங்கள் அரசாங்கமும் உங்கள் நாடும் ஆதரவளித்து வந்துள்ளது. இப்போதும் ஆதரவளித்து வருகிறது என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையிலான முறுகல் நிலையை எடுத்து விளக்குவதற்கு இந்தச் சம்பாஷணையை ஓர் உதாரணமாகக் கொள்ளலாமல்லவா?

இதற்கிடையில், சிங்கப்பூரிலுள்ள புலிகளின் பிரதிநிதிகள் சென்னையிலிருந்து வெளிவரும் 'த ஹிந்து' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் இணை ஆசிரியரான என்.ராமோடு தொடர்பு கொண்டு தாம் இலங்கை அரசுடன் பேசத் தயாரென்ற செய்தியைத் தெரிவித்திருந்தனர். 1987ஆம் ஆண்டு ஜூன் மாத பிற்பகுதியில் இத் தகவல் வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் சில யோசனைகளை முன்வைத்து, அதற்கு இலங்கை அரசாங்கம் உடன்பட்டால், ஓர் அரசியல் இணக்கப்பாட்டுக்கு வரத் தாம் தயாரெனப் புலிகள் தெரிவித்திருந்தனர். அந்த யோசனைகள் வருமாறு :

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

❊ இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு இலங்கைப் படையினர் தற்போது இருக்கக்கூடிய தமது முகாம் களுக்குத் திரும்ப வேண்டும்.

❊ வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு தமிழர் தாயகமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

❊ 1983ஆம் ஆண்டு முதல் 1986ஆம் ஆண்டின் இறுதி வரை முன்வைக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

❊ சிங்கள மொழிக்குச் சமத்துவமாக தமிழ் மொழி உத்தியோகபூர்வ மொழியாகவும் தேசிய மொழியாகவும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கல் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தி இறுதி முடிவெடுப்பதற்கு வசதியாக, இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடைக்காலத் தமிழ் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகள் ஏற்கப்படாவிட்டால் நாடு பிரிவினைக்கான போராட்டம் தொடருமென்று புலிகள் அறிவித்தனர். இத்தகவல் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப் பட்டது.

மேற்கண்ட நிபந்தனைகள் ஏற்கப்பட்டால் யுத்த நிறுத்தத்துக்குத் தாம் தயாரெனவும் புலிகள் அறிவித்தனர். இலங்கை அரசும் இந்தியாவும் இதற்கான ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள வேண்டுமென்றும் அதனை உறுதிப் படுத்தும் பிணையாளராக இந்தியா விளங்க வேண்டுமென்றும் புலிகள் அறிவித்திருந்தனர்.

இணையாசிரியர் ராம், ஓர் கிரிக்கெட் ரசிகர். அப்போது இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக விளங்கியவர் அமைச்சர் காமினி திசாநாயக்கா. அமைச்சர் காமினிக்கும் ராமுக்குமிடையில் நல்ல தொடர்புகள் இருந்தன. ராம் தனக்குப் புலிகளிடமிருந்து கிடைத்த தகவலை அமைச்சர் காமினி திசாநாயக்கா ஊடாக இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தினார். ஜூன் 25ஆம் திகதிக்கும் 30ஆம் திகதிக்குமிடையில் இலங்கைப் பிரச்சினை தொடர்பாகப் புதுடில்லியில் ஆறு கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மூன்று கூட்டங்களுக்குத் தானே தலைமை தாங்கி நிலைமைகளை ஆராய்ந்தார். இலங்கை அரசின் நிலைப்பாட்டை முதலில் அறிந்து கொள்வதென்றும் பின்னர் புலிகளின் யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு நகல் ஒப்பந்தமொன்றினைத் தயாரிப்பதெனவும் இந்தியத் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நகல் ஒப்பந்தத்தைத் தயாரிக்கும் பொறுப்பு இந்திய உயர் ஸ்தானிகர் தீக்ஷித்திடம் கொடுக்கப்பட்டது. இந்த நகல் ஒப்பந்தம் இந்திய அரசின் ஒப்பந்தமாக அல்ல, தீக்ஷித்தின் ஒப்பந்தமாகவே முன்வைக்கப்பட வேண்டுமென்றும் இந்தியா அறிவுறுத்தியது.

(தொடர்ந்து வடியும்....)




பயத்தால் ஓடிப்போன குமார் படுத்துக் கொண்டார். விடிந்ததும் அந்த விடயம் பற்றி நம்பூதிரியிடம் எடுத்துக் கூறி தெளிவு கேட்கிறார். விடயங்கள் சிலதைக் கூறிய நம்பூதிரி வெளியே கிளம்பிச் செல்கிறார். மாலையில் திரும்பி வந்த அவரிடம் தனக்கு காலேஜில் நடந்த விடயங்களைப் பற்றியெல்லாம் கூறுகிறார்...

"உண்மைதான். இல்லேன்னா இருக்கிற பொருள்களை அதால தள்ளி உடைச்சிருக்க முடியாது."

"அந்தத் தொடு உணர்ச்சியை அகற்றுறதுக்கு ஏதாவது வழியிருக்கா திருமேனி?"

"முயற்சி பண்ணிப் பார்க்கலாம். இதெல்லாம் அபூர்வமா நடக்கிற சம்பவங்கள் இல்லையா?"

"கண்டிப்பா ஏதாவது வழி கண்டுபிடிச்சே ஆகணும்!"

"அதுக்கான ஏற்பாட்டைச் செய்யலாம். நாளைக்கு நீங்க கிளம்பறதுக்குள்ள உங்ககிட்ட ஒரு பொருளைத் தர்றேன்!" தேவதத்தன் உறுதியான குரலில் கூறினார்.

அன்று மாலை நேரத்தில் வராந்தாவில் உட்கார்ந்திருந்த நம்பூதிரி எழுந்து சமாதியைத் தாண்டி குளக்கரையை நோக்கி நடந்தார்.

மேற்புறப் படிக்கட்டுக்கு வந்தவர் சற்று நேரம் குளத்தின் நீர்ப் பரப்பையே பார்த்தபடி நின்றார்.

மேற்பரப்பில் ஆம்பல் பூக்கள் ஆங்காங்கே மலர்ந்திருந்தன. படிக்கட்டில் இறங்கி கடைசிப் படிக்கட்டுக்கு வந்தவர் குளத்தின் அடிப்பகுதியை ஊன்றிக் கவனித்தார்.

அதன் அடிப்பரப்பில் எதுவோ கிடப்பது தெரிந்தது. ஊன்றிப் பார்த்தபோது அது ஒரு பெண் உருவம் என்பது புரிந்தது.

தேவதத்தனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

யாரோ குளத்தில் விழுந்து இறந்து போயிருக்கிறார்கள். இது நேற்றிரவுதான் நடந்திருக்க வேண்டுமென்று தோன்றியது.

அதன் பிறகு அங்கு நிற்காமல் உடனே இல்லத்துக்குத் திரும்பினார்.

"தாட்சாயணி....." உட்புறம் பார்த்துக் குரல் கொடுத்தார்.

அதற்குள் அவரது சகோதரி வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தாள்.

"யாரோ குளத்துக்குள் கிடக்கிறார்கள்." நம்பூதிரி சொன்ன

**எழுதுவது**
**சிவன்**

செய்தியைக் கேட்டு தாட்சாயணி வியப்பு அடைந்ததாகத் தெரியவில்லை.


"தேவதத்தா, விஷயத்தைப் பெரிது படுத்தாதே! அது உனக்கு எதிராகத் திரும்பலாம். மந்திரவாதம் செய்வதற்காக நீ யாரையோ கொலை செய்துவிட்டதாகக் குற்றம் சாட்டுவார்கள். அதனால் பிணம் மிதக்க ஆரம்பிப்பதற்குள் கொண்டுபோய் புதைத்து விடுவது நல்லது" -தாட்சாயணி கூறினாள்.

அவள் சொல்வதும் உண்மைதான் என்பது தேவதத்தன் நம்பூதிரிக்குத்தோன்றியது. ஆனால், இதையெல்லாம் தனியாகச் செய்ய முடியாதே. யாரைத் துணைக்கு அழைப்பது? அப்போதுதான் குமார் தன்னுடைய வீட்டில் இருப்பது அவருக்கு நினைவு வந்தது.

குமார் படுத்திருந்த அறைக்குள் நுழைந்தவர் அவரை எழுப்பினார். செய்தியைச் சொன்ன போது குமார் மறுப்பு சொல்லவோ, ஆச்சரியப்படவோ இல்லை.

"பயப்படாதீர்கள் திருமேனி, நான் உங்களுக்கு உதவுகிறேன்." -குமார் ஆறுதல்படுத்தினார்.

உடனே இருவரும் குளத்தை



நோக்கி விரைந்தனர். குளத்தின் அடிப்பரப்பை ஊன்றிப் பார்த்தபோது, அது உண்மைதான் என்பது குமாருக்குத் தோன்றியது.

"குளத்துக்குள் இறங்கி பிணத்தை வெளியே எடுப்பதற்கு முன், அதைப் புதைப்பதற்காக ஒரு குழிவெட்டினால் நல்லது!"

திருமேனி சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

"அவ்வளவுதானே....அதற்கு ஒரு வழி இருக்கிறது. அதோ அந்த எட்டிமரத்தின் பின்னால் ஒரு பெரிய பள்ளமிருக்கிறது. ஒரு பெரிய மரம் வேரோடு பெயர்ந்து விழுந்ததால் ஏற்பட்ட பள்ளம். பாதாளம் மாதிரியான பள்ளம். பிணத்தை அதற்குள் தள்ளிவிட்டு கொஞ்சம் மண்ணையும் தள்ளிவிட்டால் போதும். யாருக்கும் எதுவும் தெரியாது!" -திருமேனி கூறினார்.

குளத்துக்குள் இறங்கிய குமார் உள்ளே இருந்த பிணத்தைத் தோளில் போட்டுக் கொண்டு கரையேறினார்.

படிக்கட்டில் அதைப் படுக்கவைத்தார்.

"ஐயோ... இது நம்ம பானுக்குட்டியாயிற்றே!" -திருமேனி பதற்றமடைந்தார்.

"திருமேனி.... யார் இந்த பானுக்குட்டி?" குமார் கேட்டார்.

"அதோ....அந்தத் தென்னை மரங்களுக்கு இடையே ஒரு குடிசை தெரிகிறதே, அந்த வீட்டைச் சேர்ந்தவள். அங்கே தாயும் மகளுமாக இரண்டு பேர் மட்டும்தான். அதோ பாருங்கள் அந்த உடம்பில் ஒரு காயத்தை" -திருமேனி சுட்டிக் காட்டினார்.

குமார் அந்தக் காயத்தைக் கவனித்தார். இரண்டு பற்களால் ஏற்பட்ட ஒருகாயம் போல் தெரிந்தது.

"திருமேனி, இந்த உடம்பில் யாரோ பல்லால் கடித்திருப்பது தெரிகிறது. பற்களின் அமைப்பைப் பார்த்தால் ஆணினுடையது மாதிரித்தான் உள்ளது." -குமார் கூறினார்.

"அப்படியா சொல்கிறீர்கள்?" -திருமேனி சந்தேகத்துடன் கேட்டார். "சரி அந்த உடம்பைத் தூக்கிக் கொள்ளுங்கள். நான் தொட்டால் தீட்டாகிவிடும். அதுவுமில்லாமல் வேறு சில சிக்கல்களும் உண்டு."

"அதற்கென்ன பரவாயில்லை. நானே எடுத்துவருகிறேன்." -குமார் பிணத்தைத் தோளில் போட்டுக் கொண்டு நடந்தார்.

எட்டி மரத்தின் அடிப்பகுதிக்கு வந்தார்கள்.

அந்த உடம்பைப் பரிசோதித்தனர்.

"இவளுடைய இரத்தத்தை யாரோ குடித்திருக்கிறார்கள்!" -திருமேனி கூறினார்.

*(வாசனை வீசும்....)*

**மனதுக்கு நிம்மதி**

# அறிவுக்கு மேற்பட்ட அனுபவங்கள்






**ஆழ்மனம்** என்பது என்ன? அது எப்படி இயங்குகிறது என்று யோசித்திருக்கிறீர்களா?

மனத்தில் மூன்று நிலைகள் உள்ளன என்று கூறுகிறார்கள் அறிஞர்கள். தர்க்கவாத அறிவு - பகுத்தறிவு - காரண காரியம் காட்டும் அறிவு முதல்நிலை. அதாவது நாம் நடப்பது, எழுதுவது, ஓடுவது, சிந்திப்பது போன்ற செயல்கள் எல்லாம் நமது நினைவு அறிவிலிருந்து புறப்படுகின்றன. நாம் நடக்க விரும்புகிறோம், நடக்கிறோம். ஓட விரும்புகிறோம், ஓடுகிறோம். எழுத விரும்புகிறோம், எழுதுகிறோம். இவை, நமது நினைவு அறிவிலிருந்து (Concious mind ) புறப்படும் செயல்கள்.

ஆனால் இதற்கு அடுத்த நிலையில் ஆழ்மனம் (Subconcious mind) இருக்கிறது. காரண காரியம் காட்டும் தர்க்கவாத அறிவு மயங்கிய நிலையில் - ஒரு இரண்டுங்கெட்டான் தூக்கக் கலக்கத்தில் - ஒரு ஹிப்னாடிஸ்ட் சில கட்டளைகளை இட்டு நம்மை அவர் இஷ்டப்படி கையைக், காலைத் தூக்கச் சொல்கிறார். ஆழ்மனம் அதை நிஜமென நம்பி அக்கட்டளையை ஏற்கிறது. அதற்கேற்ப நம்மைச் செயல்பட வைக்கிறது. திரும்பத் திரும்ப எண்ணப்படும் எண்ணம் ஆழ்மனத்தில் புகுந்துவிடும். இப்படித்தான் - நமது பிரார்த்தனைகள் பலன் தருகின்றன. ஆழ்மனத்தில் விடப்படும் எண்ணங்களை எப்படியாவது நம்மைக் கொண்டே நிறைவேற்ற முயல்கிறது ஆழ்மனம்.

நாம் தர்க்கவாத அறிவை உபயோகித்துச் சிந்திக்காதபோது - நாம் வேறு ஏதாவது தொழிலில் ஈடுபடும்போது ஆழ்மனம் அங்கு விடப்படும் அனுபவங்கள், எண்ணங்களை வைத்து



- திடீரென நமது பிரச்சினைகளுக்கு முடிவு கட்டி 'ஐடியா'க்களை நம் மனத்தில் திடீரென உருவாக்குவதும் ஆழ்மனம்தான்.

கொடுக்கப்பட்ட கணக்கு விபரங்களை வைத்துக்கொண்டு கம்பியூட்டர் விடை கண்டுபிடிப்பது போல, நமது பிரச்சினைகளுக்குத் திடீரென விடை காண்கிறது.

இதற்கடுத்த நிலையில் ஆழ்மனம் பிரபஞ்ச அறிவுடன் (Universal mind - Infinite intelligence) தொடர்பு கொண்டிருக்கின்றதென்றும், இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லா அறிவும் அங்கே எண்ண நிலையில் மிதக்கின்றன என்றும், ஆழ்மனம் சரியானபடி 'டியூன்' செய்யப்படும் போது இப்பிரபஞ்ச அறிவிலிருந்து நமக்கு விடையைக் கொண்டு வருகிறது என்றும் கூறுகிறார்கள்.

1971 ஆம் ஆண்டு மார்ச் மாதம். 'மார்ஷ்பீல்டு கிளினிக்' என்று மருத்துவ நிலையத்தில் வயிற்றுப் புண்ணுக்காக எனக்கு அறுவைச் சிகிச்சை செய்கிறார்கள். வயிற்றை அப்படியே திறந்து உள்ளிருக்கும் வயிற்றில் மூன்றில் ஒரு பங்கை எடுத்து விட்டு மூடி, தையல் போட்டிருக்கிறார்கள். வயிற்றில் போட்டிருக்கும் தையல்கள் பிடித்து இழுக்க வலி உயிர் போகிறது. இந்த அழகில் நர்சுகள் வந்து, "நன்றாக இருமுங்கள். அப்போதுதான் ஈரல் சரிவர இயங்கும்" என்று இருமச் சொல்கிறார்கள். இருமும்போது வயிறு குலுங்கி, சுருங்கி விரிவதால் உயிரே போகிறது. இப்படி மூன்று நாள் படாத பாடு பட்டேன். ஒருநாள் அழுதே விட்டேன் வலிதாங்காமல். என் மனைவி வேண்டிக் கொண்டு விபூதியை மடித்து என் தலையணைக்கடியில் வைத்தாள். நான் சற்றுக் கண்ணயர்ந்தேன். அறையில் மங்கிய வெளிச்சம்.

திடீரென விழித்துக் கொண்டேன். 'என்ன வேண்டும்?' என்றாள் என் மனைவி. எனக்கு எதிரே இருந்த சுவரில் ஒளி வடிவத்தில் சிலுவை நின்றது. ஆடியது. "அதோ பார்! அதோ பார்!" என்று நான் சத்தம் போட்டேன். "சுவரில் சிலுவை தெரிகிறது பார்!" என்றேன். என் மனைவி "தெரியவில்லையே" என்றாள். சுமார் ஒரு நிமிட நேரம் இருக்கலாம். சிலுவை ஒளி எதிர்ச்சுவரில் நின்றுவிட்டு மறைந்தது.

நானோ இந்து மதத்தவன்; மருத்துவமனை ஒரு கிறிஸ்துவ மருத்துவ இல்லம். சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்; அன்றிலிருந்து என் வலி எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது!

ஆழ் மனம் ஒரு அடையாள மூலம் எனக்கு நம்பிக்கை காட்டியதா, அல்லது பிரபஞ்ச அறிவு ஒளி வடிவில் என் மன இயக்கம் மூலம் தோன்றியதா என்று எண்ணி எண்ணிப் பார்க்கிறேன்... ஒன்று மட்டும் நிச்சயம். பிரச்சினை நம்மை மீறிப் போகும் போது, "ஆண்டவனே!" என்று நாம் குரல் கொடுக்கும் போது, 'ஆதிமூலமே' என்று அழைத்த அதே அனுபவம்தான் நமக்கும் நேர்கிறது. இது சத்தியம்.

மற்றோர் சமயம், நானும் என் மகனும் தென்மாநிலங்களுக்கு வியாபார நிமித்தமாக 'வேனில்' சென்றிருந்தோம். என் மகன் காரின் மேல் ஹுடைத் தூக்கி வைத்துவிட்டு எண்ணெய், தண்ணீர் தேவையா எனச் சரிபார்த்துக் கொண்டிருந்தான். நான் எங்கோ நினைவாக ஹுட் சரியாக நிற்கிறதா என்று பார்ப்போம் என்று தொட அந்தக் கனமான ஹுட் என் கையின் கணுக்கட்டில் சடாரென்று விழுந்தது. நல்ல கூராக அரிவாள் போலிருந்த ஹுடின் முனை வெகு ஆழத்திற்கு கணுக்கட்டை வெட்டிக் கொண்டு உள்ளே போய் விட்டது.

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 163க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

மேனகா, தியேட்டர் வீதி, நிந்தாவூர்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. ராகுல், ஹேகித்த, வத்தளை.
2. பிரவீண், மட்டக்களப்பு வீதி, லுணுகலை.
3. ஹம்சா, பிரதான வீதி, சாய்ந்தமருது.
4. ஆர்த்தி, நொக்ஸ் வீதி, மூதூர்.
5. ராஜகோபாலன், மானிப்பாய், யாழ்ப்பாணம்.
6. ஆயிஷா பேகம், பிரதான வீதி, கல்முனை.
7. மகேசன், குடாப்பாடு, நீர்கொழும்பு.
8. ஆதவன், பூந்தோட்டம், வவுனியா.
9. இராசரட்ணம், பிரதான வீதி, பொத்துவில்.
10. சுசித்ரா, காலி வீதி, வெள்ளவத்தை.

## குறுக்கெழுத்துப் போட்டி 165

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 7 | 8 | 9 | 10 | ■ | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | ■ |
| ■ | ■ | 21 | ■ | 23 | 24 |
| 25 | 26 | ■ | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | ■ | ■ | 36 |

### இடமிருந்து வலம்

1. புதல்வன் என்பதன் ஒத்தகருத்து.
7. மேன்மையானது அல்லது தகுதி என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது).
12. பசு.
13. இலங்கையில் இருந்து வெளியாகும் பத்திரிகையொன்று (குழம்பியுள்ளது).
23. கொடை.
25. தொழிற்சாலை என்றும் கூறலாம்.
28. இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழ்க் குழுக்களுக்குமிடையில் நடைபெற்ற முக்கிய பேச்சு வார்த்தை (திரும்பியுள்ளது).
31. அரைவாசி என்றும் பொருள்படும். (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. கிரகங்களில் ஒன்று.
2. தொலைக்காட்சி தொடரொன்று (குழம்பியுள்ளது).
3. குருதி (குழம்பியுள்ளது).
4. கை (குழம்பியுள்ளது).
17. இழிவு அல்லது கீழ்மை எனப் பொருள் (குழம்பியுள்ளது).
24. அகத்திய முனிவருடனும் தமிழுடனும் நெருங்கிய தொடர்புடைய மலை. (தலைகீழ்)
25. விஜய்க்கு பெரும் தோல்வியைக் கொடுத்த படம்.
26. ஐவகை நிலங்களில் ஒன்று (தலைகீழ்).

## குறுக்கெழுத்துப் போட்டி 163 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ 1 | பி 2 | ம 3 | ன் 4 | யு 5 | ■ |
| பி 7 | சி 8 | ற் 9 | ■ | ஆ 11 | ம் 12 |
| றா 13 | ■ | கு 15 | மு 16 | த 17 | ம் 18 |
| பி 19 | சா 20 | ■ | த 22 | ம் 23 | ஆ 24 |
| ■ | ப 26 | ச 27 | லை 28 | ■ | க 30 |
| தி 31 | ம் 32 | ட 33 | ■ | றை 35 | ப 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 25.04.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-165
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்



**- வழங்குவது ராஹில்**

## புன்னகை வயது

**அழகிய** பருவம் உனக்குத் தரப்பட்டிருக்கிறது.

அது உன்னை நீயே ரசிக்கின்ற வயது.

உன் காலத்தைக் கனவு மழை சுவீகரிக்கும்.

நெருப்புத் தீப்பிடிக்கின்றபோது நீ அந்த வயதுகளில் அமர்ந்திருப்பாய்.

உன் மனமெங்கும் பனித்தூறல் பெய்கின்ற போதும் நீ அந்தப் பருவத்தில் வசித்திருப்பாய்.

நீ உன்னை செதுக்குகின்ற உளிக் காலமது.

நீ உன்னை சிதைக்கின்ற சம்மட்டிக் காலமும் அதுதான்.

உன் வானத்தில் சூரியன் உருவாகின்ற வயதுகள் அவை.

உன்னை நீ விதையாக்கும் போது ஒரு விருட்சமாக உயர்வாய்.

உன்னை நீயே புதைக்கின்ற போது ஒரு விதையாக எழுவாய்.

உன்னை நீ தொலைக்கின்ற போது வெறும் புகைபோல் வந்து மறைவாய்.

நீ உனது உருவத்தை விடப் பெரிய மனது செய்தால் உன் வியர்வைத் துளிகளைப் பூக்கள் ஏந்திக் கொள்ளத் துடிக்கும்.

உன் கண்களை விடச் சிறிய மனது உன்னிடமிருந்தால் உன் புன்னகையைக்கூட இந்தப் பூமி சந்தேகிக்கும்.

இளமை என்பது நீ அடைகின்ற உதயம்.

நீ சிகரம் ஏறுவதற்கான ஏணிப் படி அது.

உன் குருதி கொந்தளிக்கின்ற போது உனது மூளை உன்னை விட்டுப் பிரிகிறது.

உனது குருதிக் காலம் இளமை.

உன் வயது வேர்விடத் துடிக்கின்ற போது நீ மழையாக மாறு!

உன் கனவுகள் உன்னைக் கட்டித்தழுவுகின்ற போது நீ எச்சரிக்கையாக இரு! குப்பைக் கனவுகளால் நீ மூடப்படலாம்.

உன் உணர்ச்சிகள் உன்னையே எரிக்கின்ற தீக்குச்சிகளாகலாம்.

கிளர்ச்சிகளால் நீ கிள்ளுப்படலாம்.

பாவ உணர்ச்சிகளால் நீ அள்ளுப்படலாம்.

உன்னை நீயே சந்தேகப்படு!

அழுக்குகள் மிதக்கும் நதியில் நீ மனது நனைக்கிறாயா?

உன் இளமையில் புழுக்கள்தான் வளரும்.

தளம்பிக் கொண்டிருக்கின்ற தண்ணீரில் நீ முகம் பார்க்கிறாயென்றால் உன் இனிப்புப் பருவம் சிதைந்துவிடும்.

உன் இளமை வாசல் மிக மோசமானது.

சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் ஒரேயொரு வாசல்தான்.

அந்த வாசல் உனது இளமை.

நீ உள்ளே நுழையும் போது எச்சரிக்கையாக இரு!

உன் இளமை பகலாக இருந்தாலும் பரவாயில்லை; நீ விளக்கேற்றி வை!

உன் இளமையில் இரவின் நிழல் விழ விடாதே!

அது இரவானால் நிலவும் முளைக்காது;

விண்மீன்களும் பூக்காது.

மலர் எண்ணங்களால் நீ பூத்து,

நறுமணச் சொற்களால் நீ வேர்த்து,

இனிப்புச் செயல்களால் உன்னைச் செய்!

-நீ உயிர் பெறுவாய்!

# நட்புக்காக......



பி.ஆஷா கௌரி, தில்லையடி.

"**சுஜிதா**" என்று அழைத்தவாறே அவள் வீட்டுக்குள் நுழைந்தாள் அகல்யா. "வா அகல்யா இப்படி இரு" என்று ஆசனத்தை எடுத்துக் கொடுத்த சுஜிதாவின் தாய், "சுஜி இங்க வாயேன்" என்று அழைத்தாள்.

"என்னம்மா யாரு" என்றபடியே வந்த சுஜிதாவின் முகம் அகல்யாவைக் கண்ட மாத்திரத்தில் மாறுவதை உள்ளூர வலியுடன் கண்டாள் அகல்யா. எனினும் சுதாகரித்துக் கொண்டு "எப்பிடி இருக்கே சுஜி" என்ற அகல்யாவை இடைமறித்தாள் சுஜிதா. "உனக்குத்தான் வேறு வேலையே இல்லாம இப்படி வந்து உட்கார்ந்திருக்க, எனக்கு வேலை இருக்கு" ஆளைவிடு. என்று கூறிய சுஜிதா விறுவிறுவென உள்ளே சென்று விட்டாள். சுஜிதாவின் தாய் தவித்துப் போனாள். "அகல்யா அவ ஏதோ கோபத்தில..." என்று இழுத்தவளை "பரவாயில்லையம்மா. அவளுக்கு ஏதோ பிரச்சினை போல. நான் அப்புறமா வாரேன்" என்று புறப்பட்டாள் அகல்யா. வழியெங்கும் பொங்கிவரும் கண்ணீரை கஷ்டப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டு வீடுவந்து சேர்ந்தவள் கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள். "ஏனிந்த சுஜிதா இப்படி நடந்து கொள்கிறாள். நான் அவளுக்கு என்ன தவறு செய்தேன்? எதற்காக என் அன்பை உதாசீனம் செய்கிறாள். ஒரு வேளை அவளுக்கு நான் வேண்டாதவளாகிவிட்டேனோ? என் நட்பை இனி அவள் துண்டித்து விடுவாளோ?" என்று எண்ணும் போது அகல்யாவுக்கு உலகமே இருண்டது.

எழுந்து வெளியே வந்தவளை அம்மா எதிர் கொண்டாள். "ஏண்டி இப்பிடி இருக்கே? இப்ப என்ன ஆகிப்போச்சு? மறுபடியும் படிச்சா நீ கண்டிப்பா பாஸ் பண்ணுவ சரியெண்டு சொல்லு அகல்யா" என்ற தாயிடம், "வேண்டாம்மா நான் படிக்கல" என்றாள். "என்ன அகல்யா எதுக்காக நான் இவ்வளவு சொத்து சேர்த்து வைச்சிருக்கேன் நீ நல்லா இருக்கோணும் எண்டு தானே? நீ எத்தனை முறை வேணும்னாலும் படிக்கலாம்" என்றபடி வந்தார் தந்தை. தாயும் தந்தையும் மாறி மாறி கேட்க, சம்மதித்தாள் அகல்யா. "நான் படிக்கிறேன். ஆனா ஒண்ணுப்பா, இங்க வேணாம் நாங்க ஊருக்கே போயிடலாம்" என்ற அகல்யாவை திகைப்புடன் பார்த்தார் தந்தை. "அகல்யா உனக்கு என்ன ஆச்சு. சுஜிதாவோடதான் படிப்பேன்னு அடம்பிடிப்பே இப்ப இப்பிடி சொல்றே" என்ற தந்தையிடம் "வேண்டாம் நான் சுஜியோட படிக்கலை இனி அதுமுடியாது அவ இனி வேற வகுப்புப்பா. அவதான் பாஸாயிட்டாளே நான் நாளைக்கே ஹாஸ்டலுக்கு போய் எல்லாம் எடுத்துட்டு வாரேன். நாளைக்கு ஊருக்குப் போகலாம்" என்று கூறிவிட்டு சென்ற அகல்யாவை திகைப்புடன் பார்த்தார்கள் பெற்றவர்கள்.

அகல்யா மறுநாள் ஹாஸ்டல் அறைக்குள் நுழையும் போதே சுஜிதா அமர்ந்திருப்பது தெரிந்தது. இவளைக் கண்ட மாத்திரத்தில் எழுந்து வெளியே சென்று விட்டாள் சுஜிதா. அகல்யா எதுவும் பேசாது தனது பைகளையும் புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

அன்று மாலையே அவர்கள் புறப்பட்டு விட்டார்கள். அகல்யாவுக்கு சுஜியிடம் சொல்வதா வேண்டாமா என்று யோசித்தே மூளை குழம்பிப் போனது. இறுதியில் அவள் சொல்லாமலே கிளம்பி விட்டாள்.

அகல்யா சுந்தரம் - சுமதி அவர்களுக்கு ஒரே பெண் ஏகப்பட்ட சொத்து. அகல்யா தன் ஊர்ப் பாடசாலையில் படிக்க முடியாது என்று சொல்லித்தான் சுஜிதா படிக்கும் பாடசாலைக்கு வந்து சேர்ந்தாள். அப்போது சுஜிதா 5ஆம் தரம் படித்துக் கொண்டிருந்தாள். அகல்யாவும் அதே வகுப்பில்தான் சேர்ந்தாள். நண்பர்கள் இல்லாத நிலையில் சுஜிதாதான் துணையானாள். சுஜிதா ஒரு ஏழைக்குடும்பத்தைச் சேர்தவள் அவளுக்கு ஒரு தம்பி மட்டுமே. அகல்யா தனியாகப் பிறந்தவள் என்பதால் சுஜிதாவின் நட்பு அவளுக்கு ஒரு இனம்புரியாத இன்பத்தைக் கொடுத்தது. இருவருமே பாடசாலையிலுள்ள விடுதியில் தங்கித்தான் படித்தார்கள். சுஜிதாவுக்காக அவள் வறுமையை அறிந்து பல உதவிகள் செய்தாள் அகல்யா. பெற்றோரும் அவ்வூரிலேயே தங்கிவிட தந்தை மூலம் சுஜிதாவின் தந்தைக்கும் ஒரு வேலை வாங்கிக் கொடுத்தாள். தனக்கு என்று எது வாங்கினாலும் அதைப் போலவே சுஜிக்கும் வாங்கி விடுவாள் அகல்யா சுஜியின் கைப்பை டயரி போன்றவைகூட அகல்யா. வாங்கிக் கொடுத்ததுதான் அதுவரை இது போன்ற எதையுமே கண்டிராத சுஜிதாவுக்கு அகல்யாவின் நட்பு அன்புக்காக விட பணத்துக்காக தேவைப்பட்டது. பாவம், இது எதுவுமே தெரியாத அகல்யா நட்புக்காக எதையுமே செய்தாள்.

காலங்கள் கடந்து இப்போது அகல்யா 10ஆம் தரம் படித்துக் கொண்டிருந்தாள். அவ்வருட இறுதிப் பரீட்சையில் அகல்யா எல்லா பாடத்திலேயும் அதிக மதிப்பெண் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றாள். ஆவலோடு அதை சுஜியிடம் கூறச் சென்றவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஆம், ஒரு மூலையில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். "சுஜிதா என்னாச்சு உனக்கு" என்றவளிடம் என்கூடப் பேசாதே. உன் புத்தி என்னான்னு இப்பதான் தெரியுது. எல்லாத்திலேயும் ஒரே மாதிரி இருக்கணும்ன்னு சொல்லிட்டு இப்ப நீயே இப்பிடி பண்ணுற. எல்லாப் பாடத்திலயும் உனக்குத்தான் புள்ளி கூட. எல்லாரும் என்னை கிண்டல் பண்ணுறாங்க" என்று சுஜி சொன்னபோதுதான் அகல்யாவுக்கு அவளின் (சுஜியின்) குணம் புரிந்தது. இதுவரைக்கும் எத்தனையோ விஷயங்களில் சுஜி முதலாவதாக வந்த போதெல்லாம் அகல்யா எவ்வளவு சந்தோஷப்பட்டிருக்கிறாள். ஆனால் சுஜிதாவுக்கு இயல்பாகவே ஒரு குணம், தன்னைவிட மற்றவர்கள் முன்னிலையில் இருந்தால் அவளுக்குப் பிடிக்காது.

அல்யாவுக்கு எல்லாம் புரிந்தபோது சுஜிதாவின் நட்புக்காக தன் படிப்பையே பகிர்ந்தளிக்க அவள் முடிவு செய்தாள். "சரி சுஜி கண்டிப்பா நான் இனி உன்னைவிட, அதிகமாக மார்க் எடுக்க மாட்டேன். போதுமா இப்ப கண்ணை துடைச்சிட்டு வா" என்று கூறிய அகல்யாவைப் பார்த்த சுஜி "நான் நம்ப மாட்டேன்" என்றாள். "சத்தியமா சொல்லுறேன் வா" என்று சமாதானப்படுத்தி சுஜியை அழைத்துச் சென்றாள். மனதில் ஆயிரம் கேள்விகள்.

க.பொ.த. பரீட்சையில் சுஜிதா பாஸ் பண்ண வேண்டும் என்ற நோக்கத்திலேயே இருந்ததால் தன் படிப்பைக் கோட்டை விட்டாள் அகல்யா. சுஜிதா நல்ல மார்க் வாங்கி உயர் படிப்பைத் தொடர அனுமதிக்கப்பட்டாள். அகல்யாவின் போதாத காலம் அவள் மறுபடியும் படிக்க வேண்டியதாயிற்று. ஆனாலும் அவள் சுஜிதா பாஸாகி விட்டதால் மகிழ்ச்சியுடன் அவளைப் பார்க்கச் சென்றபோதெல்லாம் அவள் இவளைத் தவிர்த்துக் கொண்டேதான் இருந்தாள். அதன் முடிவுதான் இன்று அகல்யா அவள் நட்பைத் துண்டிக்கும் வரை கொண்டுவந்து விட்டது.

அகல்யா ஊருக்குப் புறப்பட்ட மறுநாள் ஹாஸ்டலுக்கு வந்த சுஜிதா, தன் கைப் பையைத் தேடினாள். மேசையில் கிடந்த கைப் பையை எடுத்தவளுக்கு ஆச்சரியம். அது அவளுடையதல்ல. அது அகல்யாவுடையது எல்லாம் ஒரே மாதிரி இருக்க வேண்டும் என அகல்யாதான் வாங்கிக் கொடுத்தாள். இப்போது அது கைமாறி விட்டது. சுஜிதா கைப் பையைத் திறந்தாள். டயறி ஒன்று. சுஜிதா எடுத்து அதைப் படித்தாள். அகல்யாவின் முத்து முத்தான கையெழுத்துக்களில் எல்லாமே சுஜியைப் பற்றியதுதான். அவளுக்காக தான் செய்தது முதல் அவ்ளை சுஜிதா வெறுத்தது வரை.... எல்லாமே ஒரு உண்மை அன்புள்ள ஜீவனின் உள்ளத்தைப் பறைசாற்றியது.

சுஜிதா ஆடிப்போனாள்.... "எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள்? எதற்காக நான் இவளைப்போய்.... எவ்வளவு இரக்கமற்றவளாக நடந்திருக்கிறேன்." "சுஜிதாவுக்கு வாயிவிட்டுக் கதறவேண்டும் போலிருந்தது. அகல்யா என்னை மன்னிப்பாயா? உனக்கு நான் எவ்வளவு தீங்கு செய்திருக்கிறேன். எப்படியெல்லாம் உன் மனதைப் புண்படுத்தியிருக்கிறேன். அகல்யா இனி உன்னைக் காணாமல் என் மனம் சாந்தியடையாது. உன்னிடம் மன்னிப்புக் கேளாமல் நிம்மதி கிடையாது. அகல்யா நீ எங்கே இருக்கிறாய்?"

சுஜிதா புறப்பட்டுவிட்டாள். அகல்யா இவளுக்குக் கிடைப்பாளா? இவளை மன்னிப்பாளா? இவர்கள் நட்பு மீண்டும் தொடருமா? இவர்கள் வாழ்வில் வசந்தம் வருமா? காலம்தான் பதில் சொல்லவேண்டும்.

# சோகம் இவன் சொந்தம்



ஜெ.டி.எம். முர்ஷித்,
அட்டாளைச்சேனை

காலத்தின் ஓட்டத்தில் விதி விளையாடிய காலங்களில் ஆசைகளின் அடுக்குகள் வறுமைத் தீயால் எரிக்கப்பட்ட மாயமான காலமொன்றில் "சுரேஸ்" ஓர் ஏழைக் குடும்பத்தில் முதல் மகனாகப் பிறந்தான்.

சுரேஸின் குடும்பத்தில் மொத்தம் ஏழு பேர். நீண்ட காலமாக வறுமையின் காற்றை மட்டுமே அவனும் அவனது குடும்பத்தினரும் சுவாசித்தனர். அவனது பெற்றோர் கூலி வேலை செய்து குடும்பச் செலவையும் படிப்பதற்கான செலவையும் செய்து வந்தார்கள். வயதும் பெற்றோரைத் துரத்திக் கொண்டே இருந்ததால், அவன் எதிர்காலச் சுமைகளை சுமக்கவேண்டிய சுமைதாங்கியாக மாற வேண்டிய நிலமை ஏற்பட்டது.

இளமைக் காலம் முதல் சுரேஸின் ஆசைகளும் அவனது எதிர்பார்ப்புகளும் வறுமையால் வதைக்கப்பட்டு புதைக்கப்பட்டது. அவன் அறிந்த காலம் முதல் அவனது பெற்றோர் வடிக்கும் வியர்வைத் துளிகளை அவனது இரத்தத்தில் கலந்துகொண்டு பெற்றோரின் ஏக்கங்களுக்குள் மட்டுமே அடங்கி இருந்தான்.

சுரேஸின் பாடசாலை வாழ்க்கையில் அவனது உரிமைகளும், மரியாதைகளும், மானமும் "அவன் எளிய குடும்பத்தில் பிறந்தான்" என்ற ஒரே காரணத்துக்காக ஆசிரியர்களாலும் அவனது நண்பர்களாலும் பறிக்கப்பட்ட காலத்தின் நினைவுகளும் அவனது உள்ளத்தில் உதித்த வண்ணமே இருந்தன.

சுரேஸ் 13ஆண்டுகள் ஒரே பாடசாலையில் படித்தபோதும் அவனது பெயரைக் கூடத் தெரியாமல் "அடேய் என்றே கூப்பிடும் ஆசிரியர்களையும் அவனது வாழ்க்கையில் காணக் கிடைத்தது.

சுரேஸ் வகுப்பில் முன்வரிசையில் அமர்ந்த ஞாபகமே இல்லை. ஒருசில ஆசிரியர்கள் வந்தால் "அடேய் பின்னால் போய் உட்காரு" என்றே கூறுவார்கள். அவனுக்கு கொப்பி எடுத்துக் கொள்ள வழியில்லாமல் ஒரே கொப்பியில் இரண்டு, மூன்று பாடங்களை எழுதி ஆசிரியரால் விட்டுக்கு விரட்டப்பட்ட போது அவனில் கொதித்த இரத்தமும், மன வேதனையும் அந்த ஆசிரியரைக் காணும்போது நினைவுக்கு வந்து வியர்த்துப்போவான்.

சமுதாயத்திலும் "சுரேஸ்" சில காலம் ஒதுக்கப்பட்டே இருந்தான். சாமான் தூக்குவதற்கும் வேலைகளைச் செய்வதற்கும் பலர் அவனை அழைத்தபோது அவனது நிலையை உணர்ந்து மறுக்காமல் அதைச் செய்து கொடுத்தான். அவனது குடும்பமும் ஏழ்மையின் காரணமாக ஒதுக்கியே வைக்கப்பட்டிருந்தது.

சுரேஸின் வாலிபமும் ஒரு வாழ முடியாத வனாந்தரத்துக்குள்ளேயே உறங்கிக் கிடந்தது. சுரேஸும் சிலகாலம் கூலிவேலை செய்யத் தொடங்கினான். அவனது நண்பர்கள் அவனைப் பார்த்து கேலி பண்ணுவதும் வழமையாகிவிட்டது. ஆயினும் சுரேஸ் அவற்றை ஓர் இழிவாகவோ வெட்கமாகவோ கொள் ளாமல் வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளத் தொடங்கினான்.

எதிர்காலம் என்பதை சுரேஸ் வெறும் கனவாகவே உணர்ந்ததால் புதுமைகளும் அவனுக்கு அநாகரீகமாகவே தோன்றியது. ஆடம்பர ஆடைகள் அவனுக்கு அநாகரீகமாகத்தான்தோன்றின. வழமைபோல் இருநூறு அல்லது இருநூற்றி ஐம்பது ரூபா சேட்டையே அணிந்து கொள்வான் அல்லது ஒரு நானூற்றி ஐம்பது ரூபாவில் ரீசேட்.

வறுமை துரத்திய சுரேஸின் வாழ்வில் வாலிப ஏக்கங்களும் கொத்திக் கொண்டே இருந்தன. காதல் என்பது அவனுக்கு கசப்பாகவே இருந்தது. ஆயினும் லீலாவும் மாலாவும் சுரேஸுக்காகப் போட்டிபோட்டுக் கொண்டிருந்தார்கள். அவன் அதை உணர்ந்திருந்தாலும் தன் உள்ளத்தில் நான் எளியவனாக இருக்கிறேன் என்ற ஏக்கம் அதற்கு இடம் கொடுக்கவில்லை என்றாலும் சரோ எதிர்பாராத விதத்தில் அவனுள் நுழையத்தொடங்கினாள். ஆரம்பத்தில் சுரேஸ், சரோவை தங்கை என்ற ரீதியிலேயே பழகினான். சரோ தன்னைவிட உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவள் என்பது சுரேஸுக்குத் தெரியும் என்பதால், அவளைத் தங்கை என்றே நினைத்தான். சரோ அழகானவள்தான். ஒழுக்கமுடையவள். இறைபக்தியில் உன்னதமானவள். சரோவும் சுரேஸை அண்ணன் என்றே பார்த்து வந்தாள். ஆனால் சிறிது காலத்தில் சுரேஸின் உள்ளத்தில் சரோவின்மீது காதல் ஏற்பட்டது. தான் வறுமையில் வாடுபவன் என்ற ஒரே காரணத்துக்காக அதை அவளிடம் சொல்லாமல் மனதுக்குள்ளேயே புதைத்துக் கொண்டிருந்தான்.

எனினும் அவனில் அடங்கியிருந்ததை ஒரு நாள் அவளிடம் சுரேஸ் கூறினான். அதற்கு சரோ மௌனமாக இருந்தாள். காதலிப்பது போன்று நடிக்கத்தொடங்கினாள். சரோ தன்னால் முடியுமான அத்தனையையும் சுரேஸுக்காகச் செய்யத் தொடங்கினாள். ஆனால் சுரேஸுக்கோ பெரிதாகச் செய்யுமளவுக்கு அவனிடம் வசதி இருக்கவில்லை.

காலம் உருண்டோடிய போது சுரேஸ் எதிர்காலத்தைப் புதியதொரு திட்டமிடலின் கீழ் கொண்டுவந்தான். இனி எதிர்காலம் ஒளிமயமானதாக அமையுமென யோசித்தான். இருந்தும் அவனது வாலிப ஏக்கங்கள், கனவுகளுக்குள் மட்டுமே கரைந்து போனது. சிறிது காலத்தில் சரோவும் மௌன விரதம் கொள்ளத் தொடங்கினாள். சுரேஸைவிட்டு சரோ படிப்படியாக ஓரமாகத் தொடங்கினாள். சரோவின் உள்ளத்தில் சுரேஸின் மீதான பாசத்தின் செறிவு படிப்படியாக குறையத் தொடங்கியது. சுரேஸும் பல வகையில் முயற்சி செய்தான். சரோ என்ன பிரச்சினை எதுவானாலும் சொல்லுங்க நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று சுரேஸ் சரோவைச் சந்திக்கும் போதெல்லாம் கேட்கத் தொடங்கினான். அதற்கு சரோ ஒன்றுமில்லை என்று கூறி மௌனத்தை, மட்டுமே மொழிந்தாள்.

காலத்தின் ஓட்டத்தில் சுரேஸ் ஊரைவிட்டு வெளிச்சென்று தூரத்தில் வாழ நேர்ந்தது. அங்கு அவனது பழைய நினைவுகள் ஒவ்வொரு நாளும் வதைத்துக் கொண்டே இருந்தன. ஊரும் வெறுப்பாக மாறியது. தடைசெய்யப்பட்ட கவிதைகளும் அவனுள் உறங்கிக் கொண்டே இருந்தன. சரோவைக் காணும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சுரேஸின் இரத்தம் கொதித்து வற்றிவிடும்.

இத்தனை நாட்களாய் உறங்கிக் கிடந்த ஆசைகளும் தூக்கியெறியப்பட்டதால் அவன் எதிர்காலத்தை வேறொரு திசையில் திட்டமிடத் தொடங்கினான். "சரோவின் மௌனம்" தன்னை ஒதுக்கியதாக உணர்ந்த சுரேஸின் மனத்திரையில் அவனது பழைய ஞாபகங்கள் பொங்கியெழத் தொடங்கின. தனது வறுமையின் காரணமாக தனக்குப் படித்துத் தந்த ஆசிரியர்களே தன்னை ஒதுக்கிப் பார்த்தபோது, ஏன் சமுதாயமே தன்னை ஒதுக்கிய போது, சரோ ஒதுக்கிவிட்டது தப்பில்லை என உணர்ந்தான்.

ஆயினும் தனது எதிர்காலத்தின் மீது தனக்கு நம்பிக்கை இல்லை என்று உணர்ந்த அவன், சரோவின் நினைவுகளை உள்ளத்தில் புதைத்துக் கொண்டு அவளை இனி நான் கனவில்கூட காதலி என நினைக்கமாட்டேன் என தன் உள்ளத்திலேயே சத்தியமிட்டுக் கொண்டு - மீண்டும் அவளைத் தங்கையாகவே நேசிக்கத் தொடங்கினான் சுரேஸ்.

சரோவின் வாழ்க்கைக்கு தன்னால் சந்தோசத்தைக் கொடுக்க முடியாமல் போன போதும், சரோ சந்தோசமாக வாழ வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான். அதற்கு தன்னால் எந்த உதவியையும் செய்வதற்கு அவனைத் தயார் படுத்திக் கொண்டான். ஆனால் திருமணத்தைத் தவிர....

சரோவின் சந்தோசத்தில் மட்டும்தான் சுரேஸின் நிம்மதி இருக்கும் என அவன் எப்போதும் இதயத்தைத் தட்டிக் கொள்வான். ஆனால் சரோவின் கழுத்தில் வேறொருவன் மாலையிடும் நாளை அவன் கண்கள் பார்க்கக்கூடாது; அவன் காதுகள் கேட்கக்கூடாது என்று இறைவனை எப்பொழுதும் இறைஞ்சியவனாகவே நின்றான். ஆனால் அதற்கும் சுரேஸ் உதவி செய்வேன் என எண்ணிக் கொண்டான். அன்றைய நாளில் ஊரைவிட்டு தூரத்தில் வாழவேண்டும் என மட்டுமே விரும்பினான்.

இளமை முதல் இதுவரையில் அவனின் சோக நிகழ்வுகளுக்கு வறுமை ஒரு காரணமானதால் அவனைப் போன்றதொரு வாழ்க்கை வேறெந்த மனிதனுக்கும் வந்துவிடக் கூடாது என்பதே அவனது பிரார்த்தனை.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**உயர்ந்த** கோபுரங்கள் தாழ்ந்த உள்ளங்கள் என்று ஓர் கலைஞன் சொன்னதை நினைவுபடுத்திப் பார்த்தால் வெகு இலகுவாகப் புரிந்துவிடும் அதன் உண்மைத்தன்மை கோபுரங்களில் வாழ்கின்றவளாயினும் பதவிகள் பட்டங்கள் பெற்றவர்களாயினும் இருக்கலாம் ஆனால், உள்ளத்தால் உயர்ந்தாருக்கு ஒப்பாவாரா? என்பது நெடுநாளையக் கேள்வியாகவே இருந்து வருவது வெளிப்படை. உயரந்தோர் என்பது எதைக் குறிக்கிறது? பயன்படும்தன்மையையல்லாது வேறு எதையும் குறிப்பிடுவதாகக் கொள்ள முடியாது அதற்கு வாய்ப்பில்லை. மழை நீர் ஒவ்வொரு துளியும் தூய்மையானதுதான். ஆனால், அதன் பயனைப் பொறுத்துத்தான் உயர்வும் தாழ்வும் அடைகிறது. கோயிற் கேணியில் வீழ்ந்த மழைத்துளி தீர்த்தமாகிறது. சாக்கடையில் விழுந்த மழைத்துளி சாக்கடைதானே?

*"மேலிருந்தும் மேலல்லார் மேலவர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல்லவர்"*

கோபுரத்திலோ குடிசையிலோ வாழலாம். உயர்பதவியிலோ தாழ்ந்த நிலையிலோ இருக்கலாம். உள்ளத்தில் மேன்மையற்றவர் மேலவராகார்.

**✉ திருமலைச் சம்பவங்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டவை என்று இரு தரப்பும் சொல்கிறதே, யாரின் திட்டம் இதில் நிறைவேறியுள்ளது?**

-வீ.கோபாலகிருஷ்ணன், லிங்கநகர்.

புலிகள் விரித்த வலையில் அரசு விழுந்து விட்டதா அல்லது சிங்களப் பேரினவாதம் தானே வலைவிரித்து மாட்டிக் கொண்டதா என்பது எனக்கும் குழப்பமாகத்தான் இருக்கிறது.

**✉ இரண்டாம் கட்ட ஜெனீவாப் பேச்சுக்கு மூடுவிழா நடத்தப்பட்டுவிட்டதே, இரு தரப்பும் இதுவரை - எதுவரை ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்துள்ளதாக நினைக்கிறீர்?**

-பொன்.பிரகலாதன், சாவகச்சேரி.

கடல் வழிப் பயணத்துக்கு படகு கேட்டு வழங்கப்பட்டது. ஹெலிக்கொப்டர் கேட்டதற்கு தனியார் ஹெலிக்கொப்டர் வாடகைக்கு வாங்கிக் கொள்ள நோர்வேக்கு அனுமதி கொடுத்தது, இதற்கெல்லாம் மேலாகத் தொடராக வெடிக்கும் கிளைமோர் குண்டுகளால் படையினர் பலியாகிக் கொண்டிருக்கின்றபோதும் புலிகளின் பாதுகாப்புக்கு அரசு உத்தரவாதம் தரும் என்று கூறியிருப்பது - என்பதை எல்லாம் பார்க்கும்போது புலிகள் தரப்பிலிருந்து விட்டுக்கொடுப்பு இதுவரை செய்யப்படவில்லை என்றே தோன்றுகிறது.

## சிந்தியா
### பதில்கள்

**✉ திருமலையில் வன்முறைகள் இடம் பெற்றபோது இந்தியப் பிரதமர் எமது ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கவலையும் அதிருப்தியும் தெரிவித்ததாக அறிந்தேன். உண்மையா?**

-க.கோணேஸ்வரி, காந்திநகர், திருமலை.

அது உண்மைதான். அதனால் என்ன பயன்? சும்மா சம்பிரதாயத்துக்காக இப்படிச் செய்வதால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எதையும் செய்துவிட முடியாது. மன்மோகன்சிங்கின் தொலைபேசி உரையாடல் தமிழ் மக்களின் அச்சத்தைக் குறைக்க உதவவில்லை என்பதுதான் உண்மை.

**✉ மீண்டும் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் மக்களுக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதே, இதைத் தீர்க்க வழியே இல்லையா?**

-தேவதர்ஷினி, சிலாபம்.

நாடும், நாமும் கடனாளிகளாக இருக்கும் வரை சர்வதேசப் போக்குக்கு சவால் விடுவதைப் பற்றிச் சிந்திப்பது சிறுபிள்ளைத்தனமானது தான். எரிபொருளுக்கு மாற்றாக நம்மிடம் என்ன இருக்கிறது என்று சிந்திப்போம்.

**✉ சித்திரை விடுமுறையில் சிந்தியா செய்த முக்கியமான காரியம் எதுவும் உண்டா?**

-வேலாயுதம் கமலினி, பருத்தியடைப்பு.

உண்டு. சேமிப்பிலிருந்ததைச் செலவு செய்ததுதான்.

**✉ இலங்கை கிரிக்கெட் அணிக்கு மஹேல ராசியில்லாத தலைவர் என்று தெரிந்தும் அவரின் தலைமையில் தானே அணி லண்டன் சென்றுள்ளது?**

-எம்.எப்.அன்சார், பேருவளை.


சனத் ஓய்வு பெற்றுவிட்டார். அத்தபத்து நோய்வாய்ப்பட்டு விட்டார். அடுத்து சீனியர்கள் என்று பார்த்தால் வாசுவும் முரளியும் தான் இருக்கிறார்கள். தவிரவும், யார் தலைவரானாலும் சங்கக்காரதான் உதவித் தலைவர். இதில் யாரைத் தலைவராக நியமிப்பது என்ற குழப்பம் ஒருபக்கம். அடுத்த ஆண்டு உலகக் கோப்பைப் போட்டிக்கு முன்னர் அணியின் நிலை இன்னும் மோசமடையுமோ என்ற கவலையும் இரசிகர்கள் மத்தியில் உள்ளது.

**✉ "திருப்பதி"யில் அஜித் பட்டையைக் கிளப்பிக் கொண்டிருக்கையில், விஜய் புதிய படமுமில்லாமல், புதிய படம் பற்றிய அறிவிப்பும் இல்லாமல் இருக்கிறார். விஜய்க்கு என்னாச்சி?**

-விஜய் ரசிகை - பூமகள்,
போகவந்தலாவ.

போட்டியில்லாமல் போனது அஜீத்துக்கும் வருத்தம்தான். ஆனால் "திருப்பதி"யை இயக்கிய பேரரசுவிடமே விஜய் கேட்டுக்கொண்டதற்கிணங்க "முரசு" எனும் தலைப்பில் புதிய படம் தயாராகி வருகிறது. "திருப்பாச்சி", "சிவகாசி" என்று விஜய்க்கு வெற்றிப்படங்களை இயக்கிய பேரரசு "முரசு" விலும் வெற்றிக்கு வழி சமைப்பார் என்று விஜய் நம்பிக் கொண்டிருக்கிறார். அதற்கிடையில் அஜீத்தின் "காட்பா..தர்" வந்துவிடும் போல் இருக்கிறது "தலை"யின் காட்டில் மழை.

**✉ கருணா குழுவைத் தாக்குவதற்கு அணிகளை கடல் வழியாகக் கொண்டுவர உதவிய ஒப்பந்தம், கிழக்குப் புலிகள் வன்னிக்குக் கடல் வழியாக வருவதற்கு ஏன் தடையாக இருக்கிறது?**




-ரி.விமலன், தெஹிவளை.

ஒப்பந்தத்துக்கு முரணாக முன்னர் நடந்த தேசத் துரோகம் தமது ஆட்சிக் காலத்தில் நடக்கக் கூடாது என்பதில் தற்போதைய ஆட்சியாளர்கள் கவனமாக இருக்கிறார்களாக்கும்.

**✉ பேச்சுவார்த்தைகள் மூலமாகவே இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமாக இருக்கும் போது, ஏன் நாலாங் கட்ட ஈழப் போர் பற்றிச் சிந்திக்க வேண்டும்? போருக்காக மூன்று தசாப் தங்களைச் செலவழித்த நாம், சமாதானத்துக்கு நான்கு வருடங்களைத்தானே செலவழித்துள்ளோம்?**

-வைத்தியநாதன், செட்டிகுளம்.

உங்களைப் போல் எத்தனை பேர் சிந்திப்பார்கள் என்பது ஆய்வுக்குரிய விடயம் தான். ஏன் நாலாம் ஈழப் போர் நடக்க வேண்டும் என்ற கேள்விக்கு ஒரு குட்டிக் கதை உண்டு.

*ஒருவன்* :- ஏண்டா இரண்டாம் உலகப் போர் நடந்தது.

*மற்றவன்* :- அதுவா... முதலாம் உலகப் போர் ஒழுங்காக நடக்கவில்லையாம்...

அதுக்காகத்தான் என்றானாம்.

**✉ நம்மைப் பார்த்துச் சிரிப்பவர்களை நண்பர்களாக ஏற்றுக்கொள்ளலாமா?**

-மா.அசோக்குமார், மட்டக்களப்பு.

எனக்குத் தெரிய சதிகாரர்களும் அழகாகத் தான் சிரிக்கிறார்கள்.

**✉ பத்து வருடங்களுக்கு முந்தைய நேரத்துக்கு மீண்டும் போய்விட்டதன் மாற்றம் எப்படியுள்ளது? நேர மாற்றங்களைச் செய்துகொள்வதால் பாதகம் ஏதும் உண்டா?**

-அ.புண்ணியமூர்த்தி, குருநாகல்.

தேவையான மாற்றம் தான். அமெரிக்காவில் ஆறு மாதத்துக்கு ஒரு தடவை நேரத்தை முன்னோக்கியோ அல்லது பின்னோக்கியோ மாற்றிக் கொள்கிறார்கள். கிழக்கு மேற்காக ஆயிரக் கணக்கான மைல்கள் பரவிய முழுக்கண்டம் நியூயோர்க்குக்கும் - சான்.பிரான்சிஸ்கோவுக்கும் உள்ள தூரம் 3250 மைல்கள். அவர்கள் அதற்கேற்ப நேர மாற்றத்தைச் செய்யாவிட்டால் சூரியோதயமும் அஸ்தமனமும் நேரங்களால் குழம்பிப்போய் விடுமாம்.

**✉ நம் அரசியல்வாதிகளை அவ்வப்போது கொடை வள்ளல்கள் என்று புகழ்கிறார்களே, உண்மையில் வள்ளல்கள் எப்படி இருப்பார்கள்.... நம் அரசியல் வாதிகளைப் போலவா?**

-எம்.சி.பஸ்மினா பர்வீன், ஓட்டமாவடி.

தகுதிகளுக்கு அப்பாற்பட்ட அரசியல்வாதிகள் பற்றி எனக்கு அவ்வளவாக அபிப்பிராயம் இல்லை. "நான் கொடுக்கிறேன் எனும் அகங்கார உணர்வு கொஞ்சம்கூட இல்லாமல் தன்னிடம் இருப்பதை மனதார வாரி வழங்குபவனே வள்ளல்" எனப் புகழப்படுகிறான்.

**✉ முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைப் புலிகள் மனித வெடிகுண்டை வெடிக்க வைத்துக் கொலை செய்தார்கள் என்பது தெரியும். அந்தக் கொலை தொடர்பான விபரங்களைப் புலன் விசாரணை செய்த டி.ஆர்.கார்த்திகேயன் மற்றும் ராதா வினோத் ராஜு ஆகிய இருவரும் இணைந்து ஒரு புத்தகம் எழுதியிருப்பதாக அறிகிறேன். அந்தப் புத்தகத்தின் பெயர் என்ன? எங்கே பெற்றுக்கொள்ள முடியும்? கட்டாயம் அறியத்தரவும்.**


-மு.தியாகு, தம்பலகாமம்.

அந்தப் புத்தகம் ஆங்கிலத்தில் தான் எழுதப்பட்டுள்ளது. 'Triumph of Truth' (Rajiv Gandhi Assasination - Investigation) என்ற ஆங்கிலப் புத்தகம் இப்போது தமிழில் "வாய்மையின் வெற்றி" (ராஜீவ் காந்தி - படுகொலை புலனாய்வு) என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றியிருப்பவர் எஸ்.சந்திரமௌலி. இதற்கு வாழ்த்துரை வழங்கியிருப்பவர் பிரபல எழுத்தாளர் சுஜாதா. இந்திய மதிப்பில் 220 ரூபா அப்புத்தகத்தின் விலை. எழுத வேண்டிய விலாசம்: 340, ராஜராஜன் பதிப்பகம், 19 கண்ணதாசன் சாலை, சென்னை - 17.

# போதையடி உன் முறுவல்

**செண்பகவல்லியின்** ஓலை அருள்வர்மனின் மனதில் தேக்கிவைத்திருந்த காதல் உணர்வுகளை யெல்லாம் கரைபுரண்டோடச் செய்துவிட்டது போலும். இரவு முழுவதும் தூக்கம் கெட்டுக் கிடந்ததன் பிரதிபலிப்பாக முகத்தில் பொலிவிழந்து காணப்பட்டான். மாறனின் வரவை அவன் எதிர்பார்த்திருக்கவில்லைத்தான். ஆனாலும் மாறனாவது வந்தால் ஓர் அளவுக்காவது தனிமையின் கொடுமை குறையுமே என்று நினைத்தான். அந்த நினைப்புகள் அகல மறுத்தபோது, "மீண்டும் ஆரம்பித்து விட்டதா?" என்ற மாறனின் கேள்வி அருள்வர்மனை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

"என்ன வான்வெளியையே பார்த்துக் கொண்டிருக்கிறாய்? ஓகோ! வானத்தில் தோன்றுகின்ற நட்சத்திரங்களையெல்லாம் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறாயோ? வான்வெளி இன்று மந்தாரமாக இருக் கிறதே, மங்கிக் கிடக்கின்ற நட்சத்திரங்களை யெல்லாம் மாலை கோர்த்தாலும் ஒளி தராதே" என்றான் பரிகாசமாக.



"நண்பா வானத்து நட்சத்திரங் களை என்ன, வையத்தில் விளைகின்ற வைரக் கற்களையெல்லாம் ஒன்றுவிடாமல் சேர்த்தெடுத்து என் மார்புக்குள் அமைத்து வைத்திருக்கும் வைர மாளிகையில் என் உயிருக்கும் மேலான உயிரோவியத்தை கொலுவீற்றிருக்கச் செய்திருக்கிறேன். ஒளியில்லா நட்சத்திரங்களை தள்ளிவிட்டு ஒளியுள்ள வைகளையெல்லாம் ஒன்று திரட்டி தோரணங்களாகத் தொங்கவிட்டிருக்கிறேன். அவைகள் கூட ஒளி மங்கித்தான் இருக்கின்றன. ஏன் தெரியுமா? அந்த அழகுச் சிலையின் முகத்தின் முன்னால் அவைகளால் பிரகாசிக்க முடியவில்லை. நீ பார்க்கும் நட்சத்திரங்களெல்லாம் பிரகாசம் அற்றவையென்று நான் ஒதுக்கிவிட்டவை போலும்" என்றான் அருள்வர்மன்.

"ஆகா, உன்னை வில்வீரன் என்று நினைத்தது

## தருவது கற்பகன்

தப்பாகிவிட்டது" என்றவனை முறைத்துப் பார்த்தான் அருள்வர்மன். "என்ன அதுக்குள் கோபம் வந்துவிட்டதா? சொல்லிலும் நீ வல்லவன் என்று சொல்லவந்தேன். உன் செண்பகவல்லி போன்ற பூவுலகப் பெண்கள் மட்டுமல்ல, வானுலகக் கன்னியரும் மயங்கிவிடுவார்கள் உன் வார்த்தை அலங்காரங்களால்" என்றவன் கலகலவென்று சிரித்து விட்டான்.

அவன் சிரிப்பில் அருள்வர்மனிடம் உள்ள நட்பின் செழுமை கரைபுரண்டோடியது மட்டுமல்ல, அருள்வர்மனிடம் அவன் வைத்திருக்கும் மதிப்பு, அதன் உண்மைத் தன்மை இவைகளெல்லாம் பிரதிபலித்து நின்றது.

அருள்வர்மன், மாறன் தன்னிடத்தில் வைத் திருக்கும் நட்புக்கு கைம்மாறு செய்ய வகையில்லையே என்பதை வெளிக்காட்ட முடியாததொரு சங்கடமான நிலையில் இருந்தான். ஆயினும் "நண்பா! என்னை என் தகுதிக்கு மேலாகப் புகழ்ந்து மேலும் என்னைத் துன்பத்துக்கு உள்ளாக்குவதே உனக்கு வேலையாகி விட்டது" என்றவன் நன்றிப் பெருக்கோடு மாறனைப் பார்த்தான்.

"நண்பா! அளவுக்கு மீறிப் புகழ்கிறேன் என்று எதை வைத்துக் கொண்டு சொல்கிறாய்?" சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகழ் வெல்லல் யார்க்கும் அரிது" என்று பொய்யாமொழி கூறுகிறதே, அதைச் சொன்னேன். யானைக்குத் தன் பலம் தெரிவதில்லை. அது போல் ஆற்றல் உள்ளவர்கள் தங்களைப் பொருட்டாக நினைப்பதில்லை. அதனால்தான் அவர்கள் தங்களையே அழித்துக்கொண்டு பிறருக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும் மெழுகுவர்த்தியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஒப்பீடு செய்யத்தான் யாரும் முன்வருவதில்லை. பாவம், அனுதாபத்துக்குரியவர்கள்" என்று முடித்தான் மாறன்.

"தத்துவம் மட்டும் வாழ்க்கையாகி விடாது நண்பா. மனித இயல்பு ஆசாபாசங்களுக்கு உட்பட்டது. நானும் மனிதன் தானே" என்றவனின் முகத்தில் தோன்றிய கவலைக் குறி மாறன் உள்ளத்தை வெகு வாகத் தாக்கியிருக்க வேண்டும். மெதுவாக அருள்வர்மனின் தோளைத் தொட்டவன் "நண்பா! இன்னும் சில தினங்களில் போர்ச்சூழல் மாறும். அதன் பிறகு எமக்கெல்லாம் போதியளவு ஓய்வும் கிடைத்து விடும். அதுவரையிலாவது உணர்வுகளுக்குத் தடை போட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதை நாம் அனுசரிக்காமல் விடின் உடல் மட்டுமல்ல, உள்ளமும் பாதிக்கப்படும் என்பதை மறக்கலாகாது" என முடித்தான்.

ஓய்வு கிடைத்துவிடும் என்று மாறன் சொன்ன வார்த்தை அருள்வர்மனுக்குப் பெரும் ஆறுதலையும் புதியதொரு உற்சாகத்தையும் கொடுத்திருக்க வேண்டும். "நண்பா! பங்குனித் திங்களில் பெய்யும் மழைபோல் இருக்கிறது உனது ஆறுதல் மொழி. பாலைவனத்தில் பயணம் செய்தவன் பனிபடர்ந்த மலையின் ஓரம் வந்தடைந்ததுபோல் குளிர்கிறது. பாதகம் இல்லை, பாசத்துக்கும் பனிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது போல் தெரிகிறது. பாராட்டுகிறேன் உன் நட்பை" என்றவன் கைத்தலத்தை மாறனின் பக்கம் நீட்ட, மாறன் அதை இறுகப் பற்றிக் கொண்டான்.

நிம்மதிப் பெருமூச்சோடு விழிகளை மூடிய அருள்வர்மன் எவ்வளவு நேரம் உறங்கியிருப்பானோ தெரியவில்லை. கண்களைத் திறந்தவனுக்கு அதற்குள் விடிந்துவிட்டதா? என்ற எண்ணம் தோன்றியதால் சாளரத்தின் திரையை சற்று விலக்கிப் பார்த்தான். மூன்றாம் சாமத்தைக் கடந்து விடி வெள்ளி தோன்றி யிருந்தது. அந்த வெள்ளியின் ஒளியைக் கண்டதும் அருள்வர்மனுக்கு செண்பகவல்லியின் கண்கள் தான் ஞாபகத்துக்கு வந்தது. அவள் கண்களில் தோன்றிய ஒளியில் அவன் கண்ட அற்புதங்கள் தான் எத்தனை எத்தனை! அவள் பேசுகின்ற ஒவ்வொரு கண்ஜாடையிலும் வார்த்தைகளின் பிரதிபலிப்புக்கள் தோன்றி நிற்கும். அந்த வெண்தாமரை இதழ்களை ஒத்த விழிகளில் விளையாடும் வண்டின் உயிரோட்டங்கள் தான் எத்தனை? அவள் பொய்க் கோபம் காட்டி நிற்கும் பொழுதெல்லாம் அவள் மாங்கனிக் கன்னத்தில் குடியேறும் சிவப்புத்தான் எத்துணை ஜாலங்களைக் காட்டி நிற்கும். இவைகள் எல்லாம் அருள்வர்மனின் மனத்திரையில் நிழலாடி மறைந்தவண்ணம் இருந்தன. மீண்டும் தூக்கம் அவன் கண்களைத் தழுவ மறுத்தது "இல்லை இல்லை என்பவர்க்குக் கவலையில்லை; ஆனால் இருந்தும் இல்லை என்பவர்க்கு அமைதியில்லை" என்பார்களே! அது இந்த நிலைதானோ? என்றெல்லொம் எண்ணியது அவன் தனிமையினை ஆற்றாத மனம். "செண்பக வல்லி" என்ற பெயரை அவனை அறியாமலே உச்சரித்தன அவன் உதடுகள்.

செண்பகவல்லியின் காதல் ஏற்பட்டுச் சில மாதங்களேயானாலும் அந்த சில மாதங்களுக்குள்ளேயே அவர்களுடைய காதல் வாழ்க்கை அளவிட "முடியாத ஓர் பாசப் பிணைப்பினை ஏற்படுத்தியிருந்த தென்றால் அது செண்பகவல்லியில் அவன் கொண்டிருந்த மோகம்; அவள் நடந்து கொண்ட விதம் அருள்வர்மனைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது. அவள் காட்டிய பாசம் ஈடிணையற்றது. அவள் "அத்தான்" என்று அழைக்கும் விதம் ஆயிரம் தடவை முத்தமிட்டது போலிருந்தது அவனுக்கு.

அன்றொருநாள் அவன் வாழ்க்கையிலேயே அரியதோர் பொன்னாள். அது அவனால் என்றுமே மறக்க முடியாத ஒரு நன்னாள் அதை அவன் நினைத்த போதெல்லாம் கனவுலகில் மிதந்துகொண்டுதான் இருப்பான். அது இப்போதும் அவன் மனக் கண்ணில் நிழலாடியது.

அன்று அமாவாசை. அகிலத்தையே அது இருளடித்துக் கொண்டிருந்தாலும் அந்த இளம் காதலருக்கு இயற்கை இன்பங்களையெல்லாம் அள்ளி வழங்கிக் கொண்டிருந்தது. பஞ்சணையை விஞ்சிடும் செண்பக வல்லியின் பட்டுடல் தந்த சுகம் அவனைப் பரவசத்தில் ஆழ்த்தியிருந்தது. அவள் மடியில் அவன் மல்லாக்கப் படுத்திருந்தான். அவன் கைகள் செண்பகவல்லியின் விரல்களை வருடிக் கொண்டிருந்தன. "அத்தான்" என்ன ஆயிற்று! ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆகாய வெளியைப் பற்றி ஏதும் ஆய்வுகள் நடத்தப் போகிறீர்களோ? அதில் ஏதும் அற்புதங்கள் தெரிகிறதா?" என்று கேட்டாள் செண்பகவல்லி.

ஆகாயத்தைப் பார்க்கிறேனா? யார் சொன்னார்கள்? என்றவன், ஏதோ யோசனையில் இருந்து விடுபட்டவன் போல் "ஆமாம், ஆகாய வெளியைத்தான் பார்க்கிறேன். அகன்று பரந்து கிடக்கின்ற சூனியத்தைச் சொல்லவில்லை நான்" என்றான் அருள்வர்மன். அதைக் கேட்டதும் செண்பகவல்லியின் முகத்தில் ஆச்சரியக் குறியொன்று தோன்றி மறைந்தது. "புரியவில்லையே, எதைக் கூறுகிறீர்கள்?" என்றாள் செண்பகவல்லி. "புரியவில்லை? செண்பகவல்லி! சூனியத்தில் காணமுடியாத அற்புதங்கள் எல்லாம் சூரியன் உதவியால் தோன்றுபவை. அவைகள் தொட முடியாதவை. கண்களுக்கு மட்டுமே இன்பம் தருபவை. நான் காண்பதெல்லாம் அவையல்ல. நான் தொடக் கூடிய வான் வெளி நீதான் கண்ணே" என்றான் அருள்வர்மன். "எப்படியாம் இது?" செண்பகவல்லியின் கேள்வி இது.

"எப்படியா கூனல் பிறைபோன்றது உன் நெற்றி. தென்றல் வந்து மோதும் போது அலை மோதி அதைத்தழுவிக்கலைக்கின்றதே கார்குழல் அது கருமேகக் கூட்டங்கள். நீ கண்திறக்கும் போதெல்லாம் ஒளி விடும் நட்சத்திரம் நாணி விடும். நீ சிரிக்கின்ற போது உன் பல் என்னும் முத்துக்களில் இருந்து பிறக்கின்ற பேரொளி மின்னலையல்லவா நினைவுபடுத்துகிறது! அவை அமைந்திருக்கும் இடம் செவ்வானம். வானில் தோன்றுகின்ற வில்லை புருவத்துக்கு ஒப்பிடலாம். அதரங்களில் ஊறும் அமுதமோ தேன்மழை இந்த இயற்கை அழகையெல்லாம் நான் தொட்டுச் சுவைத்து காணுகின்ற சொர்க்கம் அந்தச் சொர்க்கத்துக்கு இணையாகுமா?" என்றவன் செண்பகவல்லியின் முகத்தைத் தன் இரு கைகளாலும் வாரியெடுத்து முத்தமிட்டான்.

"போதுமே! இப்படிப் புகழ்ந்து பேசியே என்னை அடிமை கொண்டு விட்டீர்கள். இவைகள் எல்லாம் உங்களுக்குப் பொழுது போக்காகிவிட்டது. புண்ணாகி விட்டது என் கன்னங்கள்." என்று முனங்கினாள் செண்பகவல்லி. "அப்படியா, போதையாகிவிட்டது உன் முறுவல்" என்றவாறு கட்டியனைத்தான் அருள்வர்மன்.

***"ஒண்ணுதற் கோஓ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும் என் பீடு"***

***(அதிகாரம் : 189 - குறள் : 1088)***

## என் மகனும் கிரிக்கெட் உலகில் வலம் வர வேண்டும்

**கிரிக்கெட்** தொடர்பாக மேலும் நிறைய கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது எனக் கூறும் கிரிக்கெட் மேதைகள் பலர் உள்ளனர் என்று சிரித்துக் கொண்டு சொல்கிறார் இலங்கை அணியின் நட்சத்திர பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன். அவர் தற்போது அழகான ஆண் குழந்தை ஒன்றிற்கு அப்பாவாகியும் இருக்கிறார். இந்த சந்தோஷத்தை அவர் தனது சொந்த ஊரான கண்டியில் கோலாகலமாக கொண்டாடினார்.



அத்துடன் 1000 விக்கெட்டுகளை வீழ்த்தி உலக சாதனை படைத்த பெருமையைக் கௌரவிக்கும் வகையில் அண்மையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விழாவில் குடும்ப சகிதம் கலந்து கொண்ட அவர், அங்கு இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தனது பிள்ளையையும் தான் கிரிக்கெட் விளையாட்டில் இணைத்துக் கொள்ள பெரும் ஆவலாக உள்ளதாகவும் தெரிவித்திருக்கிறார். கிரிக்கெட் உலகிற்கு இன்னுமொரு சின்ன




முரளிதரனா? என்று எல்லோரும் தமக்குள் கதைத்துக் கொண்டதை எம்மால் கேட்கவும் முடிந்தது.

தமிழ் யூனியன் கிரிக்கெட் மெய்வல்லுநர் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த இந்த பாராட்டு விழா பி. சரவணமுத்து பார்வையாளர் அரங்கில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் செல்வபெருமாள் தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டு விழாவின் போது முத்தையா முரளிதரன் உருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "விளையாட்டின் மூலமாக பல்வேறு சமூகங்களை, புரிந்துணர்வை கட்டியெழுப்பலாம் என்பதை நான் புரிந்து கொண்டுள்ளேன்.

## ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

கிரிக்கெட் மூலமாக இந்த புரிந்துணர்வை இலகுவில் ஏற்படுத்த எனது மகனையும் கிரிக்கெட் உலகிற்குள் இணைத்துக்கொள்வதே எனது அவா. அதற்காக மகனுக்கு நான் பயிற்றுவிப்பதோடு எனது பயிற்றுவிப்பாளர் மூலமாகவே பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளேன் என்றார் அவர்.



எது எப்படியானாலும் முரளியின் இடத்துக்கு இன்னுமொருவர் தேவைதானே...?

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 4, கூட்டெண் - 7

4, 13, 22, 31 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 7 வருமேயானால் இவர்கள் ராகு, கேது போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

ராகுவும், கேதுவும் ஒன்று சேருவதால் நல்ல அறிவும், நல்ல ஞானமும் முன்கூட்டியே எதையும் அறியும் ஆற்றலும், கடவுள் பக்தியும் கொண்டவர்களாக விளங்குவர். கலகலப்பாகப் பேசும் இவர்கள் திடீரென்று தனிமையை விரும்புவர். இந்த உலகிற்கு அப்பாற்பட்ட சிந்தனையில் சில நேரங்களில் மூழ்கி விடுவர். கனவில் சில காட்சிகளைக் கண்டு விழிப்புறுவர். இவர்களிடம் கடவுளின் அருள் இருப்பதால் வேதாந்தியாக இருப்பர். எல்லா வசதிகளையும் பெற்று வாழ்ந்தாலும், திடீரென்று எதையோ இழக்கப் போவதாக எண்ணி வருந்துவர்.

ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் வீடு, நிலம், வாகனம், கலைக்கூடம், பெரும் தொழிற் ஸ்தாபனங்கள் போன்றவற்றைப் பெற்று வாழ்வர். பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் மனம் உடைந்து வேதனையில் வாடுவர். கலைஞானம் கொண்ட இவர்கள் சங்கீதம், ஓவியம், கைத்தொழில் போன்றவற்றைக் கற்றுக் கொள்ளுவர். பார்ப்பதற்கு ஓரளவு உயரமாகவும், எப்பொழுதும் தூய்மையாகவும் காட்சியளிப்பர். சிந்தனை உலகிலே திளைப்பவராதலால் புதிய கண்டுபிடிப்பாலும், எழுத்தாலும், பேச்சாலும் உயர்வர். பெயர் பொருத்தமின்றி இருக்குமேயானால் எல்லாத் திறமையும் இருந்தும் முன்னேறாது போய்விடுவர்.

நேர்மையும், நீதியும், சொல் உறுதியும் கொண்ட இவர்கள் இந்த உலகையே பொய்யானது என்று கூறி வருந்துவர். எதையும் நிதானமாகவும் தெளிவாகவும் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றிருப்பதால் இவர்கள் மற்றவரிடம் நல்ல பெயர் எடுப்பர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால், எல்லோரிடமும் கெட்ட பெயரைச் சுமந்து கொள்ளுவர். யார் எதைக் கூறினாலும், உடனே மனதில் பதிய வைத்துக் கொள்ளும் ஆற்றல் இவர்களுக்கு இயற்கையிலேயே உண்டு.

தனக்குப் பிடிக்காத காரியத்தை யார் செய்தாலும் வெறுப்பர். இவர்களுக்குச் சிறப்பாகப் பெயர் அமைந்து விடுமேயானால் கலை உலகில் தலைசிறந்து விளங்குவர். காந்த சக்தியும் தியானத்தில் முழு ஆர்வமும் கொண்ட இவர்கள் எந்த காரியத்தையும் சாதிக்கும் வல்லமையுடையவர்கள். இவர்களுக்கு வரும் நோயை வைத்தியம் பார்க்காது வழிபாட்டாலே போக்கிவிடும் சக்தி கொண்டவர்கள். தமது கருத்துக்களைத் தெளிவாக விளக்கிக் கூறும் ஆற்றல் உடையவர்கள். யாரும் கடுமையான வார்த்தைகளைக் கூறினால் மனத்தில் வைத்துக் கொண்டே புழுங்குவர்.

மிகவும் உணர்ச்சி வயப்படக் கூடியவர்கள். ஆதலால் எதையும் முன்பின் யோசனை செய்து இறங்க வேண்டும். தன்னுடன் பழகுகின்ற நண்பர்களிடத்துப் பெருந்தன்மையாக நடந்துகொள்ளுவர். ஆனால் சிறிய விசயத்தில் கோபித்து, சிலரைப் பகைத்துக் கொள்ளுவர். கஷ்டப்படாத வாழ்க்கை, உயர வழி தேடுவர். ஆனால் பயந்து கொண்டு சில விசயங்களில் தோல்வியுறுவர்.

சிலர் குடும்ப வாழ்க்கையில்கூட அவ்வளவு நாட்டம் கொள்வதில்லை. அழகான பொருட்களை வாங்கிச் சேர்ப்பதில் ஆர்வமாக இருப்பர். சாப்பாடு, சிற்றுண்டி போன்றவற்றில் அதிக நாட்டம் உள்ளவராக இருப்பர். வசதி இருப்பவர்கள் பெருத்து விடுவார்கள். இதனால் மிதமான சாப்பாட்டை உட்கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். உடற்பயிற்சி செய்வதற்கு இவர்கள் உடம்பு ஏற்றவையே. இவர்களின் பிறந்த திகதிக்குப் பொருத்தமான பெயராக அமையுமேயானால் சிறந்த வாழ்க்கையை அடைவர்.

***தொழில்:***

கலை சம்பந்தமான அனைத்துத் தொழிலாலும், எழுத்தாலும், பேச்சாலும் முன்னேறுவர். கமிசன், ஏஜென்சீஸ், வாகனங்கள், ஆடம்பரப் பொருட்கள் போன்றவற்றாலும் பொருளீட்டும் பாக்கியம் உடையவர்கள்.

***நோய்:***

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு தலைவலி, வயிற்றுவலி, பல்வலி, முதுகுவலி போன்றவைகள் வந்து நீங்கும். உஷ்ண சம்பந்தமான அனைத்து வியாதிகளும் வந்து நீங்கும்.

***பெயர் அமைக்கும் முறை:***

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு, சூரியன், சுக்கிரன் ஆதிக்கமான 15, 24, 33, 42, 51, 60, 69; 19, 37, 46, 73 போன்ற எண்களில் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை:***

யோகமான எண் - 6, 1.
யோகமான திகதிகள் - 6, 15, 24; 1, 10, 19, 28.
யோகமான மோதிரக்கல் - கோமேதகம், வெளிர் நீலக்கல். (ஆறு நூல் உள்ள கல் மிகச் சிறப்பு)
யோகமான நிறம் - மஞ்சள், வெளிர் நீலம், வெளிர் பச்சை.
ஆகாத நிறம் - கறுப்பு, சிவப்பு, காப்பிக் கலர்.
ஆகாத திகதிகள் - 8, 17, 26; 9, 18, 27.
(8, 17, 26 எதிர்பாராத நன்மை அளிக்கும்.)

அடுத்த வாரம் பிறப்பெண் 4, கூட்டெண் 8 பற்றிப் பார்ப்போம்

## ஆர்ஜன்டீனா அணியின் பயிற்சியாளராக விரும்புகிறார் மரடோனா

**ஆர்ஜன்டீனாவின்** தேசிய கால்பந்து அணிக்கு பயிற்சியளிக்க விரும்புவதாக கால்பந்து வீரரான டிகோ மரடோனா தெரிவித்தார். ஆர்ஜன்டீனா அணியின் முன்னாள் கால்பந்து வீரரான டிகோ மரடோனா கால்பந்து அரங்கத்தில் புகழ்பெற்ற வீரராக திகழ்ந்து



மரடோனா

வருகிறார். ஆர்ஜன்டீன அணி உலக கால்பந்து சாம்பியனாவதற்கும் இரண்டு முறை அந்த அணி உலக கால்பந்து இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றதற்கும் மரடோனாவின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

பிரேசில் மற்றும் ஆர்ஜன்டீனா அணிகளின் தேசிய முன்னாள் வீரர்கள் பங்கேற்கும் நட்புறவு கால்பந்து போட்டி பிரேசில் நாட்டில் நடைபெறவுள்ளது. இதற்காக பிரேசில் சென்ற மரடோனா அங்கு ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது மேற்கண்டவாறு கூறினார். இது குறித்து ஊடகவியலாளர் மரடோனாவிடம் கேட்டபோது ஆமாம், ஆர்ஜன்டீனா அணிக்கு பயிற்சி அளிப்பது குறித்து வாய்ப்புகளை ஆலோசித்து வருகிறேன் என்று முன்னாள் சாம்பியனான மரடோனா பதிலளித்தார். ஆனால், தற்போதைய நிலையில் அது குறித்து நிச்சயமாக கூறமுடியாது. ஏனெனில் ஜோஸ் பெகர்மேன் அந்த பணியை ஆற்றி வருகிறார். எனவே உலகக் கிண்ணம் வரை அவர்தான் பயிற்சியாளராக நீடிக்க வாய்ப்புள்ளது. நான் கூறுவது எதிர்காலம் பற்றித் தான் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜெர்மனியில் நடைபெறவுள்ள உலக கிண்ண கால்பந்து போட்டியில் ஆர்ஜன்டீனா வெற்றி பெறும் பட்சத்தில் பெகர்மேன் பயிற்சியாளர் பதவியில் நீடிக்க வேண்டியநிலை ஏற்படலாம் என்றும் மரடோனா கூறினார். அதுபோன்ற ஒரு நிலை ஏற்படலாம் நான் இளைஞர் அணிக்கு பயிற்சியாளராவேன் அல்லது ஒருங்கிணைப்பாளர் பதவியை வசிக்கத்தயார் என்றும் மரடோனா குறிப்பிட்டார். ரொனால்டின்கோவையும் மரடோனா பாராட்டினார் உலகின் சிறந்த அவர் மற்ற வீரர்களைவிட அவர் விளையாடும் திறன் படைத்தவர் என்றும் தெரிவித்தார்.

மேலும் பிரேசில் அணியின் மிட்பீல்டரான ரொனால்டின்போவின் ஆட்டத்தைப் பார்த்து ரசித்துக்கொண்டே இருக்கலாம் என்றும் அவர் பந்தை கடத்தும்விதம் மிகவும் அபாரமாக உள்ளது என்றும் முன்னாள் வீரர் டிகோ மரடோனா குறிப்பிட்டார்.



## வேலைவாய்ப்பு

இளம் தொழிலாளர்கள் ஒரு தொழிற்சாலைக்குத் தேவை. நல்ல சம்பளம், தங்குமிட வசதி உண்டு. நேரில் வரவும். (ஆண்களும், பெண்களும்)

THE MANAGER
729/1, RATNAYAKE GARDENS,
MABOLE - WATTALA.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 23 | | 21 |
| 10 | | 03 |
| 1938 | | 2006 |



## அமரர் கணபதி நல்லையா

(வேலணை மேற்கு)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள், 19.04.2006 புதன்கிழமை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 17.04.2006 திங்கட்கிழமை சாட்டி வெள்ளைக் கடற்கரையிலும் நடைபெற்றது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் : பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், வேலணை மேற்கு, வேலணை - 06.

## கங்குலி விவகாரம் பற்றி சேவாக்



**முன்னாள்** கப்டன் சௌரவ் கங்குலி விவகாரத்தை அணியினர் முற்றிலும் மறந்து விட்டனர். அடுத்த ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டியைக் கவனத்தில் கொண்டுள்ளோம் என இந்திய அணியின் தற்காலிகத் தலைவர் சேவாக் கூறினார். ஜாம்ஷெட்பூரில் செவ்வாய்க்கிழமை செய்தியாளரிடம் அவர் மேலும் கூறியதாவது :

உலகக் கிண்ணப் போட்டியை அணி நிர்வாகம் மிகவும் கவனத்தில் கொண்டுள்ளது. திறமையுள்ள இளைஞர்கள் பலர் அணியில் உள்ளனர். இந்நேரத்தில் கங்குலி விடயத்தை யாரும் நினைத்துப் பார்க்கவில்லை. அது பழைய கதை என்கிறார் சேவாக்.



கங்குலி மீண்டும் அணியில் இடம்பெற வாய்ப்புண்டா என்ற கேள்விக்கு கருத்துக் கூற மறுத்த சேவாக் அது தேர்வாளர்களின் முடிவைப் பொறுத்துதான் என்றார்.

# வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற எட்வர்ட் - டி - வேர் (கி.பி. 1550 - 1604 நூற்றாண்டு)

**கலைகளைத்** துய்ப்பது, ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்விலும் ஒரு நேரடியான பங்குப் பணியாற்றுகிறது. அதாவது, ஒரு தனி மனிதன், தனது நேரத்தில் ஒரு பகுதியை நூல்களைப் படிப்பதில் செலவிடுகிறான். இசையைக் கேட்பதற்கு நாம் செலவிடும் நேரம் நமது மற்ற நடவடிக்கைகளில் எவ்விதத்



தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லையென்றாலும், அந்த நேரம் நமது வாழ்வில் முக்கியமற்ற நேரத்தின் ஒரு பகுதியே யாகும். ஆயினும், கலை நமது பிற நடவடிக்கைகளைப் பாதிக்கவே செய்கிறது. ஒரு வகையில், நமது வாழ்க்கை முழுவதையும் பாதிக்கிறது. கலை, நம்மை நமது ஆன்மாவுடன் இணைக்கிறது; நமது ஆழமான உணர்ச்சிகளை அது வெளிப்படுத்துகிறது; நமக்காக அந்த உணர்வுகளுக்கு உயிரூட்டுகிறது.

சில நேர்வுகளில், கலைப்படைப்புகள், ஏறத்தாழ வெளிப்படையான தத்துவப் பொருளை உள்ளடக்கியிருக்கின்றன. இத் தத்துவம், மற்றத் துறைகளில் நமது மனப்போக்குகளில் தாக்கம் ஏற்படுத்தலாம். இசை, ஓவியம் போன்றவற்றைவிட இலக்கியப் படைப்புக்களில் இது அடிக்கடி நிகழ்கிறது. எடுத்துக்காட்டாக, "ரோமியோ ஜூலியட்" நாடகத்தில் (அங்கம். III, காட்சி. 1) இளவரசன் வாய்வழியாக, "கொலையிற் கொடியரைக் கொல்லற்க; அவர் நாண நன்னயம் செய்திடுக" என்று ஷேக்ஸ்பியர் கூறும்போது, ஒரு தத்துவக் கோட்பாட்டை அவர் தெரிவிக்கிறார். இந்தக் கோட்பாடு, "மோனாலிசா" ஓவியத்தைப் பார்ப்பதை விட அதிக அளவில் அரசியல் மனப்போக்குகளில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

இலக்கியவாதிகள் அனைவரிலும் தலைசிறந்தவராக ஷேக்ஸ்பியர் விளங்குகிறார் என்பதை மறுப்பதற்கில்லை. சாசர், வர்ஜில், ஹோமர் ஆகியோரின் படைப்புகளை, அவை பள்ளிப் பாட நூல்களாக இருந்தால் மட்டுமே, ஒருசிலர் இன்று படிக்கின்றனர். ஆனால், ஷேக்ஸ்பியர் நாடகங்கள் இன்று நடந்தாலும், அரங்கம், நிரம்பி வழிகிறது.

ஷேக்ஸ்பியர் ஆங்கில மொழியிலேயே எழுதினார். எனினும், அவர் உலகப் புகழ் பெற்றார். ஆங்கிலம் உலகளாவிய மொழியாக இல்லாவிட்டாலும், வேறெந்த மொழியையும் விட அது ஓர் உலகளாவிய மொழியின் நிலைக்கு மிக நெருக்கமாக இருந்தது என்பதில் ஐயமில்லை. மேலும், ஷேக்ஸ்பியரின் படைப்புகள் மிகப் பெருமளவில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தன. அவை ஏராளமான நாடுகளில் படிக்கப்பட்டன. மேடைகளில் நடிக்கப்பட்டன.

## உலகை வியக்க வைத்தவர்கள்

ஷேக்ஸ்பியரின் சொல்லாட்சித் திறன் ஈடு இணையற்றது. அவரது நாடகங்களைப் பார்க்காதவர்களும், படிக்காதவர்களுங்கூட அவரது நாடகங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டுவதை அடிக்கடி காண்கிறோம். மேலும், அவரது செல்வாக்கு இன்றிருந்து நாளை மறையும் ஒரு போலிப் பகட்டு அன்று என்பது தெளிவு. அவரது படைப்புகள், நானூறாண்டுகள் வாசகர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் மகிழ்வூட்டியிருக்கின்றன. அவை ஏற்கனவே காலத்தை வென்று நிற்கின்றனர். எனவே, ஷேக்ஸ்பியரின் படைப்புகளுக்கு இன்னும் பல நூற்றாண்டுகள் செல்வாக்கு தொடர்ந்து நீடிக்கும் என்று கருதலாம்.

ஷேக்ஸ்பியரின் முக்கியத்துவத்தைக் கணிக்கும்போது, அவர் வாழ்ந்திராவிட்டால், அவரது நாடகங்கள் ஒருபோதும் எழுதப்பட்டிருக்கமாட்டா என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.(ஒவ்வொரு கலையுலக அல்லது இலக்கியப் பிரமுகர் பற்றியும் இவ்வாறு கூறலாம். ஆனால், சிறிய கலைஞர்களின் செல்வாக்கினைக் கணிப்பதில் இது முக்கியத்துவம் பெறாது).

புகழ்பெற்ற எழுத்தாளர்கள் சிலரின் படைப்புகளை இலக்கியத் திறனாய்வாளர்கள் இகழ்ந்துரைப்பதுண்டு. ஷேக்ஸ்பியருக்கு அந்த நிலைமை ஏற்படவில்லை. அவருடைய படைப்புகள், இலக்கிய அறிஞர்களால் ஒருமனதாகப் பாராட்டப் பெற்றன. பல தலைமுறை நாடகாசிரியர்கள் ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் படித்தார்கள்; ஆராய்ந்தார்கள். அவருடைய இலக்கிய மாண்புகளைத் தாங்களும் முன்மாதிரியாகக் கொள்ள முயன்றார்கள். மற்ற எழுத்தாளர்கள் மீது அவர் கொண்டிருந்த அளவற்ற செல்வாக்கும், உலகம் முழுவதும் அவருக்கிருந்த பெருஞ் செல்வாக்கும் ஒன்று சேர்ந்து, இந்த நூலில் மிக உயர்ந்த இடத்தைப் பெறுவதற்கு வில்லியம் ஷேக்ஸ்பியரைத் தகுதியுடையவராக்கியுள்ளன. எனினும், வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற பெயரில் எழுதியவர் யார் என்பது பற்றிய ஒரு வாக்குவாதம் நெடுங்காலமாகவே நிலவி வருகிறது.

ஸ்டிராட்·.போர்ட் - ஆன் - ஆவோனில் 1564இல் பிறந்து, அங்கு 1616இல் காலமான அதே வில்லியம் ஷேக்ஸ்பியர்தான் அவர்.

வியப்புக்கள் தொடரும்....

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ,

**ரெண்டாம்** கட்டப் பேச்சுக்கு இயக்கப் பெடியள் எப்புடிப் போகப் போகினம் எண்டது தானுங்கோ இப்ப பரபரப்பா இருக்குது. கட்டுநாயக்கா எயாபோர்ட் டாலை போகமாட்டம், ஏன் எண்டால் எங்களுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்குது எண்டினம். அதாலை முன்னம் ஒருக்கா ஆலோசகர் வந்து இரணைமடு குளத்துக்குள்ள இறங்கின மாதிரி தாங்கள் சீ...பிளேனாலை இரணைமடுக் குளத்தில இருந்துதான் ஜெனீவாவுக்குப் போவம் எண்டு சொல்லியிருக்கினம். உதுக்கு அரசாங்கம் இணங்கின மாதிரித் தெரியல்லை. அவை சொல்லினமாம், நாங்கள் பாதுகாப்புத் தாறம்; நீங்கள் கட்டுநாயக்கா வாலதான் போகவேணும். நாங்கள் என்ன வாகனத்தை விட்டு பாதையாலையோ உங்களைக் கொழும்புக்குக் கூட்டிக்கொண்டு வாறனாங்கள். ஹெலிக்கொப்டரில ஏத்தி அப்புடியே முட்டைப் பார்சலை இறக்குமாப் போலை கொழும்பில இறக்கித்தானே பிளேனில ஏத்தினனாங்கள் எண்டு.

அரசாங்கம் சொல்லிறதிலையும் உண்மை யிருக்கு. உந்த ரெண்டு பேரின்ர வம்புக் கதையள் ஒரு பக்கம் இருக்கட்டும் எண்டிட்டு உது சம்பந்தமாக நான் என்ன நினைக்கிறன் எண்டதைக் கொஞ்சம் பொறுமையாக் கேளுங்கோ. இயக்கம் சொல்லுதெல்லோ, பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கெண்டு, இவையளாலை நாட்டில இருக்கிற எல்லாருக்கும் அச்சுறுத்தல் இருக்குதே, அதுக்காக மக்களும், மாற்றுக் கருத்துக் கொண்டவையும் ஆளுக்கொரு சீ...பிளேன் தாங்கோ எண்டே கேட்டுக் கொண்டிருக்கினம்? அப்புடிக் கேட்டாலும் அது நடக்கிற காரியமோ. உந்த அரசாங்கத்திற்ற சீ...பிளேன் இருக்கிற மாதிரி எனக்குத் தெரியல்லை. அவ்வளவு ஏன்? உழக்கிக் கொண்டு போற புஸ் சைக்கிளையே இரவல் வாங்கிறதெண்டால், ஒரு தரத்துக்குமேல போய் தலையைச் சொறிஞ்சு கொண்டு நிக்க வேணும். அப்புடி நிண்டாலும் ஓட்டை சைக்கிளை வச்சிருக்கிறவன் கூட ஏதாவது காரணத்தைச் சொல்லி நம்மளை ஏமாத்திப் போடத்தான் பாப்பான். உதில அச்சுறுத்தல் இருக்கெண்டு நினைக்கிறவைக்கெல்லாம் ஆளுக்கொரு சீ..பிளேன் எண்டால் வாகனப் போக்குவரத்து நெரிசல் குறைஞ்சு வானத்திலையும் குளங்களிலையும் ஒரே நெரிசலும் விபத்துகளுமாக இருக்கும் எண்டது என்னுடைய ஜோக்... அதிருக்கட்டும், ஒருவேளை சீ...பிளேன் ஒழுங்கை செய்து குடுக்காட்டில் பேச்சுக்குப் போகாமல் இருந்து தங்கட பிடிவாதக் குணத்தை உலகறியச் செய்வினமோ, இல்லாட்டில் அரசாங்கம் தேவையான ஒழுங்கைச் செய்யயில்லை. அதிலையும் முதல் கட்டப் பேச்சுவார்த்தையில் இணங்கிக் கொண்ட விடயங்களை இன்னும் செய்து முடிக்கயில்லை எண்டுவினமோ எண்டு விசாரிச்சால் விவகாரம் வேறு விதமா இருக்குதுங்கோ.

இவை போன தடவை ஜெனீவாவுக்குப் போயிட்டு வரேக்கை, இவையை தரோவா செக் பண்ணிப் போட்டிச்சினமாம். அது மட்டுமில்லாமல், தாங்கள் கொண்டு வந்த பொருட்களுக்கு வரியடிச்சி, அதிலையும் டிஸ்கவுண்ட் செய்தும் முப்பத்தி அஞ்சு லகரத்துக்குக் கிட்ட குடுத்துப் போட்டுத்தான் வன்னிக்கு வந்திச்சினமாம். வரி வாங்கிறதிலையே வீண்ணாதி விண்ணன்களான இயக்கத்திற்றையே வரி வாங்கிப் போட்டினமே எண்டதாலதான், தாங்கள் நேரடியா இரணைமடுவுக்குள்ள வரவேணும் எண்டினமாம். அப்ப தானேங்கோ கொண்டு வாறதுகளை யாருக்கும் தெரியாமல் கொண்டு வரவும் முடியும். யாருக்கும் வரி கட்ட வேண்டியும் இருக்காது. உதுதான் திட்டமெண்டதைத்தான் அவை பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எண்டு புதுக்கதையை அவிழ்த்து விட்டிருக்கினமாம். இப்ப தெரிஞ்சிருக்கும் எங்கட சனத்துக்கு துவக்கைத் தூக்கிக் கொண்டு போய் சண்டை புடிக்கிறதை விடவும் கஷ்டமானது சமாதானத்தைக் காணுறதெண்டது. கோபப்படுறதை விடவும் இணங்கிப் போறதும், விட்டுக் கொடுக்கிறதும் உலக மகா கஷ்டமுங்கோ. அதாலைதான் காற்றுப் புகாத இடத்துக்கையும் எங்கட பெடியள் நுழைஞ்சு தாக்கிப் போடுவாங்கள். அவையள் விடாங்கள் எண்டெல்லாம் புகழாரம் சூட்டின சனத்தாலை, இப்ப வாய் திறந்து எங்கட பெடியள் நல்ல சமாதானப் பிரியர்கள், முடியுமான விட்டுக் கொடுப்பைச் செய்து, அவசியமான இணக்கப்பாடுகளை நிச்சயமாக் காணுவாங்கள். அவைக்கு உந்தப் புதுப்புது நிபந்தனைகள் மேலையெல்லாம் ஒரு பிடிப்புமில்லை. அவை வெட்டு ஒண்டு, துண்டு ரெண்டு எண்ட கணக்கா சமாதானத்துக்காகப் பேசுவாங்கள் எண்டு சனத்துக்குச் சொல்ல முடியாமல் இருக்குதே எண்டது தானுங்கோ என்ர கவலையெல்லாம்.

கடைசியா சிமோல் ரிக்குயிஸ்ட் டுங்கோ - அச்சுறுத்தல் இருக்கிறவைக்கெல்லாம் சீ...பிளேன் குடுக்கிறதெண்டால் எனக்கும் ஒண்டு வேணும். என்ர பேரையும் நோட் பண்ணி வச்சுக் கொள்ளுங்கோ பிளீஸ்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(20.04.2006 தொடங்கி 26.04.2006 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

மேடம் - சூரியன். மிதுனம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி - கேது. துலாம் - வியாழன். கும்பம் - வெள்ளி. மீனம் - இராகு, புதன். சந்திரன் தனு, மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்:**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் கஷ்டம், வீண் துயர், பண வரவுத் தடை, பிரயாண மிகுதி, உறவினர் உதவி, மனப் பயம் நீங்கும், குடும்ப நன்மை, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி நன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் அலைச்சல், வீண் பயம், மனக் கலக்கம், பெரியோர் பகை, எதிர்பாரா செலவு, குடும்பப் பொறுப்பு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் நிலை பங்கம், வீண் மனஸ்தாபம், அந்நியர் சகவாசம், பிரயாண மிகுதி, தேகசுகக் கஷ்டம், பணச் செலவு, குடும்ப உயர்ச்சி, உத்தியோகக் கலக்கம், பயனற்ற செயல், மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் கவலை, பணச் செலவு, பங்காளர் பகை, பெரியோர் உதவி, தூர இடப் பயணம், மனக்குறை நீங்கும், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.)
தொழில் மாற்றம், புதிய முயற்சி, பணக் கஷ்டம், அந்நியர் சகவாசம், மறைமுக எதிர்ப்பு, குடும்பக் கவலை, செலவு மிகுதி, உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் உயர்ச்சி, பண வரவு, காரியானுகூலம், பெரியோர் உதவி, வெளியிட வாழ்க்கை, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக முயற்சி, புதிய ஸ்தானம், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**இடபம் :**
(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் நன்மை, பண வரவு, மனக் குழப்பம், தேகசுகக் கஷ்டம், பெரியோர் உதவி, குடும்பச் சிக்கல், செலவு மிகுதி, உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் நன்மை, காரியானுகூலம், வெளியிடப் பயணம், செலவு மிகுதி, தேகசுகக் கஷ்டம், அந்நியர் உதவி, குடும்ப நன்மை, உத்தியோகத் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் மேன்மை, பங்களார் உதவி, உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை, குடும்பப் பயம், உத்தியோகக் கவலை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.)
தொழில் மகிழ்ச்சி, பண வரவு, உயர்ந்தோர் நட்பு, காரியானுகூலம், பயனுள்ள செயல், பிரயாண மிகுதி, குடும்பக் கலக்கம், சுப காரியத் தடை, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 02.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் நன்மை, வீண் செலவு, பங்காளர் தொல்லை, எதிர்பாரா பிரயாணம், குடும்ப மகிழ்ச்சி, பிள்ளைகளால் செலவு, உத்தியோகப் பகை, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் நன்மை, பலவிதப் பேறு, உயர்ந்தோர் நட்பு, கௌரவம், மனக்குறை நீங்கும், குடும்ப உயர்ச்சி, உறவினர் உதவி, உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மாற்றம், வெளியிடக் கல்வி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)


# இதய வீணை

தினமும்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்.... செய்திகளாய்... நமது காதுகளில்

கிழக்கு மாகாணம் 107.9, 104.6
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www.tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


## உயரப் பறப்போம்



பறவை என்றாலே உயரப் பறப்பது என்பது சொல்லாமல் தெரிந்து விடும். ஆனால் இங்கிருக்கும் பறவையோ உயர உயரப் பறப்பதில் மிகவும் கெட்டித்தனமானது. இராளி கழுகு வகையைச் சேர்ந்த இவை கிட்டத்தட்ட 11300 மீற்றர் (37000 அடி) பறக்கக் கூடியதாகும். உயரப் பறப்பதனால் 1973ஆம் ஆண்டு பறந்து கொண்டிருந்த அமெரிக்காவுக்குச் சொந்தமான பயணிகள் விமானத்தில் மோதி விமானத்தின் எஞ்சின் மூடியை சேதப்படுத்தியதால் விமானம் உடனடியாக தரையிறக்கப்பட்டதும் இதனால்தான். ஆயினும் இப் பறவைகள் தற்போது அருகிவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## விலை அதிகம்



இரத்தினங்கள், விலைமதிக்க முடியாத நகைகள் என்பன அதிக விலைக்கு விற்கப்படுவதில் ஆச்சரியமில்லை. ஆயினும் இங்குள்ள தென்னம் வண்டு 1999ஆம் ஆண்டு 10,035,000 யென் (90000 அமெரிக்க டொலர்கள்) விற்கப் பட்டதும் 80 மில்லி மீற்றர் அளவுடைய இவ்வண்டை தனிநபர் ஒருவரின் பொழுதுபோக்கு தொகுப்புக்காக வாங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## இளம் வயதிலேயே...



தற்போது உள்ள சிறுவர் சிறுமியர்களுக்கு இளம் வயதிலேயே பல பெரிய பெரிய நோய்கள் வந்துவிடுகின்றன. அதுபோலவே இங்குள்ள சிறுவனுக்கும் சிறுவயதிலிருந்தே பல்முளைக்கவில்லையாம். இதனால் கவலையடைந்த பெற்றோர் வைத்தியரிடம் சிகிச்சைக்குச் சென்ற போது இச் சிறுவனின் பல்ஈறுகளில் வலிமை இல்லை என்று கண்டுபிடித்தனர். இதனால் இச்சிறுவனுக்கு முழுமையாக பல்வரிசை பொருத்தப்பட்டதாம். இவன் வளர வளர பல்வரிசையையும் மாற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆக 4 வயது பூர்த்தியாகும் இவனுக்கு பல்வரிசை பொருத்தியது உலக சாதனைக்குரிய விடயமாகவும் கருதப்படுகிறது.

## மிகக் குட்டை



மிகக் குட்டையானவர்கள் பற்றி இப்பகுதியில் அநேகமான செய்திகளை வெளியிட்டிருக்கிறோம். இங்குள்ள பெண்மணி அந்த வகையைச் சேர்ந்தவரே. ஆயினும் இவர் தென்னாபிரிக்காவைப் பிறப்பிடமாக கொண்ட இவர், ஆக 65 செ.மீ. தான் உயரமாம். இவருடைய அம்மா 70 செ.மீ. உயரம் உடைய வராம்.

## நீ.. ள.. ம்..



படத்தில் என்ன ஒரு மூங்கில் குச்சி போல் ஏதோ ஒன்று இருக்கிறதா? இல்லவேயில்லை. இது உலகில் மிக நீளமான பூச்சி ஆகும். இப் பூச்சி லண்டன் நூதனசாலையில் இருக்கிறது. இது கிட்டத்தட்ட 328மி.மீ.நீளமுடையதாம். அத்துடன் இதன் கால்கள் 546 மி.மீ.நீளமுடையதாம். இதன் இவ்வளவு பெரிய கால்கள் இரைகளை வேட்டையாட பயன்படுமாம். அத்துடன் எதிரிகளிடம் இருந்து தப்புவதற்கும் இதன்கால்கள் இதற்கு பெரிதும் உதவுமாம்.


## குத்திக் கொள்வோமா?



என்ன இது வேண்டுதலோ என்றா பார்க்கிறீர்கள். இது ஒரு உலக சாதனைக்காக செய்யப்பட்டது. 1997ஆம் ஆண்டு தென்னாபிக்க நாட்டு பழங்குடியினத்தைச் சேர்ந்த இப் பெண்மணி ஏதேச்சையாக இவ்வளவு ஊசிகளை உடம்பில் குத்தியும் போதாக்குறைக்கு நாக்கினை ஓட்டையாக்கி அதனுள் தன் கைவிரல் ஒன்றையும் விட்டுக் கொண்டு உலக சாதனை ஒன்றை நிலைநாட்டியிருந்தார். இலங்கையில் கூட சில இளைஞர் யுவதிகள் இப்படி ஊசிகள் குத்திக் கொண்டு திரிகிறார்களே!

## முதல் விண்வெளி ஓடம்

**தொலைத்** தொடர்புக்காக முதலில் உருவாக்கப்பட்ட செய்மதிகள் தற்போது நாச வேலைகளுக்கும், உளவுபார்த்தலுக்கும் பயன்பட்டு வருகின்றன. இங்குள்ளது முதன் முதலில் அதாவது 1962 ஆம் ஆண்டு பாவிக்கப்பட்ட தொலைத்தொடர்பு செய்மதியாகும். இதன் விட்டம் ஆக 30 மீ. இது முதலில் பலூன் வடிவிலேயே உருவாக்கப்பட்டதாம். இதன் மேற்பரப்பில் தொலைத்தொடர்பு அலைகள் பட்டுத் தெறிப்பதனாலேயே தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டனவாம் அப்பொழுது.



## 1ஆவது பிறந்த நாள் வாழ்த்து



ஆர்த்திக் / 17.01.2006

-திருமதி.முத்து பராசத்தி, கோப்பாய்.

லண்டனில் வசிக்கும் புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த மதியழகன் - வனிதாதேவி (புனிதா) தம்பதியரின் ஏகப்புதல்வன் ஆர்த்திக் தனது முதலாவது பிறந்த தினத்தை இலண்டனில் உள்ள MITCHAM, ST BARNABAS CHURCH HALL, இல் 17.02.2006 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, திருகோணமலையில் இருக்கும் ராணிப்பெரியம்மா குடும்பம், சவுந்தலா பெரியம்மா குடும்பம், சரசு அம்மம்மா குடும்பம், பிரான்ஸிலிருக்கும் குகன் மாமா குடும்பம், கண்ணன் மாமா குடும்பம், திலகன் மாமா குடும்பம், மனோ பெரியப்பா குடும்பம், ஜேர்மனியில் இருக்கும் அப்பம்மா மற்றும் மகேஸ்வரன் பெரியப்பா குடும்பம், உருத்திரன் பெரியப்பா, சிறீதரன் பெரியப்பா குடும்பம், கலா அத்தை குடும்பம், கனடாவில் இருக்கும் பவா பெரியம்மா குடும்பம், இலண்டனில் இருக்கும் மஞ்சுளா அத்தை குடும்பம், ஜப்பானில் இருக்கும் திருக்குமரன் பெரியப்பா குடும்பம், சுவிஸில் இருக்கும் மங்களேஸ் (ராசா) பெரியப்பா குடும்பம் மற்றும் அக்காமார்கள், அண்ணாமார்கள், தம்பிமார்கள், தங்கைமார்கள் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தினார்கள்.